கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(03.09.2017 - 03 புரட்டாதி 2017 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 08, கதிர் - 167, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /129 / NEWS / 2017

# ஞான ஒளி

ඥාන ඕලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05



தேசிய இளையோர் ஞாயிறு

புரட்டாதி 03

**திருத்தூது பணியாற்றும், பங்குத் தளங்கள் நம்பிக்கையை, அன்பை வெளிப்படுத்தும் இடங்களாக விளங்க இம்மாதம் முழுவதும் செபிப்போம்.**

**திருத்தந்தையின் இம்மாதக் கருத்துக்காக செபிப்போம்**





# “கருக்கலைப்பு சட்ட அமுலாக்கத்தை அகற்றிவிடுங்கள்”

## நோயாளர்களை ஆசீர்வதிக்கும் விசேட வழிபாட்டில் கர்தினால் ஆண்டகை தெரிவிப்பு

“கருக்கலைப்பானது வார்த்தையால் விவரிக்க முடியாத மிகக் கொடூரமான ஓர் அநியாயமாக இருப்பதோடு, மிலேச்சத்தனம் மற்றும் ஒழுங்கீனமான செயலாகவும் அமைந்துள்ளது. கருக்கலைப்பு என்னும் பெயரில் நடைபெறும் இக்கொலையை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. இதற்கு உறுதுணையாக இருக்கும் பெற்றோர் மட்டும் அல்ல, இதற்கு உதவி செய்யும் வைத்தியர்கள், தாதியர்கள், இதற்கான சட்டங்களை அமுலாக்கும் அரசியல்வாதிகள், இதற்கு அனுசரணை வழங்கும் ஊடகங்கள், அதற்கு உறுதுணையாக இருக்கும் ஏனைய மக்கள் அமைப்புகள் மட்டும் அல்ல, இப்பாவத்தில் இருந்து மக்களை மீட்பதற்கு தேவையான செயற்பாடுகளை செய்யாதிருக்கும் ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவருமே இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்” என்று கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் றாகமை தேவத்தை, இலங்கை அன்னை தேசிய திருத்தலத்தில் 76வது முறையாக நடைபெற்ற நோயாளர்களை ஆசீர்வதிக்கும் விசேட வழிபாட்டில் மறையுரையாற்றியபோது இவ்வாறு தெரிவித்தார்...

05ம் பக்கம்

## இலங்கை கத்தோலிக்க ஆயர்களின் மாநாடு



# எக்காரணத்துக்காகவும் கருக்கலைப்பு தடை

தமது பேரவைக்கூட்டத்திற்காக ஒன்றிணைந்து கொண்ட இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டில், கருக்கலைப்பு சட்டபூர்வமாக்கல் பற்றி அமைச்சரவை எடுத்த தீர்மானம், பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பது பற்றிய விடயம், அவர்களது ஆழமான கவனத்தை ஈர்த்தது. எக்காரணத்திற்காகவும் கருக்கலைப்பு சட்டபூர்வமாக்கலை மாநாடு கடுமையாக கண்டித்தது. ஒருவரின் உயிர் வாழ்வு அவரது கருத்தரிக்கும் நிமிடத்திலிருந்து ஆரம்பமாகிறது என்பது கத்தோலிக்க திருச்சபையின் நம்பிக்கையாகும். அது ஒரு புனிதமான செயற்பாடு எந்த விதிவிலக்குக்காகவும் மனித உயிருக்கு எதிராக தலையிட்டு மோசடி செய்ய எவருக்கும் உரிமை கிடையாது. எக்காரணத்துக்காகவும் நீதி நியாயத்தை விட்டுக் கொடுக்க முடியாது, மிக குறிப்பாக இன்னும் பிறவாத குழந்தையின் உயிரைப் பாதுகாக்கும் அவர்களது உரிமை மட்டில் நீதி காக்கப்பட வேண்டும். ஓர் உரிமையைக் பாதுகாப்பதற்காக இன்னுமோர் உரிமையை அவமதித்து அதனை மீறிவிட முடியாது.

மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS,
தலைவர், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

மேதகு ஆயர் டி. வலன்ஸ் மெண்டிஸ், பிரதம
செயலாளர், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

# பிரியாவிடையும் வரவேற்பும்



கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் புதிய இயக்குனராக அருட்பணி. கலாநிதி. கமிலஸ் பர்னாந்து அடிகளார் 22.08.2017 அன்று பொறுப்பேற்றுக்...

15ம் பக்கம்

## வெள்ளிவிழாக் கண்ட கொழும்பு அருட்பணியாளர்களின் திருப்பலி நிகழ்வு



21.08.2017 திங்கட்கிழமை அன்று கொழும்பு பேராயர் இல்லத்திலுள்ள திரு இருதயநாதர் சிற்றாலயத்தில் குருத்துவ வெள்ளிவிழா நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்கள்....

15ம் பக்கம்

## குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழா நாயகர்

**அருட்பணி. நெவில் ஜோ பெரேரா**

04.09.2017



அடிகளார் தமது குருத்துவ வாழ்வின் 25வது ஆண்டு நிறைவைக் காண்கிறார். இவரை ஞானஒளி செபத்தின் ஊடாக வாழ்த்துகின்றது.

## பேராயர் செக்கடித்தெரு பங்கு தரிசிப்பு



அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை இக்காலகட்டத்தில் கொழும்பு நகரிலுள்ள பங்குகளை தரிசித்து வருகிறார். அதன்படி செக்கடித் தெரு பங்கை ஆவணி மாதம் 19ம், 20ம் திகதிகளில் தரிசித்தார்....

15ம் பக்கம்

**ஆண்டவரில் நான் பெருமகிழ்ச்சி அடைவேன் (திபா 13)**

# மருத்துவர்கள் வேலை நிறுத்த செயற்பாட்டில் ஈடுபடுவது ஒரு நெறிமுறையான செயலாகுமா?

தாம், ஒழுக்க முறைமைக்கேற்ப தம் பணியில் ஈடுபடுவோம் என ஆணையிட்டு வாக்குறுதி கொடுத்த அவர்களது உறுதிமொழி ஓர் போலியான ஒன்றாக கருதப்பட, இவ்வாறான செயற்பாடு காரணமாகிவிடும் அவர்களது இந்த உறுதிமொழி மூலம் மனிதபிமானம் நிறைந்த ஓர் பணியாக அவர்களது சேவை கணிக்கப்படுகிறது. இவ்வாறு வாக்குறுதி எடுக்கும் ஒவ்வொரு நபரும் அர்ப்பணம் நிறைந்த சேவையாளர்களாக அவர்களது உதவி நாடும் நோயாளிகளின் நலன்கருதி செயல்படுவதே அவர்களது முதன்மை நோக்கமாக விளங்க வேண்டும்.

நோயாளர்களின் ஆதங்கங்களை புரிந்து ஏற்று சுகநலத்தோடு வாழ அவர்களது உரிமையை மதித்து ஏற்றுக்கொள்ள வேண்டியது அவர்களது பாரிய பொறுப்பாக இருக்குமிடத்து வேலைநிறுத்தம் ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றாக இருக்கமுடியாது. வைத்தியர்களது வேலை நிறுத்தம் செய்யும் உரிமை, அவர்களை நம்பி அவர்களது சேவை நாடும் நோயாளர்களின் அடிப்படை உரிமையை, அவர்களது உயிரையே பணயம் வைக்கும் அளவுக்கு இட்டுச் செல்லும் செயற்பாடாக அமையும். நோயாளிகளின் நலனே வைத்திய பணியின் அடிப்படைக் குறிக்கோளாகும்.

வைத்திய பணி ஒரு தொழிலல்ல, மாறாக, அது ஓர் அர்ப்பண சேவைக்கான ஓர் விசேட அழைப்பு. நோயாளர்களது உடல்நலம் பேணுவது, நோய்களை தடைசெய்வது, குணமளிப்பது மட்டும் வைத்தியர்களின் பொறுப்புக்கள் அல்ல, மேலும் அவர்களை அக்கறையோடு பாதுகாத்து பராமரிப்பதும் அவர்களது கடமையாகும். எனவே அவர்களை தேடிவரும் நோயாளர்களுக்கு இரக்கம் காட்டாது சிகிச்சை கொடுக்க மறுப்பது அவர்களது அழைப்புக்கேற்ற செயலாகாது.

வேலை நிறுத்த செயற்பாட்டில் இறங்கும் வைத்தியர்கள் நியாயப்படுத்தக் கூடிய நோக்கங்களை முன்வைக்குமிடத்து, அவை நோயாளர்களின் நன்மை பயக்கும் விளைவுகளை கொணரக்கூடியதாக இருக்கவேண்டும். எனினும் அவை இதே அடைவு மட்டத்தை அடையக்கூடிய அனைத்து வழிமுறைகளையும் பயன்படுத்தி செயற்படுத்தியிருக்கவேண்டும்.

எவ்வாறாயினும் அவர்களது இவ்வாறான செயற்பாடு அவர்கள் தயவை நம்பி வாழும் நோயாளிகளை ஆபத்தான நிலைக்கு இட்டுச் செல்லுமா? வைத்தியர்கள் மனித உயிருக்கு பாதகம் விளைவிக்காது, தமது உரிமைக்காக போராடக் கூடுமா? என்னும் கேள்விகளுக்கு பதில் இறுக்க வேண்டியுள்ளது.

வேலை நிறுத்தத்தில் இறங்கும் எவரும் தமது குறிக்கோள்கள் நியாயமானது என்றே கூறுவார்கள். நாம் நமது அறிவுசார் திறனாற்றலையும், மக்கள் நம்மேல் வைத்திருக்கும் மரியாதை, கௌரவம் என்பவற்றையும் கருத்திற் கொண்டு நமது கோரிக்கைகளை நமதாக்கிக் கொள்ள, சுலபமான முறையாகிய வேலை நிறுத்தத்தில் இறங்காது, பேச்சுவார்த்தை வழி முறைமூலம் கலந்தாலோசித்து பயன்பெற முயற்சிப்போம்.

நம்மை வைத்தியர்களாக செயலாற்ற துணை நின்ற இறைவனாம் நம் தந்தைக்கு நன்றியுள்ளவர்களாக வாழுவோம். அவர், நம்மை வைத்தியர்களாக அருள் பாலித்தது, நமது மக்களை அவல நிலைக்கு உட்படுத்தாது, அவர்களை பராமரிக்கவே. மேற்கூறியது போல நமது பணி ஓர் தொழிலல்ல. மாறாக ஓர் அழைப்பு. இவ் அழைப்பைப் தமதாக்கிக் கொள்ள பலர் ஆசித்தபோதும் ஒரு சிலரே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

எனவே இலங்கை சார் கத்தோலிக்க வைத்திய கூட்டுக்குழு அனைத்து வைத்தியர்களிடமும் விடுக்கும் வேண்டுகோள் நாம் அனைவரும் ஏது காரணத்துக்காகவும் வேலை நிறுத்தத்தை தவிர்த்துக் கொள்வோம்.

**தகவல் : வைத்தியர். மெக்ஸி பர்னாந்து**

## அறிவித்தல்

கத்தோலிக்க தகவல் ஏடு (Almanac)
04.09.2017 திங்கட்கிழமை முதல்
கொழும்பு கத்தோலிக்க புத்தகசாலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
ஒன்றின் விலை 150 /-

**கொழும்பு கத்தோலிக்க அச்சகம்.**

# இத்தாலியப் பணிவாழ்வில் பிரசுரிக்கப்படாத கதையின் ஓர் துளி....







இத்தாலியில், புலம் பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் தொடர்பான தேசிய ஒருங்கிணைப்பாளராக பணியாற்றும் அருட்தந்தை. நெவில் ஜோ அடிகளாரின் குருத்துவ திருநிலைப்படுத்தலின் 25ஆம் ஆண்டு நிறைவின் வெள்ளி விழாவை புரட்டாதி 04ம் திகதி கொண்டாடும் இவ்வேளையில், அடிகளார் கடந்து வந்த பாதையை மீண்டும் திரும்பிப் பார்ப்பது மிகவும் உசிதமானது என நான் எண்ணுகின்றேன். கடந்த 10 வருடங்களாக இத்தாலியில் புலம் பெயர்ந்து வாழும் கத்தோலிக்கரின் சுதந்திர ஊடகமான "சதஹம் தெக்ம" என்னும் மாதாந்த சிங்கள பத்திரிகையின் வடிவமைப்பு தொடர்பான இணைப்பாளராக பணியாற்றுதவதன் வழியாக அருட்தந்தையோடு இணைந்து பணியாற்றக்கூடிய சந்தர்ப்பம் எனக்கும் கிட்டியது.

"ஆண்டவர் நம் சார்பாக இருந்திராவிடில்........ கொந்தளிக்கும் வெள்ளம் நம்மீது பாய்ந்தோடியிருக்கும்" என்று திருப்பாடல் 124ல் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல், அருட்தந்தை நெவில் ஜோ பெரேரா அடிகளாரின் இறை அழைத்தல், பலவிதமான சவால்களுக்கு மத்தியிலும், நாணலைப்போல், அங்கும் இங்குமாக சாய்ந்துகொண்டிருந்த காலத்திலும் அந்த அனைத்து சவால்களிலும் ஆழமான இறைவிசுவாசத்தில் நிலைத்திருந்து அதனை வெற்றிகொண்டார் என்பதையே இவ் இறைவசனங்கள் எமக்கு எடுத்துரைப்பதாய் உள்ளது.

"ஆண்டவரின் திருக்கரங்களின் வலிமையை நான் அன்று நன்கு உணர்ந்தேன். முன்னைய நாட்களை விட தற்போது, நான் கடந்து வந்த காலத்தை திரும்பிப் பார்க்கும்போது அக் கரங்களின் வலிமையை நான் இன்னும் அதிகமாக உணர்கின்றேன். குறிப்பாக பலவீனமான என்னை, நம் தந்தையான இறைவன் அனைத்து சவால்களுக்கும் மத்தியிலும், எனது கரங்களை மிக இறுக்கமாக பற்றிக்கொண்டு அந்தப் பாதையில் என்னை மிக சீராக வழிநடத்தி வந்துள்ளார்" என்று தந்தை அவர்கள் என்னிடம் தெரிவித்தார்.

அடிகளார் கடந்து வந்த பணிவாழ்வை மீண்டும் திரும்பிப் பார்க்கையில், குருத்துவ வாழ்வின் வெள்ளி விழா கொண்டாடும் 25 ஆண்டுகளும், அதற்கு முன் பணியாற்றிய ஒன்பது ஆண்டுகளும் சேர்த்து மொத்தமாக 34 ஆண்டுகள் இத்தாலியிலே பணிபுரிந்துள்ளார் என்பது சிறப்பான விடயமாக அமைந்துள்ளதோடு, அடிகளாரின் இந்த "இத்தாலிப் பணியானது வெளியிடப்படாத புத்தகம்" என்ற எண்ணத்தையே என்னில் உருவாக்கியது.

அருட்தந்தை அவர்கள் என்னிடம் உரையாடுகையில் "அன்று நான் ஒரு அகதியாக இத்தாலிக்கு சென்ற நேரம் தொடக்கமே ஆண்டவர் என் கரங்களைப் பற்றி வழிநடத்திச் சென்றார்" என்று கூறியதோடு, அன்றை காலகடத்தில் திருப்பாலர் சபையின் இயக்குனராக பணியாற்றிய குருவாக இருந்து இன்றைய எமது பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் தனக்கு அளித்த ஒத்துழைப்புக் குறித்தும் நன்றியுணர்வோடு நினைவு கூர்ந்தார்.

அடிகளாரின் 25 வருட கால பணிவாழ்வை மீண்டும் பார்க்கும்போது இந்நாட்டிற்கும், நாட்டு மக்களும் விசேடவிதமாக கத்தோலிக்க திருச்சபைக்கும் ஆற்றிய பணிகளை ஒருசிலர் மறந்திருக்கக் கூடும். ஆயினும் அன்று அகதியாக இத்தாலி நாட்டிற்குள் சென்று தான் பட்ட கஷ்ட துன்பங்கள், முகம் கொடுத்த பிரச்சினைகளின் வழியாக தான் பெற்றிருந்த அனுபவத்தினால் புத்துயிர் பெற்றிருந்த அடிகளார், குருவாக இருந்து சட்ட விரோதமாக இத்தாலிக்கு சென்றிருந்தவர்களுக்கு உதவ பேரிரக்கத்தோடு தன் கரங்களை நீட்டினார். அவர்களை அந் நாட்டின் சட்டத்திட்டங்களில் இருந்து காப்பாற்றி அவர்களுக்கு தேவையான இருப்பிடமும், உணவு, பானம் ஆகியவற்றை பெற்றுக்கொடுத்தார் என்பது பலரும் அறியாத விடயமாகும். அடிகளார் ஆற்றிய இவ்வாறான சேவைகளினால் உதவி பெற்றவர்கள் கூட தற்போது தமது பெருந்தன்மையை காப்பாற்றிக்கொள்வதற்காக அது பற்றி வெளியிடமாட்டார்கள்.

அன்று இத்தாலி நாடெங்கும் இருந்த இலங்கை மக்களின் பிரச்சினைகளை, திருத்தந்தையினதும், திருச்சபையின் தலைவர்களினதும் கவனத்திற்கு கொண்டுசென்று, இலங்கைக் குருக்களை அந்நாட்டுக்கு வரவழைத்து வந்து பணியாற்ற சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுக்க அருட்தந்தை அவர்களே முன்னின்று செயற்பட்டுள்ளார். இத்தாலியில் இலங்கை குருக்கள் ஆற்றிய அளப்பரிய சேவையின் நிமித்தமாக இப்போது முப்பதுக்கும் அதிகமான குருக்கள் அங்கு பணிபுரிகின்றனர். இத்தாலியின் கத்தோலிக்க ஆயர் பேரவையின் அனுசரணையுடன் அங்கு பணியாற்றும் குருக்களுக்கு புலமைப்பரிசில்,...

XXம் பக்கம்





பரதகுல பாதுகாவலியான பனிமய அன்னையின் 79வது வருடாந்த திருவிழா ஆவணி மாதம் 20ம் திகதி யாழ் மறைமாவட்ட ஆயர். கலாநிதி. ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் புனித பிலிப் நேரியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து கொண்டாடப்பட்டது. அன்றைய திருப்பலியில் இடம்பெற்ற நிகழ்வுகளை படத்தில் காணலாம்.

**படங்கள் மற்றும் தகவல் : பெர்னாண்டோ**

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
03 புரட்டாதி, 2017 ஞாயிற்றுக்கிழமை.

## ஒவ்வொரு மனித உயிரும் இறைவன் முன்னிலையில் விலைமதிப்பற்றதாகும்.

பரிசுத்த திருச்சபையானது தூய அன்னை மரியாவின் பிறந்த தினத்தை இம்மாதம் 8ம் திகதி சிறப்பிக்கவுள்ளது. ஒவ்வொரு மனித உயிரும் இறைவன் முன்னிலையில் விலைமதிப்பற்றதாகும். அந்த வகையில்தான் அன்னையின் பிறப்பும் அமைந்திருந்தது. கீழைத் திருச்சபையில் 5ம் நூற்றாண்டில் எருசலேமில் கொண்டாடப்பட்ட அன்னையின் பிறந்த தினமானது 7ம் நூற்றாண்டில் உரோமையிலும் அறிமுகம் செய்யப்பட்டது. கீழைத் திருச்சபை தமது திருமறை ஆண்டினைச் புரட்டாதி திங்கள் தொடங்குவதால் மரியாவின் பிறந்த தினத்தையும் இம்மாதம் கொண்டாடி வருகின்றது. அன்னம்மாளின் வயிற்றில் மார்கழித் திங்கள் 8ம் நாள் உருவான மரியாள் புரட்டாதித் திங்கள் 8ம் நாள் மீட்பின் விடிவெள்ளியாக பிறந்தார். சிறுவயது முதல் இறைபக்தி, செபவாழ்வு, ஏழ்மை என்று தன்னையே இறைவனுக்கு அர்ப்பணித்து வாழ்ந்ததினால் இயேசுவின் தாயாகும் பாக்கியம் பெற்றார். இயேசுவின் அன்னையாக அழைக்கப்பெற்ற நாசரேத்தின் எளிய பெண் கிறிஸ்தவ வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கத்தைப்போன்று வேறு எந்தப் பெண்ணும் இதுவரையில் ஏற்படுத்தியதில்லை என்பதுதான் உறுதி. தொடர்ந்தும் அன்னை மரியாள் இன்றுவரையில் செல்வாக்குச் செலுத்தி வருகிறார் என்பது நாமனைவரும் அறிந்த உண்மையாகும்.

அன்று சிலுவையடியில் இயேசு அன்னை மரியாவை "இதோ உன் தாய்" என்று யோவானிடம் காட்டி உலகிற்கு கொடையாகத் தந்தார். இன்று அனைத்து குடும்பங்களின் குடும்பத்தலைவியாக அன்னை மரியாள் திகழ்ந்து வருகிறார். "இதோ ஆண்டவரின் அடிமை உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்" (லூக் 1:38) என்ற ஒரே வார்த்தையில் இறைத்திருவுளத்திற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். இதன் நிமித்தம் பல துன்ப துயரங்களையும் வியாகுலங்களையும் தனது வாழ்வில் சந்தித்தார். ஆண்டவரும் அவரோடு உடனிருந்தார். இதே அன்னை இன்றும் எமது வாழ்விலும் எமக்காக இறைமகன் இயேசுவிடம் பரிந்து பேசி வருகிறார், எம்மை நல்வழிப்படுத்துகின்றார் எமது தேவைகளை சந்திக்கிறார் என்பதை பலவேளைகளில் நாம் மறந்து வாழ்கின்றோம். அன்புமிக்க நற்பண்புமிக்க நல்லன்னையை வாழ்த்தி வணங்கி சிறப்பிப்பது அன்னைக்கு நாம் செலுத்தும் நன்றியாகும்.

அன்னை வாழும் இல்லமே எமக்கெல்லாம் பெரிய வீடு. அன்னையின் நிழலின்கீழ் வாழ்வதே எமக்கு சுவர்க்கம். எமக்காகவே வாழ்ந்த, வாழ்கின்ற அன்னையை எமது வீட்டில் வாழச் செய்வோம். உண்மைகள் ஊமையாகி பொய்யாக்கபடும்போதும், நீதி மறுக்கப்படும்போதும், அமைதி குலைக்கப்படுபோதும் மீண்டும் சிலுவையில் இயேசுவை அறையாது, அன்னை மரியை கண்ணீர் விடச்செய்யாது நற்பண்பு கொண்டவர்களாக அன்னையைப் போன்று எளிமை வாழ்வு வாழ்ந்து இறைவனின் உடனிருப்பை உணர்வோம்.

இறையாசீருடன்
ஆசிரியர்

# அன்னை மரியா என்ற திருநாமம்



இந்நாள் முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுடையாள், எனப் போற்றுமே என்ற மரியன்னையின் பாடல் வரிகள் மீட்பின் வரலாற்றில் உலக மீட்பரின் அன்னைக்கு உள்ள சிறப்பான பங்களிப்பை சுட்டிக் காட்டுகின்றது. புதிய ஏற்பாடு எடுத்தியம்பும், அன்னை மரியா தமது தாழ்ச்சி, மற்றும் இறைவார்த்தைக்கு கீழ்ப்படியும், பாங்கின் மூலமாக வரலாற்றில் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும், முன்மாதிரியாக விளங்குகின்றார்.

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் கூறுவதுபோல் "கிறிஸ்துவைப் பற்றிய உண்மைகளை, திருச்சபையைப் பற்றிய உண்மைகளை, மானிடத்தைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்துக் கொள்ள வேண்டுமானால், நாம் மரியன்னையிடம் செல்ல வேண்டும்.

### விவிலிய வரலாற்று ஊற்றுக்களில் மரியன்னை

மரியன்னையைப் பற்றிய வரலாற்று இறையியல் செய்திகளை விவிலியத் திருமறையான பழைய, புதிய நூல்களில் மட்டுமல்லாமல் இத்திருமறையைச் சார்ந்த யூத கிறிஸ்தவ மரபு ஊற்றுக்களின் மூலமாகவும் அறிந்து கொள்ள முடிகிறது.

### மரியாள் என்னும் திருப்பெயர்

புதிய ஏற்பாட்டில் நாம் காணும் "மரியா" என்ற அரமேயக் மொழியிலான பெயரானது "மரியம்" என்ற அரமேயிக் மொழியிலான சுருக்கமாகும். இதே பெயர் எபிரேய மொழியில் "மீரியம்" என அழைக்கப்படுகிறது.

மரியம், அல்லது மரியா என்ற பெயரின் அர்த்தங்களை ஆராயும்போது அதில் மிளிரும் அழகையும் மேன்மையையும் தெய்வீகத்தையும் நம்மால் கண்டுணர முடிகிறது. இறைவன் தாமே அன்னையின் மேன்மையை விளங்கும் வண்ணம் இத்திருப்பெயரைச் சூட்டி அழகு செய்தார். என்றே சொல்லலாம். பழைய ஏற்பாட்டில் மோசேயின் தங்கையின் பெயர் மரியம். மரியம் எவ்வாறு மோசே என்கிற பெயர் எகிப்திய மொழி வழியில் வருகின்றதோ அவ்வாறே "மரியம்" என்ற பெயரும் சார்ந்து நிற்பது இயல்பு. "மரியம்" என்ற பெயரானது "அன்பானவள்" எனப் பொருள்படும். மெரிட்" என்ற சொல்லிருந்து வருவதாக அருட்திரு கில்லொயர் என்ற அறிஞர் கூறுகிறார். "மீரியம்" என்ற எபிரேயச் சொல் சக்தி வாய்ந்தவர்" எனப் பொருள்படும்.

மேலும் "மெரிட்" என்ற பெயர் "விண்ணகம் செல்லும் ரதம் (Chariot to Heaven) எனப் பொருள்படுவதாக பலர் கருதுகிறார்கள். கணக்கிட்டு "பரிமளக்கடல்" எனப் பொருள் கொண்டனர். 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித ஜெரோம், எபிரேய, கிரேக்க லத்தீன் மொழியில் விவிலியத்தை மொழி பெயர்த்தார். இவர் மிரியம் என்ற பெயரை 'Stella Mrais" என அழைத்தார். "மரியா" என்ற இத்திருப்பெயரை எகிப்திய எபிரேய பெயர்களின் சேர்க்கையாகக் கொண்டால் "யாவேயின் அன்புக்குரியவர். என அழைக்கலாம்.

மரியன்னையின் பெயருக்கு இத்தனை அர்த்தங்களா? வியக்கத் தோன்றுகிறதா? இத்தனை அர்த்தங்களே மரியன்யின் மேன்மையை அவரைப் பற்றிய இறையியலை தெள்ளத் தெளிவாக்குகின்றது.

**''மரியன்னையின் திருப்பெயர் தேனை விட இனிதானது. அருமையான இசையை விட மேலானது"**

என்ற புனித பதுவை அந்தோனியார் கூற்று முற்றிலும் உண்மையானதே.

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# இதோ உன் தாய்

## மரியன்னையின் பிறந்த தினம்
## புரட்டாதி - 08



மற்ற விண்மீன்களை விட விடிவெள்ளி ஒளிமிக்க கதிரொளி வீசி இருளின் நடுவே அதிகாலையில் தோன்றுகிறது. விடிவெள்ளிப் போன்றே மரியா ஓர் ஒளியாகத் தோன்றி நீதியின் கதிரவன் (மலா 4:2) இறைமகன் இயேசு பாவ இருள் சூழ்ந்த மனிதக் குலத்தில் தோன்றப் போவதை அறிவிக்கிறார்.

ஆகையால் தான் குறித்த காலத்தில் விடிவெள்ளியைக் கொணர்வாயோ? (யோபு 38:2) என மனித குலம் ஏங்குகிறது. இறை இரக்கத்தின் தருணம் வந்தபோது இறைவனின் இல்லத்தைக் கட்டியெழுப்ப நேரம் வந்தபோது, மீட்பின் நேரம் வந்தபோது காலம் நிறைவுற்றபோது இறைவன் மரியா என்ற விடிவெள்ளியை உலக மக்களுக்கு ஒளியாகக் கொண்டு வந்தார். மரியாவின் பெற்றோர் சுவர்க்கீன் - அன்னம்மாள் நேர்மையாளர்கள். இறை பக்தி நிறைந்தவர்கள் தங்கள் வருவாயை மூன்று சமப் பங்குகளாகப் பிரித்து கோவிலுக்கும் தருமத்திற்கும், குடும்பத்திற்கும் செலவிட்டனர். சுவர்க்கீன் தாவீது அரசகுல வழித்தோன்றல். அன்னம்மாள் குரு ஆரோன் குல வழித்தோன்றல். சுவர்க்கீன் அன்னம்மாளின் மிகப் பெயரி கவலை திருமணமாகி இருபது ஆண்டுகளாகியும் குழந்தைப் பேறு இல்லாததுான். ஆனால் இறைவன் தம் அருளால் சுவர்க்கீன் அன்னம்மாளை தம் அரும்பெரும் செயல்களுக்காக (லூக் 1:49) தயாரித்து வந்தார். அவர்களுக்குத் தனிப் பெரும் சலுகையை அருள இருந்தார். ஏனெனில் அவர்களுக்குப் பிறக்க இருந்த குழந்தை உலகிற்கு வாக்களிக்கப்பட்ட மெசியா - மீட்பரின் அன்னையாக தெரிந்துகொள்ளப்பட்டது. சுவர்க்கீன் அன்னம்மாளின் முதிர்ந்த வயதிலும் குழந்தைப்பேறு அடைய ஆர்வம் குறையாமல் வேண்டியதால் இறையன்னையாகப் போகும் அருள் நிறைந்த மகள் மரியாவைப் பெற்ற ஆசீர் பெற்றனர்.

வானதூதர் சுவர்க்கீனிடம் "அகமகிழ்" இறைவன் உன் வேண்டுதலுக்குச் செவிசாய்த்தார். உன் மனைவி கருத்தரித்து ஒரு மகளைப் பெற்றெடுப்பாள். அப்பிறப்பு அனைத்துலகிற்கும் மகிழ்ச்சியாக அமையும். என்றார். அன்னம்மாளின் கருவில் அமலியாக உற்பவித்த மரியா மாசற்றவராக வாழ்ந்து காட்டினார். குழந்தைப் பேறு இல்லாத தம்பதியர் அன்னம்மாள் வழியாக 9 செவ்வாய்க்கிழமை ஒரு சந்தியிருந்து பக்தியுடன் 9 மங்கள வார்த்தை செபம் செபித்து தருமம் செய்து வந்தால் குழந்தை வரம் கிடைக்கும் என்பது திருச்சபையின் மரபு. ஏனெனில் அன்னம்மாள் இறையன்னையைப் பெற்றெடுத்த தாய் என்பதால் அன்னம்மாளின் வேண்டுதலுக்கு செவி சாய்த்து குழந்தை வரம் அருளி வருகிறார் என்பது பாரம்பரிய நம்பிக்கை.

மரியாவின் பிறப்பு மனிதகுல வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே இறைவனால் தயார் செய்யப்பட்டது. ஏதேன் தோட்டத்தில் நம் முதல் பெற்றோர் ஆதாம் - ஏவாளுக்கு ஓர் அருள் நிறைந்த பெண்ணின் வித்தாக மீட்பரை அனுப்பப் போவதாகவும் அந்தப் பெண்ணும் அவள் வித்தும் அலகையின் தலையை (வல்லமையை) நசுக்கும் (தொ.நூ 3:5) என்றும் வாக்கு அளித்திருக்கிறார். "அருள் மிகப் பெற்றவரே" (லூக் 1:28) என வாழ்த்திய வானதூதருக்கு மரியா "நான் ஆண்டவரின் அடிமை. உமது சொற்படியே நிகழட்டும்" (லூக் 1:38) என மறுமொழிக் கூறி இறைவனின் மீட்புத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து தூய ஆவியாரால் கருவுற்று இறைமகன் இயேசுவுக்கு அன்னையானார். விண்ணகத் தந்தையின் திருமகள் கன்னி மரியாள் பரிசுத்த ஆவியின் பத்தினியானார். வானதூதர்களின் அரசி ஆனார். புதிய நித்திய உடன்படிக்கைப் பேழையானார். "இயற்கை அதிசயிக்கும் வகையில் நீர் உம்மைப் படைத்தவரையே உம் திருவயிற்றில் தாங்கினீர்" என மரியாவைப் போற்றுகிறார் திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன்போல். மரியா இயேசுவுக்கும், மனிதருக்கும் இடையே இணைப்பாளர். நற்செய்தியில் இயேசு கானாவூர் திருமணத்தில் செய்த முதல் புதுமை மரியாவின் தலையீட்டால் நடந்தது. இவ்வாறுதான் மரியா புதுமைகளின் திறவுகோலாக மாறினார். மனிதக்குலத்தின் முதல் உபகாரியானார்.

பாடுகள் பட்டு சிலுவையில் தொங்கிக் கொண்டு மரணத்தருவாயில் இருந்த இயேசு நம் மேலுள்ள பேரன்பினால் தம் அன்னையை நமக்கும் அன்னையாக உரிமைப்பேறு அருளினார். தம் சீடரை நோக்கி "இதோ உன் தாய்" (யோவா 19:27) என்றார். மரியா திருச்சபைக்குத் தாயாகிறார். யோவான் நற்செய்தி உருவக வடிவத்தில் உள்ளது. மீட்பரின் ஆறுதலும், தன்னம்பிக்கையும் தந்து நம்மை உற்சாகப்படுத்தும் இந்த அழகான வார்த்தைகள் பல யுகங்களாக கல்வாரி மலையிலிருந்து நற்செய்தியிலிருந்து திருச்சபையின் போதகங்களிலிருந்து எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது.

ஆதித் திருச்சபையில் குழப்பமாயிருந்தது. மரியா தூய ஆவியாரின் ஆற்றலோடு திருத்தூ-தர்களை வழிநடத்தி திருச்சபையைப் பேணி வளர்த்தார். திருச்சபையின் வரலாற்றில் ஈராயிரம் ஆண்டு காலமாக தூய ஆவியார், "மரியா ஆற்றிய பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. திருச்சபைக்காக இடைவிடாது வேண்டிவரும் மரியா எண்ணற்ற இன்னல் வேளைகளில் விண்ணக வல்லமையுடன் தலையிட்டு இருளின் சக்திகளை முறியடித்து திருச்சபையைக் காத்து வருகிறார். பேதுருவின் வாரிசு திருத்தந்தையின் அரியணைக்கு ஆபத்து நேரிட்டபோதெல்லாம் அலகையை எதிர்த்துப் போராடி வந்த ஒவ்வொருவரையும் கைவிடாமல் அள்ளி அரவணைத்துத் துன்பம் போக்கி துயர் துடைத்து வருகிறார்.

மூவொரு இறைவனுக்கு அடுத்த நிலையில் இயேசுவின் வலது பக்கத்தில் விண்ணக மண்ணக அரசியாக அன்னை மரியா வீற்றிருக்கிறார். இறைவனிடமிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய அனைத்து அருள் வரங்களுக்கும் இடையீட்டாளராக செயலாற்றுகிறார். திருமுழுக்கு முதல் மரணம் வரை நம் உடல் ஆன்மாவுக்கு ஊட்டமும் நம்பிக்கையும் அளிக்கிறார். "நம் எல்லா நம்பிக்கையின் அடித்தளம் மரியாவில் காணப்படுகிறது. மரியா வழியாக ஒவ்வொரு நம்பிக்கையும் நிறைவேறுகிறது. அருள் வரங்களும், மீட்பும் கிடைக்கிறது. என்பதற்காக நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அனைத்து நன்மைகளின் களஞ்சியத்தை இறைவன் மரியாவிடம் ஒப்படைத்திருக்கிறார். ஏனெனில் அனைத்தையும் நாம் மரியா வழியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இறைவனின் திருவுளம்" எனத் திருத்தந்தை 9ஆம் பயஸ் போதித்தார்.

## இயேசு நம் மேலுள்ள பேரன்பினால் தம் அன்னையை நமக்கும் அன்னையாக உரிமைப்பேறு அருளினார்.

இயேசுவுடன் இணைந்து மரியா இணை மீட்பராக பணியாற்றி வருகிறார். சீடர்கள் உயிருக்கு அஞ்சி ஓடிவிட்டாலும் சிலுவையின் அடியில் இயேசு உயிர்விட்டு பலியாகும் வரை அவருடன் ஒன்றித்திருந்தார். "பாடுகள் பட்டு மரித்த தம் திருமகனோடு மரியா எந்த அளவு துன்புற்று மரித்தாரென்றால், மனிதனின் மீட்புக்காகவும், இறைசினம், தணிந்து இறை நீதியை நிலைநாட்டவும், தம் திருமகன்மேல் தனக்குள்ள ஈன்றத் தாயின் உரிமைகளை மரியா எந்த அளவுக்குப் பணிந்து விட்டுக்கொடுத்தார் என்றால், இயேசுவுடன் சேர்ந்து மனித குலத்தை மீட்டார் என உறுதியாக சொல்ல முடியும்" என 1918இல் திருத்தந்தை 15ஆம் பெனடிக்ட் புகழாரம் சாற்றினார். இவ்வாறுதான் கல்வாரியில் தன் திருமகனுடன் சேர்ந்து அலகையின் தலையை மரியா நமக்காக நசுக்கினார்.

இணை - மீட்பராக உழைத்து வரும் மரியா, வார்த்தையானவருக்கு மனித உடல் அமைத்துக் கொடுத்த அதே மரியாள் அடிக்கடி உலகிற்கு வந்து குரல் கொடுத்துக் கொண்டிருகிறார். மரியாவின் வார்த்தைகளுக்கு இக்காலத்தில் நாம் அதிகமாக செவிசாய்க்க வேண்டும் என்பது இறைவனின் திருவுளம். அதனால்தான் இறைவனின் அனுமதியுடன் உலகிற்கு வந்து பல காட்சிகளில் செய்திகள் அருளி வேண்டுகோள்கள் விடுகிறார். மனித உரு எடுத்த வார்த்தையானவர் இயேசுவின் வார்த்தைகளின் எதிரொலிதான் அன்னையின் வார்த்தைகள் என விசுவசித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். செபமாலை, உத்தரியம் வழியாக ஒருநாள் நான் உலகை மீட்பேன் என அன்னை மரியா வாக்களித்திருக்கிறார்.

சலேத் லூர்து நகர், பாத்திமா, மெட்சுகோ-ரியோ போன்ற இடங்களில் அன்னை மரியா கொடுத்த செய்திகளை நாம் அறிந்து ஆய்ந்து இந்தப் பொல்லாப்புக் காலத்தின் அன்னையின் மாசற்ற இருதயத்துக்கு அர்ப்பணிக்கப்பட்ட பிள்ளைகளாக செபமாலை, உத்தரியம் பக்தியுடன் அன்னையுடன் ஒன்றித்து தினமும் திருப்பலியில் பங்கேற்று அன்னையின் பாதுகாப்பில் வாழ்ந்து நாமும் அலகையை நம் காலடியில் போட்டு நசுக்க வேண்டும் என்பதே இறைவனின் திருவுளம்.

### அன்னைக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்

## மரியே வாழ்க!

**வாழ்த்துகின்றோம்**
**அன்னையே உம்மை...**

விடியற்கால நட்சத்திரமாய்
வானில் தோன்றும் ஒளிர் நிலவாய்
மண்ணின் மாந்தர் நாம் வாழ
மாசற்ற மகளாய் உதித்த எம் அன்னையே
வாழ்த்துகின்றோம் வாழ்த்துகின்றோம்
இனிய பிறந்த நாள் தனிலே

அன்னம்மாள் சுவர்க்கீன் திருமகளாய்
அமல உற்பவ தாய் மரியாய்....
அகிலம் மீட்டிட்ட இறைமகனை இப்புவியில்
அணைத்துக்காத்தத் தூயவளே.....

காலங்கள் அனைத்தும் கடந்தவளாய்
ஞாலத்தைக் காக்கும் தாய் மரியாய்...
கருணையின் வடிவாய் அவனியிலே
காலம் எல்லாம் வாழ்பவளே...

கனிவுடன் கருணையும் கொண்டவராய்
முன்னவன் இயேசுவை ஈன்றெடுத்து
அவர் திருமுன் என்றென்றும் எமக்காக
பரிந்துரைக்கும் நல் பரிசுத்த தாயானீர்


மாசற்ற இருதயம் கொண்டவரே
மங்களம் பொங்கும் தாய்மரியே
மாந்தர் நாமும் மாசற்ற வாழ்வு வாழ்ந்திடவே
நற்பாதையில் எம்மை வழிநடத்தும்

தூய்மையும் தாழ்ச்சியும் கொண்டவராய்
இறைவனின் திட்டத்திற்குத் தலைசாய்த்தீர்
என்றும் இறைவனின் திருவுளம் நிறைவேற்றும்
நல் மக்களாய் நாம் வாழ்ந்திட வழிகாட்டும்

பாரினில் எங்கும் காட்சி தந்தீர்
பாசத்துடன் அன்பு கரமதை நீட்டி நின்றீர்
நாளும் திருச்செபமாலை ஓதச் சொன்னீர்
இறைவன் திருமுன் எம்மை
அழைத்துச் செல்ல...

உன்னருள் கொண்டே எம்மைக் காத்து
உம் மகன் இயேசுவிடம்
அழைத்துச் செல்லும் ~ பரமன் திருமுன்
நாம் நின்று உம்மை புகழ்ந்து
பாடிடும் வரம் தருவீர்
வாழ்த்துக்கின்றோம் வாழ்த்துகின்றோம்
உம்மை இனிய பிறந்த நாள் தனிலே

**ஆக்கம் : திருமதி அருள்செல்வம்**
**இராஜகிரிய**



21

# அமைதிக்கு ஓர் அன்னை

# புனித அன்னை திரேசா

இத்தாலி நாட்டில் டோர் ஃபிஸ்கால் என்னுமிடத்தில் புது மடம். அவரைப் பார்க்க வந்தார் கர்தினால் ஒருவர். அவர்தான் மேதகு ராபர்ட் நாக்ஸ் ஆண்டகை. 1965ஆம் ஆண்டில் அன்னையின் சபையை பாப்பானவரின் சபையாக உயர்த்துவதற்குக் காரணமாக இருந்தவர் நாக்ஸ் ஆண்டகை அவர்களே. பத்தாண்டு காலமாக புதுடில்லியில் பாப்பானவரின் இந்தியத் தூதுவராகப் பணியாற்றிய பின் அவர் உரோமைக்கு அழைக்கப்பெற்றார். அங்கே அவருக்குக் கர்தினால் பட்டம் வழங்கப்பட்டது.

இவர் தம் சபைக்குச் செய்த உதவிகளை தெரசா ஒருக்காலும் மறந்தவரல்லர். அவருடைய நினைவை நிலைநாட்டிட கல்கத்தாவில் பேராயர் நாக்ஸ் உயர்நிலைப் பாடசாலையொன்றை அன்னை திறந்து வைத்திருக்கிறார். இது சாதாரண பாடசாலையன்று. பகலில் வேலை பார்ப்பதால் பாடசாலைக்குச் சென்று படிக்க வசதியற்ற மாணவர்களுக்கான மாலைப் பாடசாலை.

அன்னை தெரசாவின் சபையினர் கடல் கடந்து வெனசுவேலாவுக்குச் செல்வதற்குக் காரண-மாக இருந்தவர் நாக்ஸ் ஆண்டகைதான் என நாம் ஏற்கனவே பார்த்திருக்கின்றோம். இப்போது அதே நாக்ஸ் ஆண்டகை தம் சொந்த நாடாகிய ஆஸ்திரேலியாவுக்கு அன்னை தெரசாவை அழைக்க வந்திருக்கிறார். ஆஸ்திரேலியா செல்வம் கொழிக்கும் நாடுதான். ஆயினும் அங்குள்ள பழங்குடி மக்கள் இன்னும் ஏழ்மையில்தான் வாழ்கிறார்கள். நியூசவுத்வேல்சில் பூர்க் என்னுமிடத்தில் பழங்குடி மக்கள் மிகுதியாக வாழ்கின்றனர். நாக்ஸ் ஆண்டகையின் வேண்டுகோளுக்கிணங்கி அன்னை 1969ஆம் ஆண்டில் ஐந்து சகோதரிகளுடன் ஆஸ்திரேலியா நோக்கிப் புறப்பட்டார்.

ஆஸ்திரேலியாவைக் கண்டுபிடித்த பெருமை ஆங்கிலேய மாலுமி காப்டன் ஜேம்ஸ் குக் என்பவ-ரையே சாரும். அவர் கீழ்க் கடற்கரையில் சிட்னி நகரின் பக்கத்திலுள்ள பாட்டனி வளைகுடாவில் 1770ஆம் ஆண்டு வந்திறங்கினார். அப்போது அத்தீவில் வாழ்ந்து வந்தவர்கள் அனைவரும் பழங்குடியினரே. நாகரீக உடை அணியாமல் உணவுக்காக காட்டு விலங்குகளை வேட்டையாடி வந்தவர்கள் இம்மக்கள். இவர்களைக் காட்டுப் பகுதிகளுக்கும் மலைப்பகுதிகளுக்கும் விரட்டிய பின்தான் ஆங்கிலேயர் இங்கே குடியேறினார்கள்.

இன்று இம்மக்கள் நகர்ப்புறங்களினின்று ஒதுங்கி உள்நாட்டுப் புறங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு ஓரங்கட்டப்பட்ட இம்மக்கள் சுகாதாரமான வீடுகளோ கல்வி பயில வசதிகளோ இன்றி வாழ்கின்றனர். இப்பேர்ப்பட்டவர்களுக்குத் தான் அன்னை தெரசாவின் சகோதரிகள் தொண்டாற்றுகின்றனர். பூர்க் என்னும் மலைப்பாங்கான இடங்களில் தங்கள் பணியைத் தொடங்கினர்.

இதோ! அந்த மேட்டில் வெள்ளை நிறக் கொட்டகை ஒன்று தெரிகிறதே. அதுதான் சகோதரிக-ளுடைய இல்லம். இல்லக் கதவைத் தட்டுகிறோம். ஒரு சகோதரி கதவைத் திறக்கிறார். நல்ல கருப்பு நிறம். வட்டமான முகம், குள்ளமான உடம்பு. இவர்தான் சகோதரி ஸ்கொலாஸ்டிக்கா. பார்வைக்கு இவரும் பழங்குடி மக்களில் ஒருவரைப் போல் காட்சி அளிக்கின்றார். ஆனால் இவர் ராஞ்சியைச் சேர்ந்தவர். ராஞ்சியிலிருந்து அவருடன் வந்த சகோதரிகள் வேறு இரண்டு பேரும் இங்கு உள்ளனர். அவர்கள் ராஞ்சிக்குப் பக்கத்தில் சோட்டாநாகபுரி என்னும் ஊரில் வாழும் பழங்குடியைச் சேர்ந்தவர்கள். இவர்களையே பூர்க் பழங்குடி மக்களிடையே பணிபுரிய

தேவைப்படும் தட்டுமுட்டுச் சாமான்களையும், ஆடைகளையும், சகோதரிகளே செய்துகொடுக்கின்றனர். சமையல் பயிற்சி வகுப்பு இங்கே நடைபெறுகின்றன. பாடசாலை மாணவ, மாணவியருக்குத் தனி வகுப்புக்களும் மடத்தில் நடைபெறும். உள்ளூரில் பாடசாலை இல்லாத காரணத்தால் சிறுவர், சிறுமியர் வெளியூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இவர்களுக்கென பேரூந்து ஒன்றையும் சகோதரிகள் வைத்திருக்கின்றனர்.

அதை ஓட்டிச் செல்பவர் சகோதரி லெத்தீசியாதான். வண்டி இல்லையேல் பிள்ளைகள் ஒருவர் கூட பாடசாலைக்குச் செல்லமாட்டர்கள். எனவே, சகோதரி காலையில் சிறுவர், சிறுமியரை வண்டியில் ஏற்றிப் பாடசாலைக்குச் செல்கின்றார். மாலையில் அவர்களை வீட்டுக்கு அழைத்து வருகின்றார்.

இதுவே சகோதரிகளின் பெரும் பொறுப்பாய் அமைந்துவிட்டது. பிள்ளைகளுடைய கல்வியில்



## ஆஸ்திரேலியாவில் சபையை நிறுவுதல்

அனுப்பியிருக்கின்றார் அன்னை தெரேசா.

பூர்க் மடத்தின் தாயார் சகோதரி லெத்தீசியா. இவர் வங்காளத்திலிருந்து வந்தவர். ஐந்தாவது உறுப்பினர் சகோதரி செலின். இவர் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர். இவ்வாறு இந்தியாவின் வெவ்வேறு இடங்களிலிருந்து வந்தவர்களாயினும் வெவ்வேறு கலாச்சாரப் பின்னணியைக் கொண்டவர்களாயினும் ஒருதாய் பிள்ளைகளைப் போல் பூர்க் மக்களுடைய முன்னேற்றத்துக்காக பணிபுரிந்து வருகின்றனர்.

பழங்குடி மக்களுக்கென பன்னிரெண்டு வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கின்றனர் இச்சகோ-தரிகள். அத்துடன் பெண்களுக்குத் தையல் பயிற்சி வகுப்புகளும் நடத்தி வருகின்றனர். புது வீடுகளுக்குத்

பெற்றோருக்கு அவ்வளவாக கவலையில்லை. அவர்களே கல்வியின் அவசியத்தை தெரியாமல் இருக்கும்போது பிள்ளைகளின் கல்வியில் என்ன கவனம் எடுப்பார்கள்? செம்மறி ஆட்டு மயிர் கத்தரிக்கும் வேலை நல்ல கூலி கிடைக்கக்கூடிய வேலை. அந்த வேலைக்குப் பிள்ளைகளை அனுப்பி பணம் சம்பாதிக்க வேண்டும் என எண்ணுவார்களே ஒழிய அவர்களுடைய கல்வியில் சிறிதும் கவலை கொள்ளமாட்டார்கள். ஆனால், இச்சகோதரிகள் இளைய தலைமுறை படித்தவர்களானால் அடுத்து வரும் தலைமுறையாவது நன்றாக இருக்குமே எனக் கருதுகின்றனர்.

அவர்களுடைய எண்ணமெல்லாம் உயரிய எண்ணம்தான். சொந்த ஊரையும், உறவினரையும் விட்டுவந்து சொந்த நலனையும் பாராமல் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனத் தொண்டு செய்துவரும் இச்சகோதரிகளின் எண்ணம் போற்றத்தக்கதன்றோ?

**தொடரும்**

**தொகுப்பு**

**அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்**

## 01 கருக்கலைப்பு...

மேலும் அங்கு கூடியிருந்த அமைச்சர்கள் மற்றும் பொதுநிலையினர்கள் மத்தியில் உரையாற்றிய கர்தினால் ஆண்டகை அவர்கள் "அண்மையில் அரசாங்கம் கருக்கலைப்பு தொடர்பான சட்டத்தை இலகுவாக்க முயற்சிகள் மேற்கொண்டுவருவதை நாம் அறிகின்றோம். அதேபோல் கடந்த அரசாங்கமும் இதற்கான செயற்திட்டங்களை மேற்கொண்டது. நான் இன்று பகிரங்கமாக இந்த அரசாங்கத்திடம் கூறவிரும்புவது என்னவென்றால். வானமும், பூமியும் சுமக்க முடியாத அளவிற்கு மிகக் கொடூரமான பாவமான கருக்கலைப்பிற்கு அனுமதி அளிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்" என்று கூறிய ஆண்டகை அவர்கள் தொடர்ந்தும் அங்கு கூடியிருந்தவர்களிடம், "நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது என்னவென்றால் கருக்கலைப்பின் மூலமாக உங்கள் குழந்தைகளை அழிக்கும் பாவத்திற்கு உட்பட வேண்டாம். மரியன்னையை உங்கள் முன்மாதிரிகையாகக் கொண்டு இறைத்தந்தையின் இந்த உன்னதமான அழைப்பில் மூலம் இவ்வுலகில் உங்கள் குழந்தைகளை ஈன்றெடுக்கும் பொறுப்பில் பங்காளிகளாகுங்கள்" எனவும் கேட்டுக்கொண்டார்.

வழிபாட்டின் இறுதியில் இலங்கை அன்னையின் திருச்சுருபத்தால் விசேட ஆசீர் வழங்கப்பட்டதுடன், நற்கருணை ஆண்டவர் எழுந்தேற்றம் செய்யப்பட்டு, விசேட குணமளிக்கும் வழிபாடு நடைபெற்றது. 76வது முறையாக நடைபெற்ற நோயாளர்களை ஆசீர்வதிக்கும் விசேட வழிபாடானது, ஐரோப்பிய ஆயர் பேரவையின் தலைவர் அதிமேதகு அஞ்சலோ பக்ஞஞ்ஸ்கோ கர்தினால் ஆண்டகை அவர்கள் தலைமையில் நடைபெற்றதோடு, இவ்வழிபாட்டில், கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை, மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை, ஓய்வு பெற்ற பேராயர்களான அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை, அதிமேதகு நிக்லஸ் மார்க்கஸ் பர்னாந்து ஆண்டகை ஆகியோருடன் மறைமாவட்ட குருக்கள், துறவறத்தார், அருட்சகோதரிகள், பொதுநிலை விசுவாசிகள் அனைவரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

தகவல் மற்றும் படங்கள் : திரு ரீ சுனில்

# அன்னையின் முகவரியே அவரது முக வரிகள்தான்!



அல்பேனியாவில் பிறந்த குட்டித் தேவதை இந்திய இளவரசியாகி, உலகின் அன்னையான தெரேசா இப்போது புனிதை எனத் திருச்சபையால் அங்கீகாரம் செய்யப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. தனக்கென தன் நாட்டில் வாழாமல், பிறர்க்கென பிற நாட்டில் வாழவேண்டும் என்று எடுத்த முடிவில் புனித வாழ்விற்கான விதையை அவர் விதைத்தார். அவரின் பார்வை எப்போதும் யாரும் பார்க்காத நபர்கள், யாரும் விரும்பாத நபர்கள், மறைந்திருக்கும் நபர்கள் இவர்கள் மீதே இருக்கும். கடையனுக்கும் கடையனைத் தேடிக் கண்டுபிடித்து உதவும் குணத்தினாலே அவரை அன்போடு மதர் என்று உலக மக்கள் அழைக்கின்றனர்.

கிறிஸ்துவில் வேரூன்றி, விசுவாசத்தை விடாமல் பற்றிக் கொண்டு, பிறர் உதவி கொண்டே யாரும் பார்க்கக்கூட விரும்பாத மக்களிடத்தில், விரும்பிப் பணிபுரிந்து வாழ்ந்ததால்தான் அன்னை வாழும்போதே புனிதையாய் போற்றப்பட்டார். அதனால்தான் கடந்த வருடம் புரட்டாதி நான்காம் திகதி நடந்தது ஓர் அங்கீகாரம் மட்டுமே எனப் பலராலும் கருதப்படுகின்றது.

மதர் தெரேசாவின் வாழ்க்கையே ஒரு பாடம்தான். அவரது வாழ்வில் நடந்த ஒவ்வொரு நிகழ்வும், அவர் சொல்லிய வார்த்தைகளும்... அவர் புனிதை என்பதற்கான சான்றுப் பத்திரங்கள்தான். புனிதராய் வாழ விரும்பும் ஒவ்வொருவருக்குமான புனிதம் என்பது என்ன என்கிற சில பாடங்கள் அவரின் வாழ்வு அனுபவத்திலிருந்து...

1. வெளிநாட்டிற்கு நற்செய்தி அறிவிப்புப் பணிக்குச் செல்ல வேண்டும் என்று தன் அன்னையிடம் அனுமதி கேட்டு நின்றார் தெரேசா. "சென்று வா" என்று தோள் தட்டி, அனுமதி கொடுத்த தாயைப் பார்க்க வேண்டுமென அவர் ஒருபோதும் தாயகம் சென்றதில்லை. தம் தாய் இறந்தபோதுகூட "கலப்பையில் கை வைத்தவன் திரும்பிப் பார்க்கக்கூடாது" என்பதைத் தொடக்கத்திலிருந்தே உணர்ந்திருந்தவர் அன்னை. புனிதம் என்பது தேடலில் உண்டான உறுதியில் அனைத்தையும் (அம்மாவையும்) இழப்பதில் தொடங்குகிறது.

2. "சின்னஞ்சிறு சகோதர சகோதரிகளுக்குச் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்ற இயேசுவின் கூற்றைத் தனது தேடலுக்கான விடையாகவும், அவரையே காணும் வழியாகவும் அவர் உணர்ந்த பிறகே அனைத்து வசதிகளையும் கொண்ட கொன்வென்டில் இருந்து விடைபெறத் துடித்தார். புதிய சபையைத் தொடங்க ஆயரின் அனுமதி வேண்டும். தெரசாவின் ஆன்மீகக் குரு வான் எக்செம் சே.ச பேராயர் பெரோவைப் பார்த்து தெரேசாவின் எண்ணம் பற்றிச் சொன்னபோது கடுங்கோபத்தோடு ஆயர் பின்வருமாறு சொன்னார்... "இது முட்டாள்தனமான ஒன்று. அந்தத் தெரேசாவைப் பற்றித் தொடக்கத்திலிருந்தே எனக்குத் தெரியும். ஒரு மெழுகுவர்த்தியினைக் கொளுத்தக்கூடத் திராணியில்லாதவர். அவரால் அது எப்படி முடியும்? அதற்கு அவளுக்குத் தகுதியும் இல்லை".

"ஞானிகளுக்கு மறைத்து, சிறுவர்களுக்கே இறைவன் தமது திருவுளத்தை வெளிப்படுத்துகிறார்" என்பதை தெரேசா ஒருபோதும் மறக்கவேயில்லை. எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் தனது விடாமுயற்சியினால் அனுமதி பெற்று, பணியைத் தொடங்கியவர் நம் அன்னை. பிற்காலத்தில் யாரும் கண்டுகொள்ளாத ஓர் அனாதையின் இடத்தைச் சுத்தப்படுத்தி அவனிடம் இருந்த விளக்கை ஏற்றி வைத்தது மட்டுமல்ல, தினமும் இரண்டு சகோதரிகளை அவன் இருக்குமிடத்திற்கு அனுப்புகிறார். சில மாதங்களுக்குப் பிறகு வரும் சகோதரிகளிடம் அவன் சொன்னான்... "அன்னை ஏற்றிய ஒளி அணையாமல் இருக்கிறது என்று அவரிடம் சொல்லுங்கள். இனி அணையாது என்றும் சொல்லுங்கள்". மெழுகுவர்த்தி ஏற்றத் திரணியில்லாதவர் ஏற்றிய விளக்கு அணையாமலே இருந்தது. புனிதம் என்பது எதிர்ப்பு கண்டு ஒதுங்காமை - விடாமுயற்சிக்குத் தயங்காமை - ஒளி ஏற்ற அஞ்சாமை!

3. பல துறவிகள் போல அவரும் இந்த உலகம் மடைமை எனக் கருதுவதைத் தேர்ந்தெடுத்தார். சிலுவையில் இயேசுவைப் பிணைத்த மூன்று ஆணிகள் (கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல்) அவருக்கு ஐந்து காயங்களை உண்டாக்கியது போல எப்போதும் தன்னை இயேசுவோடு பிணைத்துக் கொண்டவர் அன்னை தெரேசா. முதலில் சபை தொடங்க அனுமதி கிடைத்தபோது அவர் தேர்ந்தெடுத்த புடவை மிகச் சாதாரணமானது. மூன்று புடவைகள், ஒரு சிலுவை, ஒரு செபமாலை (ஐந்து காயங்கள்). இன்றுவரை அந்தச் சகோதரிகள் மூன்று புடவைகளுக்கு மட்டுமே சொந்தக்காரிகள்! ஒன்று உடுத்துவதற்கு, மற்றொன்று மாற்றிக்கொள்ள, இன்னொன்று சிறப்பு நாள்களுக்காக! அவ்வளவே இந்த உலகம் மடைமை எனக் கருதுவதன் வழியாகவே நம்மை இறைவனோடு பிணைத்துக் கொள்ள முடியும். புனிதம் என்பது எளிமையும் ஏழ்மையும்

4. ஏழை, எளியவர் பணியில் அவர் இயேசுவைப் போலவே பல பொய்க்குற்றச்சாட்டுக்களுக்கு ஆளானார். தொடக்கக் காலத்தில் "வெளிநாட்டுக்காரியே,.....

தொடர்ச்சி 15ம் பக்கம்

# நம்பிக்கை குன்றியவனே!

## ஏன் ஐயம் கொண்டாய்?



நாம் கத்தோலிக்கராக இருந்தாலும் விசுவாசம் குறையும் போது கோவிலுக்குச்சென்று இறைவனை வழிபடுவதோடு நிற்பதில்லை. நேரம், சாத்திரம், சகுனம் பார்க்கவும் செல்கிறோம். இரண்டையும் செய்கிறோம். உண்மையான இறைவன் தேவையா? அல்லது பொய் நம்பிக்கைகள் தேவையா? இரண்டையும் செய்யாது நாம் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டும்.

ஆகாபு அரசன் பாகால் என்னும் பொய்த் தெய்வத்தை வணங்கி வந்தான். அரண்மனைக் கண்காணிப்பாளனான ஒபதியா தெய்வ பயமும் கடவுள் நம்பிக்கையும் உள்ளவன். ஆண்டவரின் இறைவாக்கினர்களை ஈசபேல் அழிக்க முற்பட்டபோது நூறு பேரைக் குகைக்குள் காப்பாற்றி வந்தார். அங்கு மழை இல்லாது பஞ்சம் வந்தது. அரசன் பாகால் தெய்வத்தை வணங்கி வந்தான். பால் தெய்வம் என்பது மழை தரும் கடவுள், பூமியைச் செழிப்பாக்கும் கடவுள் என்று நம்பினர். ஆனால் யாவே கடவுள் பாலை வனத்தில் வெளிப்பட்ட கடவுள். பாலை வனத்தின் கடவுள் எப்படி எமக்குச் செழிப்பைத் தரமுடியும்? என்று விசுவாசம் கொள்ளவில்லை. அப்போது எலியா இறைவாக்கினர் பால் தெய்வத்தை வணங்கும் இடத்துக்கு வந்து பகிரங்கமாகச் சவால் விட்டு அக்கினியை வரப்பண்ணி, மழையை வரப்பண்ணி புதுமை செய்தார். பின்பு பொய் வாக்கு சொல்பவர்களை எல்லாம் கொன்றார்.

எம்மத்தியிலும் நாம் பல புதுமைகளைச் செய்து நானே எல்லாம் செய்கிறேன் என்று மூளை குழம்பிய மெசியாக்களாகத் திரிகிறோம். எலியா இறைவனை வெளிப்படுத்திய விதம் பிழையாக இருந்தாலும் இறைவன் எலியாவை ஒதுக்கவில்லை. எலியாவுக்குப் புதிய செய்தியைக் கொடுத்தார். நீ என்னைப் பால் தேவனைப் போல் ஆக்கிவிட்டாய் எனது செய்தியைக் கேட்க மனம் அமைதியாக இருக்க வேண்டும். "அப்போது ஆண்டவர், வெளியே வா, மலை மேல் என் திருமுன் வந்து நில். இதோ ஆண்டவராகிய நான் கடந்து செல்லவிருக்கிறேன்" என்றார். உடனே ஆண்டவர் திருமுன் பெரும் சுழல் காற்று எழுந்து மலைகளைப் பிளந்து பாறைகளைச் சிதறடித்தது. ஆனால் ஆண்டவர் அந்தக் காற்றில் இருக்கவில்லை. காற்றுக்குப் பின் நில நடுக்கம் ஏற்பட்டது. நில நடுக்கத்திலும் ஆண்டவர் இருக்கவில்லை. நில நடுக்கத்தின் பின் தீ கிளம்பிற்று. தீயிலும் ஆண்டவர் இருக்கவில்லை. தீக்குப்பின் அடக்கமான மெல்லிய ஒலி கேட்டது. அதை எலியா கேட்டவுடன் போர்வையினால் தன் முகத்தை மூடிக்கொண்டு வெளியே வந்து குகையின் வாயிலில் நின்றார். (1 அரசர் 19:11-13) இறைவனது குரலைக் கேட்க நாம் அமைதியாக இருக்கப் பழகவேண்டும். எமது செவிகளைத் திறந்து வைத்திருக்க வேண்டும். எமது விசுவாசம் சோர்ந்து போகும் போது நாம் இருவிதத்தில் செயற்படுத்துவோம். பால் தேவனைத் தேடி ஓடாது யாவே இறைவன் மீது மட்டும் நம்பிக்கை வைக்க வேண்டும். அதேபோன்று



# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

140

மத்தேயு 14:22-33ல் பெரிய புதுமை செய்தபின் யேசுநாதர் மலைக்குச் சென்று தனியாகச் செபித்தார். நான் புதுமை செய்து விட்டேன் என்று பெருமை கொள்ளாது தந்தைக்கு மகிமையைக் கொடுத்து அமைதியாகச் செபித்தார். நாமும் குடும்பமாகச் செபிப்பதோடு நின்றுவிடாமல் தனிமையாக இறைவனோடு உறவு கொள்ளப்பழக வேண்டும். இங்கே கடலில் மூழ்கிக்கொண்டிருந்த இராயப்பருக்கு "தம் கையை நீட்டி அவரைப்பிடித்து நம்பிக்கை குன்றியவனே ஏன் பயம் கொண்டாய்" என்றார். ஆண்டவர் இராயப்பரைத் தொட்டு பிடித்துத் தூக்கினார். எமது வாழ்விலும் இறைவனது தொடுகையை விசுவசிக்க வேண்டும். அதேபோன்று எமது தொடுகை உணர்வு மற்றவர்களைஇ எம்மோடு நெருங்க வைக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். எமது வாழ்வில் புயல் இல்லையேல் இறைவன் வெளிப்படமாட்டார். நான் பூதம் இல்லை - நான்தான். உண்மைத்தேவன் என்பதை வெளிப்படுத்தும் போது நாம் நம்ப வேண்டும். எமது வாழ்வில் பிரச்சினை துன்பம் வந்ததும் உடனே சூனியம், சாத்திரம் பார்க்க ஓடாது இறைவனது தொடுகை அனுபவத்தைப் பெற வேண்டும்.

தொடரும்

பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா
உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.



# இறைவார்த்தை வழிபாடு

WLX - பேதுரு -

## பொதுக்காலத்தின் 22வது ஞாயிறு (03.09.2017)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 22வது ஞாயிறு தின திருப்பலியை சிறப்பிக்க வந்துள்ள அன்புள்ள நெஞ்சங்களே! இன்றைய நாளில் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள இறைவார்த்தைகள் தரும் செய்தி என்னவெனில் துன்பங்களை பொறுமையாக ஏற்க வேண்டும் என்பதுதான் "சிலுவை இல்லாமல் சிம்மாசனம் இல்லை" என்பார்கள். அதனால்தான் இயேசு தன்னைப் பின்பற்றுபவர்களுக்கும், பின்பற்ற விரும்புபவர்களுக்கும் தன்னலம் துறத்தல் சிலுவை சுமத்தல், அவரைப் பின்செல்லல் என்ற நிபந்தனைகளை கொடுக்கின்றார். ஆண்டவரின் பணியை நாம் செய்யும்போது அவமானம், ஏளனம், நகைப்பு, கேலி, கிண்டல் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இறைவாக்கினர் எரேமியா கூறுவதுபோல் கடவுள் வாக்கு என் இதயத்தில் பற்றியெரிந்து அவர் பணிசெய்யத் தூண்டுகிறது" என்ற வார்த்தை எம்மிலும் செயல்பட வேண்டும். அத்துடன் ஒருவன் உலகம் முழுவதும் தனதாக்கிக் கொண்டாலும் தனது ஆன்மாவிற்கு கேடுவிளைவித்தால் அதனால் வரும் பயன் என்ன? என்ற இறைவார்த்தையையும் நோக்கிப் பயணிக்க இறையருள் வேண்டி தொடரும் பலியில் இணைவோமாக.

**முதல் வாசகம் : எரே : 20:7-9**
ஆண்டவரின் வாக்கு என்னைப் பழிச்சொல்லுக்கும் நகைப்பிற்கும் ஆளாக்கியது.

**பதிலுரைப் பாடல் :**
கடவுளே என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது.

**இரண்டாம் வாசகம் : உரோ 12:1-2**
தூய உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள்

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா கடவுளுடைய அழைப்பு உங்களுக்கு எத்தகைய எதிர்நோக்கைத் தந்துள்ளது என்று நீங்கள் அறியுமாறு உங்கள் அகக்கண்கள் ஒளியூட்டம் பெறுவனவாக அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத்தேயு 16:21-27**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

துன்ப துயரங்கள் சிலுவைகள் ஊடாகத் தன் மக்களை நிலை வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் தூய திருச்சபையின் தலைவரான திருத்தந்தையும் அவருடன் இணைந்து செயலாற்றும் ஆயர்கள், குருக்கள், துறவியர் பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் துன்பங்களை தாங்கும் சக்தியைக் கொடுத்து வழிநடத்தியருள வேண்டுமென்று...

எமது நாட்டில் வாழும் மக்களின் துன்ப துயரங்கள் அடக்குமுறைகள் உரிமை மறுப்புக்கள், சமூக சீர்கேடுகள் போன்ற சிலுவைகள் தூர விலகவும், மக்களின் நிம்மதியான வாழ்விற்காக அரசியல், சமூக, சமயத் தலைவர்கள் பாடுபடவும், இன்பத்தின் திறவுகோல் தான் துன்பம் என்பதை சகலரும் உணர்ந்து கொள்ளவும் வரமருள வேண்டுமென்று...

துன்பம் மனிதனுக்கு கடவுளின் இரக்கத்தையும், மன்னிப்பையும், பெற்றுத்தரும் அருட்சாதனம் என்பதையும், துன்பம் மனிதனுக்கு கடவுளின் திருவுளத்தை வெளிப்படுத்துகிறது என்பதையும் உண்மையான துன்பத்தில் தான் மனிதனில் வெளிப்படும் புனிதம் அடங்கியுள்ளது என்பதையும், ஏற்றுக்கொண்டு வாழ வரமருள வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் 23வது ஞாயிறு (10.09.2017)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 23வது வாரத்தில் கால்பதிக்கும் இறை உறவின் அன்பு நெஞ்சங்களே! இன்றைய திருவழிபாட்டில் இடம் பெற்றுள்ள இறைவார்த்தைகள் அனைத்தும் ஒரு மனிதன் சுயநலன் களைந்து பிறர் நலமும் குழுமத்துவ வாழ்வும், பகிர்வும் மன்னிப்பும், மனமாற்றமும் நட்புடன் கூடிய உறவும் கொண்டவனாக வாழ்ந்தால் பூரணப்படுத்தப்படுகிறான். என விளக்கப்படுகின்றன. அத்துடன் பிறரின் நலன் கருதி பிறர் குற்றம் சுட்டிக்காட்டி அவர்கள் வாழ்வு பெற என்ன செய்கின்றோம் என சிந்திக்கவும் தூண்டுகின்றன. முதல் வாசகம் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதே, நீங்கள் செலுத்த வேண்டிய ஒரே கடனாய் இருக்கட்டும் என்றும், இரண்டாம் வாசகம் விபச்சாரம் செய்யாதே, கொலை செய்யாதே, களவு செய்யாதே மற்றும் பிறருக்குரியதை கவர்ந்திட விரும்பாதே என்றும் கூறுகின்றன நற்செய்தியானது குற்றம் புரிவோருக்கு அவரது குற்றத்தை எடுத்துக்கூறி, எச்சரித்து அவரைத் திருத்த முயல வேண்டும் எனக் கூறுகின்றது. எனவே பிறரைத் திருத்துவதோடு நாமும், குற்றம் செய்யாமல் அயலவரோடு மனமொத்து இயேசுவின் நாமத்தில் ஒன்று கூடி வாழ வரம் வேண்டி பலியில் இணைந்து பயன்பெறுவோம்.

**முதல் வாசகம் : எசே:33:7-9**
தீயோர் தம் வழிகளிலிருந்து திரும்பும்படி நீ அவர்களை எச்சரிக்காவிடில் அவர்களது இரத்தப்-பழியை உன்மேல் சுமத்துவேன்.

**பதிலுரைப் பாடல் :**
உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்

**இரண்டாம் வாசகம் : உரோ 13:8-10**
அன்பே திருச்சட்டத்தின் நிறைவு

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா புதிய கட்டளையை நான் உங்களுக்கு கொடுக்கின்றேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல் நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத்தேயு 18:15-20**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கடவுளின் மீட்புத் திட்டமானது அனைவருக்கும் பொதுவானது என்பதை வலியுறுத்தி, அனைத்துலக மக்களுக்கும் மீட்பின் செய்தியை எடுத்துரைக்கும் திருச்சபைக்காக மன்றாடுவோம். திருத்தந்தை, அவருடன் இணைந்து செயலாற்றும் ஆயர்கள், குருக்கள், துறவியர் பொதுநிலையினர் ஆகிய அனைவரும் இயேசுவின் சாட்சிகளாகவும், மீட்புச் செய்தியின் தூதுவர்களாகவும் விளங்கிட வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

நாட்டை நேசிக்கும் மக்களும் தலைவர்களும் பிறர் குற்றங்களை எடுத்துக்கூறும் போது மன்னிப்பும் மனத்தாழ்ச்சியும் உடையவர்களாக நடந்து கொள்ளவும், குற்றம் குறைகளை சுட்டிக்காட்டும் போது மென்மையான மனப்பாங்கை வெளிப்படுத்தவும் அன்பும் மன்னிப்பும் கொண்டவர்களாக நடந்து கொள்ளவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

இயேசு ஆண்டவரின் நாமத்தில் ஒன்றிணைக்கப்பட்ட நாமும் குற்றம் புரிந்தவர்களுக்கு அவர்களது குற்றத்தை எடுத்துக் கூறி திருத்துவதோடு நாமும் குற்றம் செய்யாமல் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஒன்றுகூடி வாழவும், ஒருமனப்பட்டு வாழும் மக்கள் மத்தியில் இயேசுவும் பிரசன்னமாய் இருக்கிறார் என்பதை உணரவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...



# புனித அன்னை தெரேசா

அல்பேனியாவில் பூத்து
இந்தியாவில் வீசிய வாசம்
வெறும் ஐந்து ரூபாய் கைப்பணத்தில்
யுகமாற்றம் செய்த செகஜோதி

கல்கத்தா சேரிகளுக்கும்
கல்வியைக் காட்டிய பள்ளிக்கூடம்
மரணங்கள் அனாதையாகாமல்
காத்த அமைதிக் கரம்

தொழுநோயாளரை நீங்கி
தொலைவில் நிற்காமல்
தொட்டுப் பராமரித்து
தொலைந்துபோன நிம்மதியை
திருப்பிய தொழுகைக் கூடம்

பொருளாதாரமற்ற குழந்தைகளுக்கு
சுகாதாரம் வழங்கிய அருளாதாரம்
இயற்கையின் சீற்றங்களின்
போதெல்லாம்
உதவிக்கரம் நீட்டிய உன்னத ஜீவன்

உயரம் குறை
பிறருக்காய் துயரம் மிகுதி
நடந்த மெழுகுவர்த்தி

மனிதம் மாண்புபெற
தியாகத்தை வாழ்வாக்கிய தேவதை
இன்று புனித நிலைக்கு
உயர்த்தப்பட்ட ஓராண்டு நிறைவில்!!!

## பிறர் அன்பு....

களைத்த நண்பனுக்குச் சூடான காபி தந்து அவரின் மகிழ்வைக் காண்

ஓர் ஏழைக் குழந்தையின் பிறந்தநாளை அதனுடன் சேர்ந்து கொண்டாடு

அமைதியாக, உறுதுணையாக நீ இருக்கும்பொழுது துன்பமும் துயரமும் உள்ளவன் ஆறுதல் அடைவான்

எதிர்பார்ப்பு இல்லாமல் கொடுத்து மகிழ்

அன்பாக மதிய உணவு கொடுத்து உன் சக நண்பரின் கவலையைப் போக்கி அமைதியுறச் செய்

எங்கே வெறுப்பு உள்ளதோ அங்கே அன்பைத் தெளி

ஏழைகளின் துயரத்தை அறிந்து கொள். உன்னால் முடிந்த உதவிகளைச் செய்



# வேண்டும் வரம் நல்கும்... ஆரோக்கிய தாய்

உன் பெயரைப் பற்றி அக்கறைக் கொள், ஆயிரம் பெரிய புதையல்களை விட உனக்கு நிலைத்து நிற்கும். நல் வாழ்க்கை சில நாட்களே நீடிக்கும். நற்பெயரோ என்றென்றும் நீடிக்கும் (சீராக் 41:12-13) இவ்வசனத்திற்கு முற்றும் முழுவதுமாக கூறக்கூடியவர் அன்னை மரியாள்.

இவள் இறைவன் வரைந்த ஓவியங்களிலே அழகு ஓவியம். எனவேதான் கபிரியேல் வானதூதர் அவரை "அருள் நிறைந்தவளே வாழ்க!" என வாழ்த்துகின்றார். மனிதர்களில் யாரும் இத்தகைய அருளால் நிரப்பப்பட்டவர் இலர். இப்படிப்பட்ட அன்னை மரியாளை நாம் போற்றிப் புகழ்வது சாலச் சிறந்ததே. இந்த அன்னைக்கு தான் எத்தனைப் பெயர்கள், அவர் புகழ் பாட எத்தனைப் பாடல்கள். கவிதைகள், நூல்கள் எத்தனை எத்தனை. "என் உடல் முழுவதும் நாவாக மாறினாலும், அன்னையின் புகழைப் பாடித் தீர்க்க முடியாது" என்று புனித பொய் வாய் அருளப்பர் கூறுகின்றார். புனித ஆறாம் பவுல் இவ்வாறு கூறுகிறார். "கிறிஸ்துவை அறிய வேண்டுமா? அன்னை மரியிடம் செல்லுங்கள்" என்றார். காரணம் வார்த்தையான இறைவனை தன்னுடைய உதரத்தில் தாங்கி இயேசுவைப் பற்றி எடுத்துச் சொல்ல அன்னையை விட சிறந்தவர் யாரும் இருக்க முடியாது. மரியன்னை என்னும் உயிருள்ள நற்கருணைப் பேழையில் தான் கடவுள் தன் மகனை உள்ளடக்கினார். அவரது மாசற்ற இருதயம் தான் முதல் முதலில் இயேசுவைத் தாங்கி நின்ற கதிர்பாத்திரம். ஆகவே இப்பேறு பெற்ற மரியாளை நம் தாய் என்று சொல்வதில் நாம் பெருமைப்பட வேண்டும். அன்னையின் மீட்புத் திட்டத்தின் செயல்களின் பொருட்டு பெற்ற மகனைச் சிலுவையில் தாரை வார்த்துக் கொடுத்த வியாகுலங்களின், பொருட்டு, அவர் கொடுத்த காட்சிகளின் பொருட்டு தோன்றிய பக்தி முயற்சிகள் ஏராளம். அந்த வரிசையில் மிகவும் பிரசித்திப் பெற்ற ஒன்று தான் அன்னை வேளாங்கண்ணி தாயிடம் வைத்துள்ள பக்தி முயற்சி.

இந்தியா வங்கக்கடலோரம் தங்கி அருள் புரியும் புனித ஆரோக்கிய அன்னையின் திருத்தலம் தான் வேளாங்கண்ணி. இத்திருத்தலத்தைப் பற்றி அறியாதவர்கள் யாரும் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். புரட்டாதி 08ஆம் திகதி அன்னையின் பிறப்பு தினத்தைத்தான் இவ்வாலயத்தின் திருவிழாவாகக் கொண்டாடுகின்றார்கள். சிற்றூராகிய வேளாங்கண்ணியில் ஏறக்குறைய நானூ று ஆண்டுகளுக்கு முன் காட்சியளித்த இறையன்னை இத்திருத்தலத்தில் தன்னை அண்டிவரும் மக்களுக்கு அளப்பரிய வகையில் ஆன்ம உடல் ஆரோக்கியத்தை அள்ளி வழங்குவதால் ஆரோக்கிய அன்னை எனப் போற்றப்படுகின்றார். அன்னையின் அருளாலும், கருணையாலும், புதுமைகளாலும் நலம் பெற்றவர்களின் எண்ணிக்கை சொல்லிலடங்கா.

இவ்வாறாக அன்னை வேளாங்கண்ணி என்ற பெயர் கொண்ட ஆலயங்கள் எமது இலங்கை நாட்டின் பல மாவட்டங்களிலும் இருக்கின்றன. இருப்பினும் எமது கொழும்பு உயர் மறைமாவட்ட பங்கான செக்கடித் தெரு பங்கில், அன்னை வேளாங்கண்ணி ஆலயம் மிகப் பிரசித்திப் பெற்ற ஆலயமாக காட்சி அளிக்கின்றது. கிட்டத்தட்ட 150 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு சரித்திரம் வாய்ந்த ஆலயமாக இவ்வாலயம் இருக்கிறது எனலாம். அதுமட்டுமல்ல உலகிற்கே அன்னையான அன்னை மரியின் தாயான அன்னம்மாளின் பெயர் கொண்ட எமது பங்கு ஆலயமும் இருக்கிறது என்பது சிறப்பம்சமாகும். தாயும், சேயும் இணைந்து எமது பங்கில் குடிகொண்டு இருக்கின்றார்கள். அந்த பாக்கியத்தைப் பெற்றிருப்பது எமது செக்கடித் தெரு பங்கு ஒன்றே என்றால் அது மிகையாகாது.

"ஆரோக்கிய மாதா" என அழைக்கப்பட்டு எமது பங்கில் குடிகொண்டு இருக்கின்றார் அன்னை மரியா. இவரின் பிறந்த நாளையே அதாவது (புரட்டாதி 08ஆம் திகதி) இவ்வாலயத்தின் திருநாளாக கொண்டாடுகின்றோம். அன்னையின் திருவடியை தேடி உதவி நாடி ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும், மக்கள் ஓடி வருகின்றார்கள். இன மத பேதமின்றி அன்னையைத் தேடி வரும் அனைவருக்கும் நம்பிக்கை நட்சத்திரமாக, ஆரோக்கியம் தருபவராக எண்ணற்ற மக்களின் துயர் நீக்கி வருகிறாள் நம் அன்னை மரி. எத்தனையோ புதுமைகள், அதிசயங்கள் இவ்வாலயத்தில் நடைபெற்றிருக்கின்றன. நோயில் இருந்து குணம் பெற்றவர்கள், பிள்ளைப்பேறு கிடைத்தவர்கள், வெளிநாடு சென்றவர்கள், திருமணம் முடித்தவர்கள், வேலை கிடைத்தவர்கள் என்று பலவற்றை சொல்லிக் கொண்டே போகலாம். இன்னும் இவ்வாறான புதுமைகள் அற்புதங்கள் நடந்து கொண்டேதான் இருக்கின்றன.

எமது பங்கு தனிப்பங்காக பிரிந்து 50ஆம் ஆண்டு ஜூபிலியை அன்னையின் திருவிழாவோடு கொண்டாடுகின்றோம். இந்த வேளையில் அன்னை மரியாளைப் பற்றி அவரின் தனித் தன்மையைப் பற்றி நாம் அறிந்து கொள்வது அவசியம்.

## மரியாள் யார்?

எருசலேமின் தாவீதின் குலத்தைச் சேர்ந்த சுவர்க்கீன், அன்னம்மாள் தம்பதியருக்கு வயது முதிர்ந்து தளர்ச்சியுற்ற காலத்தில் வானகத்தந்தையாகிய இறைவன் தன் மானிடத்தின் மீது கொண்ட அன்பின் வேட்கையால் தன் மகனின் பிறப்பை இம் மண்ணில் அவதரிக்கத் தகுதியான அனைத்து வரங்களாலும், நிரம்பிய ஒரு முதிர்ந்த தம்பதியரைத் தேர்வு செய்து அவர்கள் வழியே மரியாளைப் பிறக்கச் செய்தார். மனித வரலாற்றில் இதுவரை எவருக்கும் அளிக்கப்படாத இனிமேல் அளிக்க வாய்ப்பில்லாத ஈடு இணையற்ற சிறப்புதான் மாதாவின் சிறப்பு. உலகம் தோன்றும் முன் மரியா கடவுளின் சிந்தனையில் இடம் பெற்றிருந்தாள். மரியா மட்டுமே பாவ கறைப் படியாத மண்ணில் தோன்றிய விண் மலர் அவள். மரியாவிடம் இருந்து நாம் கற்று தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் நிறைய இருக்கின்றன.

## இறை அருளின் முழுமை – மரியா

பாவக்கறையோ, களங்கமோ இல்லாதவராகப் பிறந்த மரியா பாவத்தின் அடிமைத்தனத்தால் அழிந்து கொண்டிருந்த உலகை மீட்க மீட்பரின் தாயானாள். மனிதராகப் பிறந்த வேறு எவருக்கும் இதைப் போன்ற அருள் கிடைத்ததில்லை. கபிரியேல் தூதர் மரியாவிடம் "அருள் நிறைந்தவளே வாழ்க" ஆண்டவர் உம்மோடு இருக்கின்றாள். என்று கூறி கடவுளின் திட்டத்தை "உன் சொல்படியே எனக்கு நிகழட்டும்" என்று கூறி இறைத்திட்டத்தை ஏற்றார். எமது அழைப்புக்கேற்றவாறு இறைத்திட்டத்தை நிறைவேற்ற எமக்கு கற்றுத் தருகிறார் அன்னை மரியாள்.

இயேசுவை சுமந்துக் கொண்டு யூதேயா நாட்டிலுள்ள தன் உறவினரான எலிசபெத்திடம் மரியா சென்று பிறப்பணிகளைத் தொடங்கி நற்செய்தியை அறிவித்து திருத்தூதராக மாறுகிறார்.

நற்செய்தியை போதிப்பதோடு பிறப்பணிகளிலும், தேவையில் இருப்போருக்கு உதவுவதன் மூலமும் நாம் நற்செய்தியை அறிவிக்கலாம். மரியா தன் பாடலில் ஏழைகளுக்கும் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட கடை எல்லை மக்களுக்கும், தாம் மனுக்குலத்தின் பிரதிநிதியாக இருந்து எல்லா தலைமுறை மக்களுக்கும், நெருங்கிய உறவுடையவள் என்றும், அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டார்.

கலிலேயாவின் கானாவூர் திருமணத்தின் பொழுது அயலாரின் தேவைகளை உணர்ந்து தன் மக்களிடம் கூறி பிறரின் தேவைகளை நிறைவு செய்தார். அங்கு மரியாள் பொது நலத் தொண்டராகவும், இறையருளை எல்லோரும் அனுபவிக்கவும், பரிந்துரையாக மாறுகிறார்.

"சிலுவையின் அடியில் இயேசு தம் அன்பு சீடரைப் பார்த்து "இவரே உம் தாய்" என்று கூறியபோது இயேசுவின் தாயாகிய மரியா அன்றிலிருந்து கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் தாயாக விளங்கி நம் அனைவரையும், தன் சொந்த பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டாள். இயேசுவின் இறப்பிற்கு பின் சீடர்களுக்கு ஆறுதலாக அடைக்கலமாக, தைரியம் அளிப்பவராக இருந்தார். இவ்வாறாக மரியாள் தாம் மொழிந்த "ஆகட்டும்" என்ற சொல் மூலம் இறைத்திட்டத்திற்கு முழுவதுமாய் ஒத்துழைத்தாள். மரியாள் தன் அன்பு மகனை இவ்வாறு இறுதி மட்டும் பேணிக்காத்து வளர்த்தாளோ, அதேபோன்று இன்றும், அன்னையின் காட்சிகளில் நமக்கு அறிவுரைகளைக் கூறி விசுவாசத்தை பலப்படுத்தி பாதுகாக்கிறாள் அன்னை மரியாள். இவ்வுலகில் எல்லா நாடுகளும், நகரங்களும் மொழி இனம், கலாச்சாரம், எல்லாவற்றையும் கடந்து விசுவாசிகளின் உள்ளத்திலும் இடம் பிடித்து இருக்கும் அன்னைக்கு நாம் பிறந்த நாளில் அவருக்கு வாழ்த்துக் கூறுவோம்.

அன்பான அன்னையே இதயப்பூர்வமான பிறந்த நாள் வாழ்த்துக்களை அர்ச்சனை மலர்களைத் தூவிட பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

ஆக்கம் : பெர்னத்



# 2017 தேவத்தை நோயாளர் தின நிகழ்வில் சில....





நமது பேராயர் கொழும்பு செக்கடித் தெரு பங்கை சந்தித்த நிகழ்வுகளில்...




# தெரிந்து கொள்ளுங்கள்


**விவிலியத்தில் காணப்படும் இவர்களின் அன்னையர்களைக் காண்போம்.**

- காயீன், ஆபேல், சேத்து - **ஏவாள்**
- ஆபிரகாம், ராக்கேல், ஆரான் - **மில்கா**
- ஈசாக்கு - **சாராய்**
- இஸ்மயோல் - **ஆகா**
- ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுதலோன், தினா (மகள்) - **லேயா**
- தான் நப்தலி - **பில்கா**
- காத்து, ஆசேர் - **சில்பா**
- யோசேப்பு, பென்யமின் - **ராகேல்**
- கேர்சோம் (மோசேனின் மகன்) - **சிப்போரா**
- ஆரோன், மோசே - **யோக்கபேது**
- பாராக் (நீதித்தலைவி) - **தெபோரா**
- சாமுவேல் - **அன்னா**
- தாவீது - **பெனின்னா**
- கிலயாபு - **சபிகா**
- அம்சலோம் - **மாக்கா**
- அதோணியா - **அகீத்து**
- செபத்தியா - **அபித்தா**
- இத்தரயாம் - **எக்லா**
- சாலமோன், சியமா,சோபாபு, நாத்தான் - **பத்சேபா**
- எரோபவாமின் - **நாமா** (சாலமோனின் மகன்)


**ஆக்கம் : L. ஜெயசீலி லோறன்ஸ், கொழும்பு – 12**

**இப்படத்தில் 6 வித்தியாசங்கள் உள்ளன**

## கண்டுபிடியுங்கள்!




**குட்டீஸ்! இலக்கங்களை இணைத்து இவர் யார் என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.**



**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (IVDei) எளிமையான முறையில் விளங்கிக் கொள்ளும் வகையில் மாணவர் மறைவழி என்ற நூலை தொகுத்து இருக்கின்றார். மாணவர்கள், சிறுவர்கள் எவ்வாறு மறைக்கல்வி அனுபவங்களை பெறவேண்டும், அதை எவ்வாறு வாழ்வாக்கி வாழ வேண்டும் என்பதை இந்நூல் நமக்கு சொல்லி நிற்கிறது. இப்புத்தகம் மாணவருக்கு, ஆசிரியர்களுக்கு, பெற்றோர்களுக்கு ஒரு பொக்கிஷமாக கிடைத்திருக்கிறது. இப்புத்தகத்தில் இருந்து சில மறை அனுபவங்களை சிறுவர்களே உங்களுக்கு பயிற்சியாக தருகின்றோம். கற்று, பயிற்சி பெற்று மறைவாழ்வை அனுபவமாக்குங்கள். அதை அன்றாட வாழ்வில் வாழ பழகிக் கொள்ளுங்கள்.**

## 1. பொதுவான நல்ல பழக்கங்கள்.

**ஒருவர் நல்ல பழக்கங்களால் நல்லவர் ஆகிறார்.**
**தீய பழக்கங்களால் தீயவர் ஆகின்றார்.**
**நல்ல பழக்கங்களால் நீர் நல்லவர் ஆக விருப்பமா?**
**தீய பழக்கங்களால் தீயவராக விருப்பமா?**
**நீங்கள் என்ன செய்ய விரும்புகின்றீர்?**

### அறிவு

எதையும் அறிவதில் ஆர்வமாயிருங்கள்
உண்மைக்கும் நீதிக்கும் தலைவணங்குங்கள்
எவர்மட்டிலும் எச்சரிக்கையாயிருங்கள்
எதையும் சிந்தித்துச் செய்யுங்கள்
முடிவெடுக்குமுன் கடவுளிடம் ஆலோசனை கேளுங்கள்.



### கடமை

செய்வதைச் சொல்லுங்கள்,
சொல்வதைச் செய்யுங்கள்
மனச்சான்றின் குரலுக்குப் பணியுங்கள்
உதவி செய்வோருக்கு நன்றி சொல்லுங்கள்
செய்வதை மனம் வைத்துச் செய்யுங்கள்
பலனை எதிர்பாராது உதவி செய்யுங்கள்



### அயலார்

அயலாரோடு நல்லுறவை வளருங்கள்
அவர்களையும், உடமைகளையும் மதியுங்கள்
எல்லோருக்கும் நன்மையை விரும்புங்கள்
மற்றவர்களின் முன்னேற்றத்தில் மகிழுங்கள்
மற்றவர்களிடம் நன்மைகளை மட்டும் பாருங்கள்



### பெரியோர்

பெரியோருக்கு மதிப்புக் கொடுங்கள்
அவர்களோடு மரியாதையாகப் பேசுங்கள்
அவர்கள் சொல்வதுபோல் நடவுங்கள்
அவர்களிடம் இருந்து நல்லபெயர் வாங்குங்கள்
அவர்களின் அறிவுரைகளை எழுதி வையுங்கள்



### உழைப்பு

எறும்புபோல் எப்போதும் சுறுசுறுப்பாயிருங்கள்.
கடினமாக வேலை செய்யுங்கள்
அளவோடு ஓய்வெடுங்கள்
சிறுவயதிலேயே சேமிக்கப் பழகுங்கள்
எதிலும் முயற்சி எடுத்து முன்னேறுங்கள்



### கட்டுப்பாடு

பசியெடுத்தாலும் அளவோடு சாப்பிடுங்கள்
குறிப்பிட்ட நேரத்தில் உணவருந்துங்கள்
உடல், உடைகளைத் தூய்மையாக வைத்திருங்கள்
உள்ளவற்றில் நிறைவுகொள்ளுங்கள்
எவரையும் குறைகூறுவதை நிறுத்துங்கள்.



### கண்ணியம்

துன்பம் வரும்போது தைரியமாயிருங்கள்
விடாமுயற்சியால் வெற்றியைத் தேடுங்கள்.
பாவச் சூழலில் உம்மைப் பாதுகாருங்கள்
தோல்வியை வீரத்தோடு எதிர்கொள்ளுங்கள்
எப்போதும் உண்மைக்குச் சாட்சியாயிருங்கள்



### பணி

சமாதானம் செய்ய முன்வாருங்கள்
தீமை செய்வோருக்காக மன்றாடுங்கள்
தேவைப்படுவோருக்கு உதவி செய்யுங்கள்
வருந்துவோரை மன்னியுங்கள்
மனநிறைவோடு கொடுங்கள்



தொடரும்

# பூமியின் தேவதை புனிதையானாள்

**புரட்டாதி 4**



- 1910ஆம் ஆண்டு ஆவணி 26ம் நாள் அல்பேனிய நாட்டில் பிறந்தார். இயற்பெயர் ஆக்னஸ் கொன்சா பேரியோ என்பதாகும்.
- துறவற வாழ்வை மேற்கொள்ள லொரேட்டா என்னும் சகோதரிகளின் சபையில் மறைப்பணியாளராக இணைத்துக் கொண்டார்.
- 1931ஆம் ஆண்டு வைகாசி 24ந் திகதி தனது முதல் வார்த்தைப்பாட்டை அளித்தார். மறைபரப்பாளரின் பாதுகாவலியான விசியே நகர் தெரேசாவின் பெயரை தேர்ந்து கொண்டார்.
- 1937ஆம் ஆண்டு வைகாசி 14ஆம் திகதி தனது இறுதி அர்ப்பண வார்த்தைப்பாட்டுடன் பணியை தொடங்கினார்.
- டார்ஜிலிங்கு தியானத்திற்காக பயணம் செய்தபோது அழைப்பிற்குள் அழைப்பை உணர்ந்தார். துறவற உடைகளைக் களைந்து நீல கரையிடப்பட்ட வெண்ணிற பருத்தி புடவை அணிந்தவராய் குடிசைப்பகுதிக்குள் பணி செய்தார்.
- 1950ஆம் ஆண்டு ஐப்பசி 7ந் திகதி பிறர் அன்பின் பணியாளர் சபையை தொடங்க திருச்சபை அன்னைக்கு அனுமதி வழங்கியது. 13 உறுப்பினர்களைக் கொண்டு தொடங்கப்பட்டது. இன்று 6000க்கும் மேலான அருட்சகோதரிகளால் நடாத்தப்படும் அனாதை இல்லங்களையும், எயிட்ஸ் நல வாழ்வு மையங்களையும், தொண்டு நிறுவனங்களையும், முதியோர், மது அடிமைகள், ஏழை எளியோர், பராமரிப்பு என பல பணிகளையும் செய்து வருகின்றார்.
- இவர்கள் ஏறத்தாழ 100 நாடுகளில் 517 தொண்டு நிறுவனங்களை கொண்டு பணிபுரிந்து வருகின்றார்கள்.
- பத்மஶ்ரீ விருது, ஜவகர்லால் நேரு விருது, பாரத ரத்னா போன்ற பல விருதுகளுக்கு சொந்தக்காரர் நம் அன்னை. நோபல் பரிசை வென்ற இந்தியப் பெண்களில் ஒருவராகவும் இருக்கின்றார்.
- 1997ல் இறைவனடி சேர்ந்தார். இவர் உருவத்தில் சிறியவர். பாறையைப் போன்ற நம்பிக்கை உடையவர் இரும்பு போன்ற மனம், இதயம் நிறைந்த அன்பு கொண்டவர். மக்கள் மனங்களில் இன்னும் புனிதையாகவே வாழ்ந்து வருபவர். கடந்த வருடம் புரட்டாதி 4ம் திகதி நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் அன்னை தெரேசாவை திருச்சபையின் புனிதர் நிலைக்கு உயர்த்தினார். இன்று இவர் புனிதராக்கப்பட்ட ஒரு வருடத்தை நினைவுகூறுகின்றோம். அன்னை தெரேசாவிடம் மன்றாடி, வரங்களைப் பெற்றுக் கொள்வோம்.

# க. பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான முன்னோடி வினாத்தாள் – 2017

மாணவர் ஒளி

பகுதி 2

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01.

1) இறை வெளிப்பாட்டின் மூலங்கள் இரண்டையும் தருக.
2) தூய பவுல் திருமுகங்களை எழுதியதன் நோக்கங்கள் இரண்டு தருக.
3) உன்னத குருவின் வேண்டுதலின் இரண்டு பகுதிகளைத் தருக.
4) திருப்பலிக்குத் தலைமை தாங்கும் குருவானவரின் செபங்கள் இரண்டு தருக.
5) உன்னத குருவின் வேண்டுதலின் இரண்டு பகுதிகளைத் தருக.
6) திருப்புகழ்மாலையில் பயன்படுத்தப்படும் புகழ்ச்சிப்-பாடல்கள் இரண்டு தருக.
7) திருவிவிலியத்தில் அடையாளங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்ட நூல்கள் இரண்டைக் குறிப்பிடுக.
8) தூய பவுலின் இரண்டாம் தூதுரைப் பயணத்தில் பயணத் தோழர்களாக இணைந்துகொண்ட இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
9) எழுபத்திரண்டு பேரை மறைத்தூதுப் பணிக்காக அனுப்ப முன் இயேசு கூறிய அறிவுரை இரண்டு எழுதுக.
10) மூவொரு கடவுள் தம்மை வெளிப்படுத்திய சந்தர்ப்பம் ஒன்று தருக.

02.

1) தூய பேதுருவைத் திருச்சபையின் தலைவராக நியமித்த போது இயேசு கூறிய வார்த்தைகளை எழுதுக.
2) இயேசு பேதுருவிடம் ஒப்படைத்த மூவித பொறுப்புக்கள் எவை?
3) பாடசாலையில் நீர் மாணவத் தலைவராக நியமிக்கப்-பட்டால் தூய பேதுருவானவரின் வாழ்க்கை முன்மாதிரிகையைப் பின்பற்றி உண்மையான கிறிஸ்தவத் தலைவராக செயற்பட நீர் செய்யக்கூடிய செயல்கள் ஐந்து தருக.

(2 + 3 + 5 =10 புள்ளிகள்)

03.

1) எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினரின் செயல்கள், போதனைகள் பற்றி திருவிவிலியத்தில் குறிப்பிடப்படும் நூல்கள் இரண்டு தருக.
2) இறைவாக்குரைக்கும் போது இறைவாக்கினர்கள் பயன்படுத்திய சொற்பதங்கள் மூன்று எழுதுக.
3) இறைவாக்கினரின் அழைப்பு வழியாக உமது வாழ்வில் பின்பற்றக்கூடிய முன்மாதிரிகைகள் ஐந்து எழுதி விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04.

1) “அபாத்” “ஷமார்” என்ற சொற்பதங்களின் பொருளை எழுதுக.
2) சூழலைப் பாதுகாப்பது தொடர்பாக இறைவன் மனிதனிடம் ஒப்படைத்த பொறுப்புக்கள் யாவை?
3) சூழலைப் பாதுகாப்பது தொடர்பாக நீர் மேற்கொள்ளக் கூடிய செயல்கள் ஐந்தை விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05.

1) திருவருகைக் காலத்தின் பிரதான இரு பிரிவுகளும் எவை?
2) பொதுக் காலத்தில் கொண்டாடப்படும் முக்கிய விழாக்கள் 3 தருக.
3) திருப்பலியை அர்த்தமுள்ளதாக்க நீர் முன்வைக்கும் கருத்துக்கள் ஐந்தை எழுதி விளக்குக.

(06+ 3 + 5 = 10 புள்ளிகள்)

06.

1) புதிய உடன்படிக்கையில் திருப்பலியின் வேறு பெயர்கள் இரண்டு தருக.
2) நற்கருணையின் முன்னடையாளங்கள் மூன்று தருக.
3) நற்கருணை ஆண்டவருக்கு ஆராதனை செலுத்த நீர் மேற்கொள்ளக்கூடிய ஐந்து செயல்கள் தருக.

(2 + 3 + 5 =10 புள்ளிகள்)

07. பின்வரும் இரண்டு விடயங்களுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) பரிசுத்த வாரம்
2) தூய அன்னை திரேசா
3) ஆன்மீக இரக்கச் செயல்கள்
4) குருத்துவத்தைப் பெற தகுதிவாய்ந்தவர்கள்

(5 + 5 = 10 புள்ளிகள்)

# இல்லத்தில் இனியவராகிட

ஒருவர் வாழும் இடம் இல்லம். அது ஒருவரைப் பேணி வளர்க்கும் இடமும் கூட. வீடுதான் ஒருவர் தம் அன்பைப் பரிமாறிக் கொள்வதற்கான சூழலை உருவாக்கித் தருகிறது. அங்கு இளைப்பாறத் தங்குகிறோம். சங்கமமாகிறோம். மனநிறைவு பெறுகிறோம். பாசமும் நேசமும் எந்த வீட்டில் நிறைந்திருக்கிறதோ அந்த வீடு இனிமை தவழும் இடமாகவும், வாழத் தகுதி அமைந்ததாகவும் ஆகிவிடுகின்றது. வீடே மனித வாழ்வின் ஆரம்பப் பள்ளி. நன்னடத்தையும் கல்வியைப் போலவே வீட்டிலிருந்தே தொடங்க வேண்டும்.

உங்களுக்கும் மற்றவர்களுக்கும் உங்கள் இல்லம் மெய்யாகவே இனிமை நிறைந்ததாக மாறும் வண்ணம், உங்களால் இயன்றதெல்லாம் செய்யுங்கள். கடமைப் பொறுப்புள்ள மகனாகவோ, மகளாகவோ செயல்படுங்கள். ஏனெனில் கடமையை நிறைவேற்றும் பாதை புகழின் உச்சிக்கு இட்டுச் செல்லும். கடமையுணர்வு உள்ளுணர்வின் தூண்டுதலாலும், வலியுறுத்தலாலும் ஏற்படுகிறது. செய்ய வேண்டிய செயல்களைக் கடமை உணர்வோடும், தொண்டுணர்வோடும், உள்ளார்ந்த ஆர்வத்தோடும் நிறைவாகச் செய்ய வேண்டும். கட்டாயத்துக்காகவோ, தண்டனைக்கு அஞ்சியோ, எதையும் பரிசாகப் பெறலாம் என்று எதிர்பார்த்தோ செய்யாமல் அன்புப் பிடிப்போடு செய்தல் வேண்டும்.


கடமையுணர்வு ஒரு மனிதரைத் தியாகங்கள் செய்யத் தூண்டுகிறது. ஒருவரது நல்லொழுக்க நடத்தையை வலுப்படுத்துகிறது. கட்டுப்பாடு உள்ளவராக ஆக்குகிறது. கடமையிலிருந்து பிறழ்வது பொறுப்பற்ற நடத்தைக்கு வழிவகுக்கும்.

கடவுளுக்கு அடுத்தபடி அன்பு பாராட்டுவதற்கும், மரியாதை காட்டுவதற்கும், கீழ்ப்படிந்து நடப்பதற்கும் உரியவர்கள் நம் பெற்றோர்கள். எனவே பெற்றோரின் சொற்படி நடந்து அவர்களை நேசியுங்கள். அவர்களை மதித்து எல்லாச் செயலிலும் அவர்களின் அறிவுரைகளைப் பின்பற்றுங்கள். தங்கள் மகன் கடமையுணர்வும் அறிவாற்றலும் உடையவன் என்பது பெற்றோர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். அதேபோன்று கடமையுணர்வும் அறிவாற்றலுமுள்ள மகளை விலைமதிப்புள்ள அணிகலன்களைக் காட்டிலும் உயர்ந்தவளாகப் போற்றுவர். உங்கள் பெற்றோர் உங்கள் மேல் பொழிந்த பாசம், நேசம் அனைத்தையும், செய்துவந்த தியாகங்களையும் எப்போதும் நினைவில் நிறுத்துங்கள். அவர்கள் உங்களைக் கண்டித்துத் திருத்தும்போது நல்ல மனதுடன் ஏற்றுக்கொள்ளுங்கள். அவர்கள் மீது வைராக்கியமோ, வெறுப்போ கொள்ளாதீர்கள்.

உங்கள் சகோதரன், சகோதரி ஆகியோரிடம் இனியவராகப் பழகுங்கள். தூய அன்பே பரிவுணர்வாக மலர்கின்றது. உங்களுக்கு வாய்ப்புக் கிட்டும்போதெல்லாம் பிறருக்கு உதவி செய்பவராகவும், இனியவராகவும் இருக்குமாறு உங்களையே பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள். இத்தகைய நற்பண்பு நலன்கள்தான், மக்கள் நடுவே நாம் செல்லும்போது நம்மை மதிப்பிற்குரியவராக்கும்.

குழந்தைகளுக்கு இன்பமூட்டுவது எவ்வாறு என்றும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும். அவர்களுக்குச் சுவையான கதைகளை ஆர்வமாகக் கேட்கும் வகையில் எவ்வாறு சொல்வது என்று அறிந்திருக்க வேண்டும். அவர்களுக்குத் தவறான வழிகாட்டியாக இருப்பதைத் தவிர்ப்பது நம் கடமை. பயனற்றவைகளைப் பேசி வீணாகப் பொழுது போக்குவதை விலக்குதல் நலம்.

உங்கள் உறவினர்களையும், விருந்தினர்களையும் வரவேற்று உபசரிப்பது எவ்வாறு என்று உங்கள் பெற்றோரிடம் கேட்டுக் கொள்ளுங்கள். புதியவர்கள் உங்கள் வீட்டுக்கு வந்திருக்கும்பொழுது அந்நியரைப் போல் அவர்களை நோக்குதல் நன்றன்று. மாறாக அவர்களை அன்புடன் வரவேற்று, உங்கள் பெற்றோருக்கு உடனே அவர்கள் வருகையைத் தெரிவியுங்கள். அருள்கூர்ந்து அமருங்கள் என்று சொல்லி ஓர் இருக்கையில் அவர்களை அமரச் செய்யுங்கள். இத்தகைய வரவேற்பு விருந்தினர்களை அன்புடன் ஏற்பதற்கு நீங்கள் தயாராக



இருப்பதைக் குறிப்பாக உணர்த்தும். விருந்தினர் உள்ளத்தை உவகையால் நிரப்பும்.

நீங்கள் வீட்டை விட்டு வெளியே போகும்போது எங்கே செல்லவிருக்கிறீர்கள், எப்போது மீண்டும் திரும்புவீர்கள் ஆகியவற்றை உங்கள் பெற்றோருக்குத் தெரியப்படுத்தியபின் செல்லுங்கள். சான்றாக “அம்மா நான் பாடசாலைக்கு போகின்றேன்” என்றோ “நான் விளையாடச் செல்கிறேன், மாலை ஆறுமணி அளவில் திரும்பி விடுவேன்” என்றோ சொல்லிவிட்டுச் செல்லுங்கள்.

நீங்கள் வழக்கமாகச் செல்லும் இடங்கள் அல்லாமல் வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தால், உங்கள் அப்பாவிடம் அனுமதி பெற்றுச் செல்லுங்கள். எடுத்துக்காட்டாக, அப்பா புகைவண்டி நிலையத்திற்கு நான் போய்வரட்டுமா? என்று கேட்கலாம், அல்லது அம்மா தயவுசெய்து நம் பக்கத்து வீட்டிற்குச் சென்று என் தோழர்களுடன் விளையாடி விட்டு வரவா? என்று கேட்கலாம்.

நீங்கள் பயிலும் பாடசாலை அல்லது கல்லூரி முடித்தபின் வேறு எங்கும் செல்ல வேண்டாம் என்று உங்கள் பெற்றோர் அறிவுறுத்தலாம். அப்போது வேறு யாராவது உங்களை எங்கேயாவது வருமாறு கட்டாயப்படுத்தினாலும் பெற்றோர் சொல்லியவாறு வீடு போய்ச் சேருங்கள்.

பிறருடன் பகைமை பாராட்டுவதோ, தன்னலத்துடன் முரண்படுவதோ நல்லது அல்ல, அத்தகைய தகாத செயல்களால் நீங்கள் உண்மைக்குக் களங்கம் ஏற்படுத்துகிறீர்கள், அல்லது தன்னலத்துடன் நடந்து கொள்வதால் உங்களையே தாழ்த்திக் கொள்வதோடு உங்கள் நண்பர்களையும் இழக்கக் கூடும். உங்களை அழைக்கும்போது தட்டிக் கழித்துவிட்டுப் போவது பண்பற்ற செயலாகும். உங்களிடம் ஏதேனும் ஒரு உதவி கோரும்போது செய்ய முடிந்தும் மறுப்புக் கூறுவது நீங்கள் ஒரு தன்னலக்காரர் என்று நிரூபிப்பதாக ஆகிவிடும்.

உங்கள் குடும்ப இரகசியங்களை அடுத்தவர் எவரிடமும் தெரிவிக்க வேண்டாம். நீங்கள் செய்து முடிக்க வேண்டிய வீட்டுப் பாடங்களைக் குறித்த நேரத்திற்குள் செய்து முடியுங்கள். மற்ற வேலைகளை...

தொடர்ச்சி 15ம் பக்கம்

# அன்னை மரியாவைப்போல் நம் சமூகத்திற்கு இயேசுவைக் கொணர்வோம்

முதிர்ந்த வயதில் எலிசபெத் கருவுற்றிருக்கின்றார் என்ற செய்தியை, வானதூதர் வழியாக அறியவந்த அன்னை மரியா, எலிசபெத்துக்கும், இவ்வுலகம் முழுமைக்கும் எடுத்து வந்தது இயேசுவையே என, மரியின் விண்ணேற்பு விழாவன்று மூவேளை செப உரை வழங்கினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

"பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர், உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே" என எலிசபெத், அன்னை மரியாவை நோக்கி வாழ்த்தியதையே, நம் "அருள் நிறை மரியே" செபத்தில் கூறுகிறோம் என்பதையும் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், முதிய வயதில் குழந்தைப் பேறடைந்த சக்கரியா, எலிசபெத் தம்பதியருக்கு, அன்னை மரியாவின் வருகையுடன், கூடுதல் மகிழ்ச்சி பொங்குகிறது, ஏனெனில், வாழ்வுக்கும் குடும்பத்திற்கும், மக்களின் மீட்புக்கும் அர்த்தம் தருபவர், அன்னை மரியுடன் வந்துள்ளார் என்றார்.

எளியோர் மற்றும் ஏழைகளின் வழியாக தன் மீட்புத்திட்டத்தை இறைவன் நிறைவேற்றுகிறார் என, அன்னை மரியா பாடும் புகழ் பாடல் குறித்தும் தன் மூவேளை செப உரையில் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எலிசபெத்தின் வீட்டில் மகிழ்ச்சியை மட்டுமல்ல, விசுவாசத்தையும் அதன் வழி வரும் நம்பிக்கை, செபம் மற்றும் வாழ்த்தையும் நாம் காண்கிறோம் என்றார்.



அன்னை மரியின் விண்ணேற்புப் பெருவிழாவை சிறப்பிக்கும் நாம், இயேசு கிறிஸ்து எனும் விலை மதிப்பற்ற கொடையை நமக்கும், நம் குடும்பங்களுக்கும், சமுதாயத்திற்கும் கொணர வேண்டுவோம் எனவும் மக்களை நோக்கி விண்ணப்பித்தார், திருத்தந்தை.

கருணையை வழங்கவும், மன்னிக்கவும், பிறரைப் புரிந்து அவர்களுக்கு ஆறுதலளிக்கவும் தேவையான பலத்தையும் வேண்டுவோம் என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்நாட்களில், உலகின் பல்வேறு பகுதிகளில் இயற்கை பேரிடர்களாலும், சமூகப் பதட்ட நிலைகளாலும், மோதல்களாலும் துன்புறும் மக்களின் ஏக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும், அமைதியின் அரசியாம் அன்னை மரியிடம் ஒப்படைப்பதாக எடுத்துரைத்தார்.




## கடவுள் ஒருபோதும் கைவிடுவதில்லை என்பதை நினைவில் வைக்க..



நம் வாழ்வில் கவலைமிகுந்த நேரங்களில், கடவுள் நம்மைக் கைவிடவே மாட்டார் என்ற உணர்வு நம்மில் மேலோங்கி இருக்கவேண்டுமென்று கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். மேலும், 2018ம் ஆண்டு ஆவணி 21ம் திகதி முதல் 26ம் திகதி வரை, அயர்லாந்து நாட்டின் டப்ளினில் நடைபெறவிருக்கும் 9வது உலக குடும்பங்கள் மாநாட்டின் நிகழ்ச்சிகள் பற்றி, செய்தியாளர்கள் கூட்டத்தில் வெளியிட்டுள்ளார், பேராயர் Diarmuid Martin.

அயர்லாந்தின் Knock அன்னை மரியா திருத்தலத்தில், செய்தியாளர்கள் சந்திப்பை நடத்திய பேராயர் Martin அவர்கள், வருகிற ஆண்டு ஆவணி 21ம் திகதி அயர்லாந்தின் அனைத்து மறைமாவட்டங்களிலும் இம்மாநாட்டின் தொடக்க நிகழ்வும், 22ம் திகதி முதல் 24ம் திகதி வரை மாநாடும், 25ம் திகதி குடும்பங்களின் விழாவும், 26ம் திகதி நிறைவு நிகழ்வும் நடைபெறும் என அறிவித்தார்.

**"குடும்பத்தின் நற்செய்தி : உலகிற்கு மகிழ்ச்சி"**

என்ற தலைப்பில், 9வது உலக குடும்பங்கள் மாநாடு நடைபெறவுள்ளது.

# புலம்பெயர்ந்தோரை வரவேற்றலும் வாழவைத்தலும், சமூகக் கடமை



குடியேற்றத்தாரர்களையும், புலம்பெயர்ந்தோரையும் வரவேற்று, பாதுகாத்து, அவர்களை ஊக்குவித்து, சமூகத்தோடு இணைக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமை என்ற கருத்தை மையமாக வைத்து, "உலக புலம்பெயர்ந்தோர் நாள்" செய்தியை வெளியிட்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.


வரும் ஆண்டு தை மாதம் 14ம் திகதி சிறப்பிக்கப்படவுள்ள, குடியேற்றதாரர் மற்றும் புலம்பெயர்ந்தோர் உலக நாளுக்கென செய்தி வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், போர் மற்றும் ஏழ்மையின் காரணமாக குடிபெயரும் மக்கள், நம் கதவுகளைத் தட்டும்போது, இயேசுவைச் சந்திப்பதற்குரிய வாய்ப்பாக அதனை ஒவ்வொருவரும் எண்ணிச் செயல்படவேண்டும் என அதில் கூறியுள்ளார். திருஅவை கோட்பாடுகளை மையமாக வைத்து 4 முக்கிய தலைப்புக்களை முன்வைத்துள்ளார் திருத்தந்தை.

**முதல் கருத்தாக, குடியேற்றதாரர் மற்றும் புலம்பெயர்ந்தோர் வரவேற்கப்படவேண்டும்** என உரைக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பாதிப்புகளிலிருந்து அடைக்கலம் தேடிவருவோர், சட்டரீதியான பாதுகாப்புடன் நுழைவதற்கு ஏனைய நாடுகள் உதவுவதுடன், மனிதாபிமானமுள்ள பாதைகள் திறக்கப்படவேண்டும் என விண்ணப்பித்துள்ளார்.

ஒரு நாட்டின் மக்களை முற்சார்பு எண்ணங்களுடன் மொத்தமாக ஒதுக்குதல், புகலிடம் தேடும் மக்களை தடுப்புக்காவல் மையங்களில் வைத்தல் போன்றவை குறித்தும் தன் செய்தியில் கவலையை வெளியிட்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். **புகலிடம் தேடுவோருக்கு பாதுகாப்பு அளிக்கப்படவேண்டியதை தன் இரண்டாவது கருத்தாக** வலியுறுத்தும் திருத்தந்தை, புலம்பெயர்ந்தோர் பாதுகாப்புடன் வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும், அவர்களின் குழந்தைகள் கல்வி கற்பதற்கும் இருக்கும் உரிமைகள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும் என கேட்டுள்ளார்.

**புகலிடம் தேடி, புதிதாக நாட்டிற்குள் நுழையும் ஒவ்வொருவரும், தாங்கள் மக்களுள் ஓர் அங்கம் என்பது உணர வைக்கப்பட்டு, அவர்களின் வாழ்வு ஊக்கப்படுத்தப்படவேண்டும் என்பதை, தன் மூன்றாவது கருத்தாக** வலியுறுத்தியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். புகலிடம் தேடுவோர், அவர்கள் குடிபெயர்ந்துள்ள புதிய சமூகத்தோடு இணைக்கப்பட உதவ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் நான்காவது கருத்து.

புதிய சமுதாயத்தில் அவர்களை ஒருங்கிணைப்பது என்பது, அவர்களின் தனித்தன்மையை, அதாவது அவர்களுக்கே உரிய கலாச்சாரத்தை அழிப்பதன் வழியாக அல்ல என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார் திருத்தந்தை. இருவேறு கலாச்சாரங்கள் தங்களுக்குள் சந்திக்கும் வாய்ப்பை ஆதரிக்கவேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைத்துள்ளார், திருத்தந்தை. வரவேற்றல், பாதுகாத்தல், ஊக்கமூட்டல், மற்றும், சமூகத்திற்குள் ஒன்றிணைத்தல் என்ற நான்கு கருத்துக்களையும் தன் செய்தியில் முன்வைத்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவற்றின் வெற்றிக்கு, அரசியல் தலைவர்கள் மற்றும் சமூகத் தலைவர்களின் ஒத்துழைப்பிற்கும் அழைப்புவிடுத்துள்ளார்.



## கோசொவோவில் புனித அன்னை தெரேசா பெயரில் பேராலயம்

கொல்கத்தா புனித அன்னை தெரேசா அவர்கள் மரணமடைந்ததன் இருபதாம் ஆண்டு நிறைவு நாளன்று, கோசொவோ (Kosovo) நாட்டில், புனித அன்னை தெரேசாவுக்கு பேராலயம் ஒன்று அர்ப்பணிக்கப்படவுள்ளது. கோசொவோவின் Pristinaவில், வருகிற புரட்டாதி 5ம் திகதி நடைபெறவுள்ள இந்த பேராலய அர்ச்சிப்பு நிகழ்வில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பிரதிநிதியாக, அல்பேனியாவில் பிறந்த கர்தினால், Ernest Simoni அவர்கள் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வு குறித்து CNS கத்தோலிக்கச் செய்தியிடம் பேசிய, பேரருள்திரு Shan Zefi அவர்கள், இந்நிகழ்வு, புனித அன்னை தெரேசா அவர்கள் பிறந்த நாளான ஆவணி 26ம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் எனவும், இந்த பேராலயத்திற்கு கோசொவோ நிர்வாகம் ஆதரவளித்ததை நன்றியோடு நினைப்பதாகவும் கூறினார்.

கோசொவோ நாட்டில் வாழ்கின்ற ஏறத்தாழ 21 இலட்சம் மக்களில், குறைந்தது 90வீதத்தினர் அல்பேனிய நாட்டு முஸ்லிம்கள். இந்நாடு 2008ம் ஆண்டில் செர்பியாவிடமிருந்து விடுதலையடைந்தது. மாசிடோனியாவின் ஸ்கோப்ஜேயில் 1910ம் ஆண்டு ஆவணி 26ம் திகதி பிறந்த புனித அன்னை தெரேசா, 1997ம் ஆண்டு புரட்டாதி 5ம் திகதி கொல்கத்தாவில் காலமானார்.

# திருத்தந்தையின் 'உலக புலம்பெயர்ந்தோர் நாள்' செய்திக்கு வரவேற்பு



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 104வது உலக குடியேற்றதாரர் மற்றும் புலம்பெயர்ந்தோர் நாளுக்கென, வெளியிட்ட செய்தியை வரவேற்றுள்ளது, பிரித்தானியாவின் கத்தோலிக்க பிறரன்பு அமைப்பு ஒன்று. "குடியேற்றதாரரையும், புலம்பெயர்ந்தோரையும் வரவேற்று, பாதுகாத்து, அவர்களை ஊக்குவித்து, சமூகத்தோடு இணைக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமை" என்ற கருத்தை மையமாக வைத்து, திருத்தந்தை வெளியிட்ட செய்தி, மிகவும் நலிந்த மக்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள திருஅவையோடு, அரசியல் தலைவர்களும், பொது மக்கள் சமுதாயமும் இணைய வேண்டுமென அழைப்பு விடுக்கின்றது.

இச்செய்தி பற்றி, வத்திக்கான் வானொலியில் கருத்து தெரிவித்த, CAFOD என்ற பிரித்தானிய கத்தோலிக்க பிறரன்பு அமைப்பின் கொள்கைப் பிரிவின் தலைவர் Graham Gordon அவர்கள், திருத்தந்தையின் இச்செய்தி, குடியேற்றதாரர் மற்றும், புலம்பெயர்ந்தோரைப் பாதுகாப்பதற்கு அரசியல் தலைவர்களுக்கு மேலும் அழுத்தம் கொடுக்கின்றது என்று தெரிவித்தார்.

குடிபெயர்ந்துள்ள அல்லது புலம்பெயர்ந்துள்ள மக்களில் பாதிப்பேர் 18 வயதுக்குட்பட்டவர்கள் என்றும், இவர்களுக்கே அதிகப் பாதுகாப்பு தேவைப்படுகின்றது என்றும் கூறினார், Gordon.




தொகுப்பு : ஓய்வு பெற்ற பேராயர்
அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை
கொழும்பு உயர் மறைமாவட்டம்



கத்தோலிக்க குடும்ப மறைக்கல்வி
Catholic Family Catechism

## 2. இறைவன்

**அறிமுகம் :** கிறிஸ்தவம் இறைவனில் நம்பிக்கை கொண்டுள்ளது. ஆனால் கிறிஸ்தவ இறைவன் மற்றைய சமயக் கடவுளர்களிடமிருந்து வேறுபட்டது. பல் சமயங்கள் இறைவனைப் பற்றி எடுத்தியம்புகின்றன. இக்கடவுளர்களில் சிலர் வட்டாரங்களினதும், பிரதேசங்களினதும், பாதுகாவலர்களாவர். சில தருணங்கள் இக் கடவுளர்கள் ஒருவரோடு ஒருவர் போராடுகின்றனர். பல தடவைகளில் ஒரு கடவுள் இன்னொரு கடவுளின் வல்லமை கொண்டிராதவராக கணிக்கப்படுகின்றார்.

மற்றைய பல சமயங்களிலும் அவற்றின் தத்துவங்களிலும் பேசப்படும் கடவுளர்கள் மனித பலவீனங்களை கொண்டவர்களாக விளங்குகின்றனர். அவைகள் சர்வ வல்லவர்களாகவோ அனைத்து சக்தி வாய்ந்தவர்களாகவோ இல்லை.

கிறிஸ்தவர்களின் கடவுள் சர்வ வல்லவராகவும், அனைத்து சக்தி வாய்ந்தவராகவும் உள்ளார். அவர் அனைத்துக்கும் மேலானவர், அனைத்தையும் அறிந்தவர். அனைத்திலும் மேன்மை உடைய-வராவார். உலகளாவிய ரீதியில் காண்பவை. காணப்படாதவை அனைத்தையும் படைத்தவர் அவரே. அவர் தன்னிகரில்லாதவர். எனவே கிறிஸ்தவத்தில் கடவுளர்கள் இல்லை. ஒரே கடவுள் தான் உள்ளார். இந்நூலானது அந்த ஒரே கடவுளையே எடுத்திய-ம்புகின்றது. நாம் இறைவனையோ அவரைப்பற்றிய விளக்கத்தையோ அறியும் திறனற்றவர்கள் நமது வரையரைக்குட்பட்ட அறிவாற்றலால், அவரது எல்லையற்ற உண்மையியலை புரிந்து கொள்ள முடியாது. நமது மானிட உயிர் வாழ்வின் முடிவை நாம் பெற்றுக்கொள்ள அவசியமான அனைத்தையும் கடவுள் தாமே நமக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

மேலுலகில் தமது இன்ப சுகம் தேடி வாழும் ஒருவர் அல்ல. மாறாக உலகனைத்தின் மீதும் முக்கியமாக மானிடர் மட்டில் ஆழ்ந்த அக்கறையும் கொண்டவராக இருக்கின்றார்.

**16. கடவுள் யார்?**
அனைத்தையும் படைத்த எல்லாம் வல்ல அனைத்திலும் மேன்மையானவர். அவர் தமது தந்தை.

கடவுள் மோசேயை நோக்கி, ”இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே” என்றார். மேலும் அவர், “நீ இஸ்ரயேல் மக்களிடம், ”இருக்கின்றவர் நானே” என்பவர் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல்” என்றார். கடவுள் மீண்டும் மோசேயை நோக்கிப் பின்வருமாறு கூறினார் ”நீ இஸ்ரயேல் மக்களிடம், “உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள், என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார்” என்று சொல். இதுவே என்றென்றும் என்பெயர் தலைமுறை தலைமுறையாக என் நினைவுச் சின்னமும் இதுவே! (வி.ப 3:14-15)

**17. இறைவன் அனைத்திலும் மேன்மையானவர் என்பதன் பொருள் என்ன?**
இறைவன் அனைத்திலும் மேலானவர் என்றால், அவரிலும் மேலான இன்னொருவர் இல்லை. அவரே அனைத்துப் படைப்புகளுக்கும் மேலானவர். அனைத்தின் மேலும் அவருக்கு வல்லமையுண்டு. அவர் ஒருவரை நம்பியோ, நம்ம வேண்டியோ தேவையோ அற்றவராக இருக்கின்றார்.

**18. இறைவன் எல்லாம் வல்லவர் என்பதன் பொருள் என்ன?**
அதாவது, இவ்வுலகிலோ, மேலுலகிலோ நரகத்திலோ, இறைவனிலும் வல்லவரும் மேலானவருமான ஒருவர் இல்லை என்பதே பொருள். அவர் அனைத்தையும் செய்யக்கூடியவர். அனைத்தையும் படைத்தவராதலால், படைப்பனைத்தையும் தாங்கிப் பாதுகாக்கின்றார்.

**19. இறைவன் நித்தியத்துக்கும் நிலைபேறுடையவர் என்பதன்பொருள் என்ன?**
இறைவன் என்றும் இருந்தவர் இருப்பவர் என்பதேயாகும்.

கடவுள் மோசேயை நோக்கி, ”இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே” என்றார். மேலும் அவர், ”நீ இஸ்ரயேல் மக்களிடம், ”இருக்கின்றவர் நானே” என்பவர் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல்” என்றார்.கடவுள் மீண்டும் மோசேயை நோக்கிப் பின்வருமாறு கூறினார் ”நீ இஸ்ரயேல் மக்களிடம், ”உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள்-என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார்” என்று சொல். இதுவே என்றென்றும் என்பெயர் தலைமுறை தலைமுறையாக என் நினைவுச் சின்னமும் இதுவே! (வி.ப 3:14-15

**20. எத்தனை கடவுளர் உள்ளனர்?**
கடவுள் ஒருவர் மட்டுமே. பல கடவுளர் இருப்பவராயின், ஒரு கடவுளும் சர்வ வல்லமை நிறைந்தவராகவோ, அனைத்து சக்தி வாய்ந்தவராகவோ இருக்க முடியாது. அவ்வாறாயின் ஒரு கடவுளும் மேன்மையானவராக இருந்து விட முடியாது. சர்வ வல்லமையும் அனைத்து சக்தியும் அற்றவர் கடவுள் அல்லர்.

“இஸ்ரயேலின் அரசரும் அதன் மீட்பரும், படைகளின் ஆண்டவருமான ஆண்டவர் கூறுவது இதுவே தொடக்கமும் நானே முடிவும் நானே என்னையன்றி வேறு கடவுள் இல்லை” (எசாயா 44:6)

“எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே அவர் எல்லாருக்கும் மேலானவர் எல்லார் மூலமாகவும் செயலாற்றுபவர் எல்லாருக்குள்ளும் இருப்பவர்.” (எபேசியர் : 4:6)

**21. இறைவன் எங்கே இருக்கிறார்?**
இறைவன் எங்கும் உள்ளார்

உமது ஆற்றலைவிட்டு நான் எங்கே செல்லக்கூடும்? உமது திருமுன்னிலிருந்து நான் எங்கே தப்பியோட முடியும்? நான் வானத்திற்கு ஏறிச் சென்றாலும் நீர் அங்கே இருக்கின்றீர்? பாதாளத்தில் படுக்கையை அமைத்துக் கொண்டாலும் நீர் அங்கேயும் இருக்கின்றீர்! நான் கதிரவனின் இடத்திற்கு மேல் பறந்து சென்றாலும் மேற்கே கடலுக்கு அப்பால் வாழ்ந்தாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்திச் செல்லும் உமது வலக்கை என்னைப் பற்றிக் கொள்ளும்.(திபா 139:7-10)

**22. ஏன் நாம் இறைவனைக் காண முடியாது?**
கடவுள் உருவமற்றவர். அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில்தான் வழிபட வேண்டும்” என்றார். (யோவான் 4:24)

**23. கடவுள் நம்மைக் காண்கின்றாரா?**
ஆம் பாசம் நிறைந்த கரிசனையோடும் நம்மைக் கண்காணித்து வருகிறார்.

“நான் அமர்வதையும் எழுவதையும் நீர் அறிந்திருக்கின்றீர். என் நினைவுகளை எல்லாம் தொலையிலிருந்தே உய்த்துணர்கின்றீர்”.

நான் நடப்பதையும் படுப்பதையும் நீர் அறிந்துள்ளீர் என் வழிகள் எல்லாம் உமக்குத் தெரிந்தவையே.

ஆண்டவரே! என் வாயில் சொல் உருவாகு முன்பே, அதை முற்றிலும் அறிந்திருக்கின்றீர். (திபா 139:2-4)

**24. இயேசுக் கிறிஸ்து இறைவனை எவ்வாறு விவரித்தார். என்பதை காண்பி.**
கடவுள் ஒருவராயினும் மூன்று ஆட்களைக் கொண்டவராயுள்ளார் என காண்பித்தார்.

எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். (மத் 28:19

**பாடங்கள் தொடரும்...**

# அன்னை தெரேசா இன்னும் இறக்கவில்லை...?



பதினேழு ஆண்டு கால ஆசிரியப் பணி அனுபவம். தம்மோடு தங்கி பணிபுரிந்த உடன்பிறவா சகோதரிகள். பாசமுள்ள பாடசாலை பணியாளர்கள், நேசமிக்க மாணவிகள் என அனைவரையும் துறந்து கண்ணீருடன் விடைப்பெற்றார்கள்.

இடுப்பில் சுற்றியிருந்த பருத்தி புடவையும் கழுத்தில் தொங்கிய சிலுவையும்தான் அவருடைய உடைமைகள் “யாருமற்ற சேரி மக்களுக்குச் சேவை செய்யணும்” என்பதைத் தவிர...அதை, எப்படி...? எப்பொழுது...? எதனால்...? என இப்படி எதுவுமே தெரியாது ஆரம்பிக்கப்பட்ட பயணம்”

சேலை கட்டித் தெருவில் வந்த அந்த வெள்ளைக்காரப் பெண்மணியைப் பார்த்து, பலரின் முகங்களில் பற்பல கேள்விக் குறிகள்...?
**‘இந்தச் சேரியில் என்னத்த செய்ய வர்ராங்க...? ‘மதமாற்றம் செய்வாங்களோ...’?**

**‘ஊசிப் போட வந்த டாக்டரம்மாவா இருப்பாங்களோ?’**

எளிதில் அவர்களின் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்ட அன்னைக்கு ஒன்று உறுதியானது. “இந்தச் சேரி ஏழை மக்களின் மத்தியில்தான் கடவுள் வாழ்கிறார்” என்று

“ஐயோ நாற்றம்” என்று ஒதுக்கப்பட்டோர், சாலையோரம் சாகும் தருவாயிலிருப்போர். குளித்துப் பல நாள்களான குழந்தைகள். துயரமே துணையாகக் கொண்ட குடும்பப் பெண்கள். “ஓடிப் போ. இனி எனக்கு நீ வேண்டாம்” எனத் துரத்தியடிக்கப்பட்ட முதியோர்... என அனைவருக்கும் அன்றே அன்னையானாள் அந்தப் பாடசாலை ஆசிரியைத் தெரேசா.

“மனிதன் மகிழ்ச்சியாக வாழ என்ன செய்ய வேண்டும்” என்று அன்னையிடம் கேட்டபோது, எதையும் மகிழ்ச்சியாகக் கொடுங்க” என்ற ஒற்றை வாக்கியத்தில் மகிழ்ச்சியின் அடிப்படை இரகசியத்தைக் கூறி நகர்ந்தார். முடிந்தவரை முகமகிழ்ச்சியோடு, நேரம், அறிவு, பணம் போன்றவற்றை அவரவர் தகுதிக்கேற்ப அடுத்தவருக்குக் கொடுத்து, உதவி புரிந்து வாழ வேண்டும் என்பதே இதன் பொருளாகக் கொள்ளலாம்.

பாடசாலையில் சிறுவர் தினக் கொண்டாட்டத்தில் எங்கள் பாடசாலை சார்பாக அருகில் குடிசைகளில் வாழும் குழந்தைகளை அழைத்து வந்து, “குழந்தைகளுக்கு லட்டு கொடுங்க” என்றார் பாடசாலை அதிபர். அதனால் குழந்தைகள் குதூகலமடைந்தார்கள்.

ஒரு மாணவன் மட்டும் பாதி லட்டைத் தின்று மீதியைக் கையில் இறுக்கமாகப் பிடித்திருந்தான் இதைப் பார்த்த அதிபர், அவனிடம் கேட்டபொழுது “என்னோட படிக்கின்ற சீனுக்கு உடம்புச் சரியில்லாததால் அவனால் வர முடியல. அவனுக்குத்தான் இந்தப் பாதி” சிறுவனின் உயர்ந்த எண்ணத்தைப் பார்த்து வாயடைத்துப் போன அதிபர் அவனை அழைத்து மேடையில் பெருமைப்படுத்தி அனுப்பினார்.

பிறருக்குச் செய்யும் உதவி சிறியதோ, பெரியதோ, ஆனால் அதை செய்ய பணம் அல்ல, மனம்தான் வேண்டும்.

**நிதிமி குந்தவர்**
**பொற்குவை தாரீர்!**
**நிதி குறைந்தவர்**
**காசுகள் தாரீர்**
**அதுவு மற்றவர்**
**வாய்ச்சொ லருளீர்!**
**ஆண்மை யான**
**ருழைப்பினை நல்கீர்!**

என்று ஒவ்வொரு மனிதனையும் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவ அழைக்கின்றார் பாரதியார். பிறருக்கு உதவுவதிலும் கொடுப்பதிலும் நாம் தான் முதல் ஆட்டக்காரராக இருக்க வேண்டும்.

இளைஞர்கள் என்றாலே அடிக்கடி சண்டையிட்டுக் களத்தில் குதிப்பார்கள்” என்ற

15



# பாத்திமா காட்சிகளின் சுருக்கம் 07

## நிலைக் காட்சிகள்

இதைச் சொன்ன உடன் தேவ அன்னை தன் கரங்களை விரிக்க அவற்றிலிருந்து பெரும் ஒளி புறப்பட்டு மேலே சூரியனை நோக்கி வீசியது. இதேவேளை மேகக் கூட்டங்கள் திடீரென கலைந்து விலகின. தேவ அன்னை மேலே எழுந்தப்போது அவர்களின் பிம்பம் சூரியனில் காணப்பட்டது. உடனே **'சூரியனைப் பாருங்கள்'** என்று லூசியா சத்தமாக கூறிளாள். அதை கேட்ட எல்லோரும் சூரியனைப் பார்த்தார்கள்.

அன்னையின் கரங்கள் வீசிய பேரொளியிலேயே காட்சி மறைந்தது. ஆனால் குழந்தைகள் மூவரும் உச்சி வானில் சூரியனின் அதிசயத்தையும் வேறு மூன்று நிலைக் காட்சிகளையும் கண்டார்கள். செபமாலையின் சந்தோஷ, துக்க, மகிமை தேவ இரகசியங்களை சித்தரிப்பதாக இருந்தது. இந்நிலைக் காட்சிகளில் முதலில் **திருக்குடும்ப காட்சி** தேவதாயும், சூசையப்பரும், இயேசு பாலனும் காணப்பட்டார்கள். இயேசுவும், சூசையப்பரும் தங்கள் கரங்களால் சிலுவையடையாளமிட்டு உலகை ஆசீர்வதித்தார்கள்.

இந்த முதல் காட்சி மறைந்து சிறிது நேரத்தில் இரண்டாம் காட்சி காணப்பட்டது. இது **வியாகுல அன்னையின் காட்சி.** வியாகுலத் தாயின் பக்கத்தில் இயேசு காணப்பட்டார்கள். அவர் சிலுவையை சுமந்துப் போகும் போது தம் தாயை சந்தித்த வேதனையான தோற்றம் தெரிந்தது. இயேசுவின் முழு உருவமும் தெரியவில்லை. இயேசு தமது உயிரைக் கொடுத்து மீட்ட தம் மக்களை இரக்கத்துடன் பார்த்து சிலுவை அடையாளத்தால் அவர்களை ஆசீர்வதித்தார். இக் காட்சியை லூசியா மட்டுமே கண்டாள் மற்ற இருவரும் காணவில்லை.

மூன்றாவது காட்சி மாதாவின் மகிமையை எடுத்துக்கூறிய **கார்மேல் மாதாவின் காட்சி.** தேவ அன்னை வெற்றி முடி சூடிய பரலோக பூலோக அரசியான கார்மேல் மலை மாதா திருக்குழந்தையைத் தன் மடி மீது வைத்தப்படி காணப்பட்டார்கள். இக் காட்சியும் லூசியாவுக்கு மட்டுமே தெரிந்தது. குழுமியிருந்த இவற்றைக் கண்ட அதே நேரத்தில் அங்கு குழுமியிருந்த மக்கள் கூட்டம் சூரியனில் மாபெரும் அதிசயத்தைக் கண்டது.

## வானில் தோன்றிய அதிசயம்

**'சூரியனைப் பாருங்கள்'** என்று லூசியா கூறியதும் கூட்டத்திலிருந்த மக்கள் எல்லோரும் மேலே பார்த்தனர். அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட அந்த மாபெரும் புதுமை சூரியனில் நடைப்பெற்றது. மேகங்கள் திடீரென விலகிக் கொண்டன. வானம் நீல நிறமாக விரிந்து பரந்து எல்லையற்றுக் காணப்பட்டது. சூரியன் நடுவானில் கம்பீரமாக பிரகாசித்தது. ஆனால் ஒரு மேகமும் சூரியனை மறைக்காமல் சூரியன் மட்டும் இருந்ததாலும் எல்லோரும் வெறும் கண்ணால் அதை பார்க்க முடிந்தது. கூட்டத்தில் எல்லோரும் மிகவும் ஆச்சரியத்துடன் கண் கூச்சமில்லாமல் சூரியனை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.


சற்று நேரம் அவ்வாறு காட்சி அளித்துக் கொண்டிருந்த சூரியன் திடீரென நடுங்க ஆரம்பித்தது. ஆம் வானத்தில் சூரியன் நிலைத்தடுமாறி அசைந்து நடுங்கியது. தன்னையே சுற்றவும். தொடங்கியது. அம்மாபெரும் தீப்பிழம்பு ஒரு இராட்சத சக்கரம் போல் நெருப்புப் பற்றிக்கொண்டு நெருப்பால் எரியும் சக்கரம் போல் கணிக்க முடியாத வேகத்துடன் சுற்றியது! எத்தனை வேகம்! ஆ என்ன நெருப்பு! நெருப்பின் ஒளி சூரியனை சுற்றிலும் பாய்ந்துக் கொண்டிருந்தது. எந்தத் திசை நோக்கிச் சுற்றியதோ அந்த திசை நேரே சூரியனின் முழு வட்டத்திலிருந்து சுடர்க்கதிர்கள் கற்றை கற்றை தீப்பிழம்புகளாய் பல நிறங்களில் எப்பக்கமும் அள்ளி வீசப்பட்டது!

கூட்டத்திலிருந்தவர்கள் இந்த அதிசயத்தை கண்டு தம் நிலைமறந்து நினைவிழந்தவர்கள் போல் பார்த்துக் கொண்டு நின்றனர். மரம், செடி, கொடி மனிதர்கள் அவர்களின் உடைகள் பொருட்கள், தரை எங்கும் பல நிறங்களும் மாறி மாறி துவைந்து வந்து கொண்டிருந்தது. இவ்வாறு சற்று நேரம் சூரியன் சுற்றிப் பின் ஒரு சில வினாடிகள் நின்றது. பின் மீண்டும் சுழல ஆரம்பித்தது. சக்கர வானம் சுற்றும் பொழுது சுற்றிலும் தீச்சுடர் வீசப்படுவதுபோல் உலகத்திலும் எத்தனையோ மடங்கு பெரிய சூரிய சக்கரம் நெருப்புக் கோளமாய்ச் சுற்றிச் சுழன்றதே ஒரு பெரும் பயங்கரமான காட்சியாக இருந்தது.

இவ்வாறு சுற்றிய சூரியன் மீண்டும் ஒரு முறை சற்று நின்றது. இப்படி இது நின்றது சனங்களுக்கு ஒரு ஓய்வு அல்லது தாங்கும் சக்தியை கொடுப்பது போலிருந்தது. மீண்டும் அந்த மாபெரும் கோளம் சுழலத் தொடங்கியது. சுழன்றது மட்டுமல்ல அதன் வேகமும் நெருப்பு நிறங்களும் பல மடங்கு அதிகரித்தன. மாபெரும் சனக்கும்பல் ஒரு குறிப்பிட்ட அற்புதத்தை தேடி வந்திருந்தது. வாக்களிக்கப்பட்ட இப்பெரும் அற்புதத்தை அவர்கள் கண்ணாரக் காண்கிறார்கள். ஒருபோதும் சூரியனை இவ்வாறு உலகம் கண்டதில்லை. உண்மையாகவே இதுவே இக்குழந்தைகள் கூறிய அதிசய நிகழ்ச்சி என்ற எண்ணம் எல்லார் மனதிலும் உதயமாகிக் கொண்டிருந்தது. சூரியன் திடீரென தன் இடம் பெயர்ந்தது சகிக்கக் கூடியதாக இல்லை. இக்காட்சி சூரியன் இடம் பெயர்ந்து வலது பக்கமும், இடது பக்கமும் ஓடுகின்றது. நடுங்கிகுலுங்கி அங்கும் இங்கும் நிலை தடுமாறி பாய்ந்தது! சொல்ல முடியாத அளவு பெரிய நெருப்பு சக்கரம் நிலை பெயர்ந்து விட்டது. அங்கும் இங்கும் ஆடிச் சுழன்று அக்கினிப் பிழம்பை அத்தனை நிறங்களிலும் அள்ளி வீசியப்படி கீழ்நோக்கி, பூமியை நோக்கிப் பாய்ந்தது. சூரியன் தன் நிலையை இழந்து அறுந்துவிட்டதுபோல வேகமாக கீழ் நோக்கி வந்து கொண்டிருந்தது. அது நெருங்க நெருங்க எல்லாவற்றையும் சாம்பலாக்கி விடும் - இன்னும் சில விநாடிகளில் தீப்பிடித்துக்கொள்ளும், நட்சத்திரங்கள் பூமியில் விழும் என்று கூறப்பட்டது இது தான்! இத்தோடு பயங்கரம்! அச்சம்! மாபெரும் பயங்கரம்! சனக்கூட்டத்தில் அழுகை சத்தம் ஓலமிடும் சத்தம் பெருமூச்சு சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

**(இறுதிக் காட்சியில் இடம் பெற்ற நிகழ்வுகள் அடுத்த இதழில் தொடரும்)**

## புனித அன்னை தெரேசாவிடமிருந்து தொட்டது...



## 06 அன்னையின் முகவரியே...

வெளியேறு" என்றார்கள். அவர் மதம் மாற்றுகின்றார் என்று குற்றம் சாட்டினார்கள். அன்னை தெரசா சொன்னார்.... "மரணப்படுக்கையில் மதமாற்றம் என்ற தேவை எனக்கு இல்லை. எங்களது காளிகட் இறப்போர் இல்லத்தில் இறந்திருக்கும் ஒருவர் கிறிஸ்தவர் அல்லது முஸ்லீம் என்று தெரியாதபட்சத்தில் தான் தகன மேடைக்கே அனுப்பப்படுகிறார்" என்றார் அன்னை தெரசா. பொய்க் குற்றச்சாட்டுகள் ஒருபோதும் உண்மையை மறைத்துவிட முடியாது. காளி கோவில் பூசாரி எலும்புருக்கி நோய் வந்து கோவிலுக்குள் அனுமதிக்கப்படாதபோது, அன்னைதான் அவருக்கு அடைக்கலம் கொடுத்தார். அன்னையின் மடியில் அந்தப் பூசாரியின் உயிர் பிரிந்தது. அவர் இப்படிச் சொன்னார்... "நான் காளியின் மடியில் உயிர்விட வேண்டும் என்று இறுதிவரை வேண்டினேன். அது இப்போது நிறைவேறுகிறது". புனிதம் என்பது மதம் பார்ப்பதில்லை. மனிதம் பார்ப்பதே. இடர்வரினும், இடறாமல் இருப்பதே புனிதம்!

5. அன்னை தெரசா எல்லாரையும் கவர்ந்தவர். அழகிகளையும், அதிகாரிகளையும், பரதேசிகளையும் ஒருசேரப் பாதித்தவர். குன்றின் மேலிட்ட விளக்குபோல, எல்லாருக்கும் பெய்யும் மழைபோல தன் அன்புப் பணியினால் எல்லாரையும் ஈர்ந்தவர். அதற்கான மூன்று சான்றுகள்...

- அழகிப் போட்டியில் கேள்வி கேட்பதே அதிசயம்தான். ஆனாலும் கூட சீருடை அணிந்த அந்தப் பாவையர்கூட யாராக வேண்டுமென்றால் "மதர் தெரசா" என்று கோரசாய் பலமுறை சொன்னதை அனைவரும் அறிவோம். ஆனார்களோ இல்லையோ... ஆனால் அன்னையைப் போல வாழவேண்டும் என்ற ஆசையாவது அவர்களில் விதைத்தவர்.
- அரிவாளைத் தாங்கிய சிவப்புக் கொடிக்கும், ஊதா கோடிட்ட வெள்ளைக் கொடிக்கும் ஒரு தொடர்பும் இல்லைதான். ஆனாலும் கூட ஜோதிபாசும், தெரேசாவும் நெருங்கிய நண்பர்கள். கேபினெட் கூட்டத்தையே நிறுத்தி ஜோதிபாசுவிடம் பேசியவர் அன்னை. ஜோதிபாசு ஒரு கூட்டத்தில் இப்படிச் சொன்னார்... "நான் கடவுளை நம்பாதவன்தான். அவரோ கடவுளின் பணி செய்பவர்தான் ஆனாலும் இருவரையும் இணைப்பது ஏழைகள் மீது நாங்கள் கொண்ட இரக்கம்தான்". மேலும் சொன்னார்... "கடவுள் தன்மையின் மீது நம்பிக்கை கொள்ள அவரது பணி என்னைத் தூண்டுவதால் என்னை ஒரு மோசமான மார்க்சியவாதியாக்குகிறார் மதர் தெரேசா". தெரசா அழகிகளையும், ஆத்திகர்களையும் மட்டுமல்ல, நாத்திகர்களையும் ஈர்த்தவர்.
- அது மட்டுமல்லாமல் அன்னை பரதேசிகளையும் ஈர்த்தவர். ஒருமுறை ஒரு பிச்சைக்காரன் இரவு நேரம் வந்து அன்னையைப் பார்க்க வேண்டும் என்று கத்திக் கொண்டேயிருந்தான். பிச்சை எடுப்பதற்குத் தான் அவன் அன்னையைப் பார்க்கவேண்டும் என்கிறான் என்றே எல்லோரும் நினைத்தார்கள். அன்னை கீழிறங்கி வந்தார். அன்னை தெரசா வந்த பிறகு வாங்கிப் பசியாறும் அந்தப் பிச்சைக்காரன், தட்டை அப்படியே நீட்டி அதில் இருந்த ஒரு ரூபாய்க்கும் குறைவான் காசை நீட்டி "எடுத்துக்கொள்ளுங்கள், ஏழைகளை கவனிப்பதற்கு என் உதவி" என்றான். கண்கலங்கி நின்ற தெரசா சொல்கிறார்.... "மில்லியன் கணக்கில் கொட்டிக் கொடுத்த பணக்காரர்களை விட இவன் அதிகமாகக் கொடுத்தான். ஏனெனில் அவன் இருந்த மொத்தப் பணத்தையும் கொடுத்துவிட்டு பசியோடு, மகிழ்வோடு சென்றான்" என்கிறார் அன்னை.
- புனிதம் என்பது குன்றின் மேலிட்ட விளக்கு போல எல்லாருக்கும் இருளகற்றி ஒளி கொடுப்பது. தண்ணீர் போல படித்தவன், படிக்காதவன் எல்லாருக்கும் தாகம் தணிப்பது. காற்றைப் போல எல்லாருக்கும் சுவாசம் தருவது. எல்லாவற்றையும் தன் அன்பால் வருடுவது. அவர் அதைத் தவறாமல் செய்தார்.

6. அன்னையின் இந்த அன்பிற்கான ஊற்று எது தெரியுமா? நற்கருணைதான். அன்னை ஒருநாள்கூட நற்கருணை உட்கொள்ளாமல் இருந்ததில்லை. அவர் சொன்னார் "ஒவ்வொரு நாளும் காலையில் நற்கருணை உட்கொள்ளும்போது இயேசுவின் முகத்தை அதில் காண்கிறேன். நாள் முழுவதும் துன்புறுவோர் முகங்களில் அவரைக் காண்கிறேன். ஏழைகளின் அருகில் சென்றால் தான் ஆண்டவரின் முகம் காணமுடியும். புனிதம் என்பது நற்கருணையைப் போலவே சிறியவர்களிலும், வறியவர்களிலும், ஒடுக்கப்பட்டவர்களிலும் ஆண்டவரைக் காண்பது.

7. "இதெல்லாம் செய்ய நம்மால் முடியுமா?" என்கிற கேள்வி எனக்குள்ளும் எட்டிப் பார்க்கிறது. எல்லாம் செய்ய இயலாவிட்டாலும் ஒன்றைச் செய்யலாம். பிறரைப் பார்த்து புன்னகை செய்யலாம். "புன்னகை எவ்வளவு நன்மைகளைச் செய்யும் என்பதை நாம் நினைத்தே பார்க்க முடியாது" என்று சொன்னார் அன்னை தெரசா. தனது வாழ்க்கை முழுவதும் முகத்தில் புன்னகையை மட்டுமே உதிர்த்தவர். புன்னகைத்துப் புன்னகைத்தே தனது முகத்தின் வரிகளை உருவாக்கியவர். அதனால்தான் "நான் நம்புகிறேன் - அவரது முகவரியே அவரது முக வரிகள்தான் என்று! புன்னகையே புனிதத்தின் தொடக்கம். புன்னகை வழியாகவே யாரும் நினைக்க இயலாதவை எல்லாம் செய்தவர் அவர். அவரைப் போல புனிதராக நாம் எடுக்கவேண்டிய முதல் படி நாம் புன்னகைப்பதுதான். ஏனெனில் அவர் சொல்வதுபோல அது கொண்டு வரும் நன்மைகளை நம்மால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

## 11 இல்லத்தில் இனிய...

அடுத்ததாகக் கவனிக்கலாம். ஊக்கம் தளராமல் உழையுங்கள். சோம்பலுக்கு இடம் தராதீர்கள், உழைப்பு உயர்வு தரும். சோம்பல் தாழ்வு நிலைநோக்கித் தள்ளிவிடும். சுருங்கச் சொன்னால், உங்கள் இல்லத்தை இனிமையும், அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்ததாக ஆக்குங்கள். உங்கள் பெற்றோர் உங்களைப் பற்றிப் பெருமை கொள்ளும் செயல்களைச் செய்யுங்கள். உங்கள் சகோதரர் சகோதரியரும், உங்களிடம் அமைந்திருக்கும் இந்த இனிய நற்பண்புக்காக இறைவனை வாழ்த்துவர்.

மேலும் உங்கள் உறவினர்களும், நண்பர்களும் உங்களைப் பற்றிப் பாராட்டிப் பேச வேண்டும். "இவன் மிக அருமையான பையன், இவள் மிக அருமையான பெண்!", "அருமையாக வளர்க்கப்பட்டிருக்கும் குழந்தைகள் இவர்கள்!" என்று பெருமையாகப் பேசக்கூடும். அறிவு நிறைந்த நல்ல குழந்தைகள் தங்களைப் பெற்றவர்களையும், மற்றவர்களையும் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கச் செய்கிறார்கள்.

## 01 வெள்ளிவிழாக் கண்ட

அன்றைய திருப்பலியில் மறையுரை ஆற்றிய அருட்பணி. வின்ரன் யோசப் பர்னாந்து அடிகளார் பின்வருமாறு கூறினார். ஆண்டவரின் பணியில் ஈடுபட்டிருக்கும் அருட்பணியாளர்களுக்கு கிறிஸ்துவின் விசுவாசிகளாம், சக குருக்களதும் பொது மக்களதும் பாசமும், பரிவும் அவசியமாகிறது ஊதாரி மகன்...... "உடனே அவர் புறப்பட்டுத் தம் தந்தையிடம் வந்தார். தொலையில் வந்துகொண்டிருந்தபோதே அவர் தந்தை அவரைக் கண்டு, பரிவு கொண்டு, ஓடிப்போய் அவரைக் கட்டித் தழுவி முத்தமிட்டார்". (லூக் 15: 20) இப்பேர்ப்பட்டவரே நமது பரலோக தந்தை இரக்கமும், மன்னிப்பும் நிறைந்தவர். குருக்களாகிய நாம் இதையே நமது ஆயர்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம் என்று கூறினர்

## 01 பிரியாவிடையும் வரவேற்பும்..

கொண்டார். இதுவரை காலமும் அச்சகத்தின் இயக்குனராக பணியாற்றிய அருட்பணி. மகேந்திர குணதிலக்கா அடிகளாருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. தற்போது தந்தை அவர்கள் இலங்கை கரித்தாஸ் SEDEC நிறுவனத்தின் தேசிய இயக்குனராக பொறுப்பேற்றுள்ளார். இவர்கள் இருவரையும் ஞான ஒளி வாழ்த்தி அவர்கள் எடுத்துக் கொண்ட புதிய பணிகளை சிறப்புடன் ஆற்ற பிரார்த்திக்கின்றது.

வாசகர்களே! உங்களுடைய ஆக்கங்களும் இப்பத்திரிகையில் இடம்பெற விரும்பினால் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஆசிரியர், ஞான ஒளி,**
**கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,**
**இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய**
**மாவத்தை, கொழும்பு - 08.**
(தரமானவை பிரசுரிக்கப்படும்)

## XVII கொத்தமல்லி இலை...

வாய்ப்புண்ணை சரிசெய்ய உதவும். மேலும் இதில் உள்ள ஆன்டி-மைக்ரோபியல் பண்புகள், வாயை சுத்தமாகவும், துர்நாற்றமின்றியும், புத்துணர்ச்சியுடனும் வைத்துக் கொள்ளும்.

**எடை குறைவு**

எடையைக் குறைக்க நினைப்போர் தினமும் காலையில் சிறிது கொத்தமல்லி இலை ஜூஸைக் குடித்தால், அடிக்கடி வரும் பசி உணர்வைத் தடுத்து, உடலின் மெட்டபாலிசத்தை மேம்படுத்தி, வேகமாக உடல் எடையைக் குறைக்க உதவும்.

**ஹார்மோன் ஏற்றத்தாழ்வுகள்**

கொத்தமல்லியில் உள்ள அத்தியாவசிய எண்ணெய்கள் ஹார்மோன் ஏற்றத்தாழ்வுகளை தடுத்து, சீராக பராமரிக்க உதவும். மேலும் பெண்கள் இதை தினமும் சிறிது குடித்து வந்தால், மாதவிடாய் பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம்.

## 01 பேராயர் செக்கழித்தெரு...

19ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆண்டகை அவர்கள் புனித அன்னம்மாள் ஆலயத்திற்கு வருகை தந்தபோது அவரின் முதல் நிகழ்வாக மறைக்கல்வி பிள்ளைகளை சந்திப்பதாக இருந்தது. அவர் அப்பிள்ளைகளுக்கு புனிதர்களுடைய வாழ்வைப் பற்றி அறிந்தால் நாம் அனைவரும் புனிதர்களாக வாழ முடியும் என்று உரைத்ததோடு விசேடமாக சிறுவயதிலேயே புனிதர்களாக்கப்பட்ட புனிதர்களின் வாழ்வை எடுத்துக் கூறினார். பின் இறையழைத்தலின் முக்கியத்துவத்தையும், எடுத்துக் கூறினார். அவர் ஆங்கில மொழியில் பேச வாக்கியத்துக்கு வாக்கியம் தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.

2வது நிகழ்வாக பங்கிலுள்ள மூத்தோர்க்கான சபைகளை ஒரே நேரம் சந்தித்து ஒவ்வொரு சபையிலும் உள்ள அங்கத்தவர்களுடைய எண்ணிக்கையை அவதானித்ததோடு அந்தந்த சபைகளின் பணி உருவாக்கத்தை பற்றிய விபரங்களையும் கேட்டு அறிந்து கொண்டார். ஏறத்தாழ 150 பேர் கொண்ட 12 குழுக்களைச் சந்தித்து குடும்பம் பற்றி எடுத்துச் சொன்னார். அன்றைய மாலை நிகழ்வாக பங்கிலுள்ள இரண்டு பிரதேசத்தில் பங்கு மக்களைச் சந்தித்தார். அவர்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்தார். இரவு 7 மணியளவில் மீண்டும் புனித அன்னம்மாள் ஆலயத்தில் இளைஞர் குழுக்களைச் சந்தித்தார். இளைஞர் குழக்களில் கிட்டத்தட்ட 150 இளைஞர்கள் கூடியிருந்தனர். இவர்களின் எண்ணிக்கையைக் கண்டு ஆயர் அவர்கள் தனது மகிழ்ச்சியை தெரிவித்தார். அவர்களுடைய பணி பற்றிய விபரங்களைக் கேட்டறிந்த ஆண்டகை அவர்கள் திருமணம் பற்றிய விளக்கத்தை எடுத்துரைத்தார். திருமணம் திருமண ஆயத்தம், கலப்பு திருமணம் பற்றி எடுத்துக் கூறினார். விசேடமாக கலப்பு திருமணப் பிரச்சினைகள், கலப்பு திருமணத்திற்கு முக்கியத்துவம் வேண்டாம் என்றும் கூறினார். அடுத்த நாள் காலை 8.00 மணிக்கு வேளாங்கண்ணி ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார் அன்று எல்லா மக்களையும் ஒவ்வொருவராக ஆசீர்வதித்தார். இறுதியாக அன்று 11 மணியளவில் பங்கு மேய்ப்புப் பணிச் சபையினரையும் சந்தித்த பின் ஆண்டகை அவர்களின் பங்கு தரிசிப்பு முடிவுற்றது.

**தகவல் : திரு. ஜோர்ஜ் பர்னாந்து**

## XVII கோடையில் காரம்...

- கசகசாவை வறுத்துப் பொடி செய்து வைத்து இரவில் தூங்கச் செல்லும்முன் பாலில் கலந்து குடிக்கலாம். நன்றாகத் தூக்கம் வரும். இரவு தூங்க முடியாமல் தவிப்பவர்கள் பாலில் பனங்கற்கண்டு கலந்து அருந்தலாம்.
- ஒரு கரண்டி நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயுடன் ஒரு துண்டு இஞ்சி, ஒரு பூண்டு பல், ஏலக்காய் சேர்த்து சூடு செய்ய வேண்டும். இதனை ஆற வைத்து உச்சந்தலை, கை, கால் பெருவிரங்களில் தேய்த்துக் குளித்துவர, உடல் உஷ்ணம் குறையும்.
- மலச்சிக்கல் மூலநோய் உள்ளவர்கள் நார்ச்சத்துள்ள உணவுகளை அதிகம் எடுத்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக கருணைக்கிழங்கை மசியல் செய்து சாப்பிடலாம். சின்ன வெங்காயத்தைப் பசு நெய் சேர்த்து வதக்கி, பனை வெல்லம் கலந்து மிக்சியில் அடித்துத் தனியாக எடுத்து இரவு, காலை வேளைகளில் சாப்பிடலாம்.
- காலில் பித்த வெடிப்பு பதம் பார்க்கும் தருணம் இது. கற்றாழைச்சாறு எடுத்து மோர், எலுமிச்சை, பனைவெல்லம் கலந்து குடிக்கலாம்.

**நன்றி : கல்கி**

## 13 அன்னை தெரேசா...

எண்ணத்தைத் தலைகீழாக்கி இளைஞர்கள் மாணவர் என்று தமது பங்குகளிலும் சரி, தாங்கள் வாழும் பகுதிகளிலும் சரி கடும் மழையினால் சேதமோ, கடும் வறட்சியாலோ மக்கள் அவதிப்படும் வேளைகளில் ஒன்று சேர்ந்து உதவும் இளம் பிள்ளைகளும் வாழும் புனிதர்களே! அதேபோன்ற தேவையில் இருப்போருக்கு உதவும் குணம் இன்று நம்மிடையே மேலும் வளர வேண்டும்.

உதாரணமாக திருமணமாகாதவர்களுக்கு, படிக்க வசதி குறைவாக இருப்பவர்களுக்கு, ஏழைக் குழந்தைகளுக்கு அனாதைகளாக விடப்பட்ட குழந்தைகளுக்கு இருப்பதை பகிர்ந்து கொடுத்து இன்பமாய் வாழ்வதுதான் சொர்க்க வாழ்க்கை

எங்கோ பிறந்து 19 வயதில் இந்தியாவிற்கு வந்து இறுதி மூச்சுவரை பணிபுரிந்த அனனை தெரேசாவை மதம், மொழி, இனம்தாண்டி வணங்குகிறார்கள். வாழ்த்துகின்றார்கள். அவர் இன்றுமுதல் புனித தெரேசா என்று அழைக்கப்படுகின்றார்.

மலர் தூவி, தூபம் காட்டி பாட்டுப் பாடி போற்றப்படும் அன்னை தெரேசா நம் கண்முன் நிற்காமல், தெருவோர அனாதைகளின் அன்னையாக அவரைக் கண்டு அவரின் பிறர்நலப் பணியில் பங்காளிகளாக நாம் மாறும் போது அவர்கள் இவ்வுலகில் இறவா தெரேசாவாக என்றும் இருப்பார்கள்..

உதவி செய்ய வளமான வாழ்வு. வங்கிக் கணக்கு. அரசு ஆதரவு. பெயர் புகழ், என எதுவும் தேவையில்லை. எளிய முறையில் சிறய அளவில் உதவி செய்ய முயன்றாலே போதும். நாமும் மற்றவர்களுக்கு அன்னை தெரேசாதான்.




# கோடையில் காரம் கூடாது!

## “ஃபாஸ்ட் ஃபுட்” உணவை நாடுவதும் நல்லதல்ல!

கோடை வெப்பம் கொளுத்துகிறது. இதிலிருந்து தப்பிக்க, ஏ.சி., அறையிலேயே நாம் கிடக்கிறோம். இந்த ஏ.சி. என்பது இன்னொரு வகை நம் உடலை உஷ்ணமாக்கி விடக்கூடியது என்பது பலருக்கும் தெரிவதில்லை. கோடையில் கிட்டத்தட்ட 100க்கு 99% சதவீதத்தினர் உஷ்ணத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல் திணறி, நோய்களுக்கு ஆளாகின்றனர். இதை எப்படித் தடுப்பது என்பது பற்றி ஆலோசனைகளைப் பார்ப்போம்.

“ஆயுர்வேதத்தில் ஆறு வகையான சீசன் சொல்வதுண்டு. அதாவது சிஷிரா, வசந்தம், கிரீஷ்மம், வர்ஷா, சரத், ஹேமந்தா. இதில் வசந்தம் அதாவது ஸ்பரிங் சீசனைத் தாண்டி, க்ரீஷ்மம் எனப்படுவதே கோடை காலமாகக் கருதப்படுகிறது. இந்தக் காலத்தில் உடல் உஷ்ணத்தால் பித்தம் அதிகம் இருக்கும். இது ஹாலிடே டைம் என்பதால் பெரும்பாலும் வெளியில் சாப்பிடுவதற்கான வாய்ப்பு அதிகம். கூடுமானவரை வெளியில் சாப்பிடுவதைத் தவிருங்கள்.

கோடைக் காலத்தில் இயற்கையே கொடை வள்ளலாக இளநீர், நுங்கு, பானகம், கிருணி, வெள்ளரி, தர்ப்பூசணி போன்ற பழங்களை வாரி வழங்கியிருக்கின்றன. இவை நீர்ச்சத்து இழப்பைத் தணிக்கக் கூடியதாக இருக்கின்றன. இயற்கையாகக் கிடைக்கக்கூடிய நீர்ச்சத்து நிறைந்த பழங்கள், காய்கறிகள் அதிகளவில் சேர்த்துக் கொள்வது ஒன்றே உடலைக் குளுமையாக்கக் கூடிய உணவுகள்!

கொழுப்பு நிறைந்த உணவுகள், டீப் ஃப்ரை செய்யப்பட்டவை உணவுகளைத் தேடி ஓடுகிறோம். இவை உஷ்ணத்தை அதிகரிக்கும் உணவுகள். இதைத் தணிக்க, நீர், மோர் குடித்தால் மட்டும் போதாது. நாம் சாப்பிடும் உணவில் கவனம் செலுத்துவது அவசியம்.

- பாஸ்ட் புட் உணவுகள் சாப்பிடும்போது ருசியாகத்தான் இருக்கும். ஆனால், அதிலுள்ள அமிலத் தன்மை நெஞ்செரிச்சலை உண்டாக்குவதுடன் மலச்சிக்கலையும் ஏற்படுத்தும். இதனால் மூலநோய் உண்டாகலாம். குறிப்பாக மைதாவில் தயாரான உணவுகளை முற்றிலும் தவிர்த்துவிடுங்கள்.
- கேப்பைக் கூழ் செய்து மோருடன் கலந்து சாப்பிடலாம். புழுங்கல் அரிசியைக் கஞ்சியாக்கி தேங்காய்ப் பாலுடன் சாப்பிடலாம். நெஞ்சு எரிச்சல் உள்ளவர்கள் தேங்காயப் பாலுடன் பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிடுங்கள். இது உடல்சூட்டைச் சரிசெய்யும்.
- அதிக வியர்வை வெளியேறும் போது கிட்னி மற்றும் சிறுநீரகப் பாதையில் கற்கள் உருவாக வாய்ப்பு உண்டு. இதற்கு அதிகம் தண்ணீர் குடிக்க வேண்டும். கல்லை சரி செய்வதற்குச் சிறந்த மருந்து வாழைப்பூ. இதைச் சாறு எடுத்து மோர் கலந்து குடிக்கலாம். வாழைப் பூ கல்லைக் கரைக்கும்.
- உடல் சூடு அதிகமானால் சிலருக்கு இரவு உணவு சாப்பிடப் பிடிக்காது. அவர்கள் பூசணிக்காயை ஜூஸ் எடுத்த அருந்தலாம்.
- கேன் தண்ணீரைவிட, வீடுகளில் வரும் குழாய்த் தண்ணீர் அருந்துவது நல்லது. செப்புப் பாத்திரம், மண் பாத்திரத்தில் படிகாரத்துடன், ஏலக்காயைத் தட்டிப் போட்டுக் குடிக்கலாம்.
- பெண்களுக்கு வியர்வை காரணமாக உடல் உஷ்ணம் தாக்கி வெயில் நேரத்தில் பொடுகு அதிகமாகலாம். இதனால் முடி உதிர்வு ஏற்படும். இவர்கள் சந்தனாதி தைலம், துர்வாதி தைலம் உச்சந்தலையில் வைத்தால் தேகம் குளிர்ச்சியாகும்.
- உடலில் கட்டிகள் ஏற்படாமல், இந்தக் கட்டிகள் வராமல் இருக்க காலை மாலை ஒரு டீஸ்பூன் குல்கந்த சாப்பிடலாம்.
- கண் எரிச்சல் உள்ளவர்கள் பாதத்தில் மசாஜ் செய்யலாம். இதனால் கண்கள் குளிர்ச்சி அடையும். மாதுளம்பழம், கொய்யாப்பழம், உடல்சூட்டைத் தணிக்கும்.

15ம் பக்கம்

# கால்களை அச்சுறுத்தும் ‘கால் ஆணி’....!



கால் பாதங்களில் அழுத்தம் ஏற்படும்போது வெள்ளை நிறத்தில் தோல் தடித்து, சிறிய மேடு போல ஒரு தோற்றம் உருவாகும். பின்னர் மேற்புறத் தோல் உலர்ந்து, கொப்புளம் ஏற்பட்டு, கொஞ்சம் முற்றினால் சீழ் கோத்து, உடைந்து இரத்தப்பெருக்கும் ஏற்படும்.

இந்த பிரச்சினையால் நடக்கும் போதும் நிற்கும்போதும் தாங்க முடியாத வலி ஏற்படும். உள்ளங்கால்களில் மட்டும்தான் ஆணி ஏற்படும் என்றில்லை, சில நேரங்களில் தேய்ந்த காலணிகளைப் பயன்படுத்துவது, கால்களைச் சுத்தமாகப் பராமரிக்காதது போன்றவற்றின் காரணமாகக் கால் விரல்களின் பக்கவாட்டிலும் ஆணிகள் ஏற்படலாம்.

கால் ஆணியைத் தவிர்க்க மென்மையான சோப்பைப் பயன்படுத்திப் பாதத்தைக் கழுவலாம். பின்னர் கால்களைச் சுத்தம் செய்த பின்னர் மருத்துவர் பரிந்துரைக்கும் மருந்துகளை போடலாம். மேலும் டிகெராட்டினிசேஷன் க்ரீம் (Dekeratinization creams) போன்ற மாய்ஸ்சரைசர் க்ரீம்களைக் கால்களில் தடவலாம். இந்த க்ரீம்களில் உள்ள கெராட்டின், இறந்த செல்களை அகற்ற உதவும். இந்த பிரச்சினைக்கு சுய சிகிச்சை செய்துகொள்வது தீங்கு விளைவிக்கும்.

குறிப்பாக, சர்க்கரை நோயாளியாக இருந்தால், கால்களை அகற்றவேண்டிய அளவுக்குப் பிரச்சினை பெரிதாகலாம். எனவே, மருத்துவரை ஆலோசிப்பதுதான் சரியான வழி.

### வராமல் இருக்க என்ன செய்யலாம்?

- கால்களைச் சுத்தமாகப் பராமரிக்க வேண்டும்.
- பாதங்களைச் சோப்புப் போட்டுக் கழுவி, சுத்தமான துணியால் நன்கு துடைக்க வேண்டும்.
- பாதத்துக்குப் பொருத்தமான சரியான அளவிலான காலணிகளை அணிய வேண்டும்.
- அழுத்தமான ஷூக்களையோ, பெரிய அளவிலான (லூசான) ஷூக்களையோ அணியக் கூடாது.
- கால் ஆணி பாதிப்புக்குள்ளானவர்கள், மருத்துவர்களின் ஆலோசனைப்படி அவர்களுடைய கால்களுக்குப் பொருத்தமான காலணிகளைத் தேர்ந்தெடுக்கலாம்.
- சர்க்கரை நோயாளிகள் ஆண்டுதோறும் கால்களைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

### மருந்துகள்

- கால் ஆணி ஏற்பட்ட உடனேயே பூண்டை நசுக்கி அதன் சாறை காலில் ஆணி இருக்கும் இடங்களில் தடவி வர வேண்டும்.
- இரவுப் பொழுதில் பூண்டை நசுக்கி காலில் வைத்து துணியால் கட்டுப்போட்டுவிட்டு காலையில் எடுத்துவிடலாம்.
- இதுபோல் ஒரு வாரம் செய்து வந்தால் கால் ஆணிக்கு நல்ல நிவாரணம் கிடைக்கும்.
- மல்லிகைச் செடியின் இலையை இடித்து அதன் சாறை எடுத்து பாதத்தில் பத்து போடுங்கள். இதனால் பாதத்தில் கால் ஆணி மேலும் பரவாமலும், இருந்த இடம் தெரியாமலும் போகும்.
- மஞ்சள் ஒரு துண்டு, வசம்பு ஒரு துண்டு, மருதாணி ஒரு கைப்பிடி அளவு எடுத்து விழுதாய் அரைத்து, கால் ஆணிகள் மீது தொடர்ந்து 21 நாட்கள் வரை பூசிவர, கால் ஆணிகள் அனைத்தும் மறையும்.
- அம்மான் பச்சரிசி செடியை சின்னதாக உடைத்து அதில வரும் பாலை பயன்படுத்தலாம். ஒரு தடவை தடவினதும் குணம் கிடைக்காது. தொடர்ந்து 2 வாரமாவது செய்ய வேண்டும். முதலில் வலி குறையும், பிறகு போகப் போக ஆணியும் மறைந்துவிடும்.

# கொத்தமல்லி இலை ஜூஸ்!



அன்றாட உணவில் சேர்க்கப்படும் ஓர் மருத்துவ குணம் நிறைந்த மூலிகை தான் கொத்தமல்லி இலை. இது உணவுக்கு மணத்தையும், சுவையையும் தருவதோடு, உடல் ஆரோக்கியத்துக்கும் ஏராளமான நன்மைகளை வாரி வழங்கும். மேலும் இது எளிதில் கிடைக்கக்கூடிய ஒன்று என்பதால், இதனை சமையலில் சேர்ப்பதோடு, தினமும் கொத்தமல்லி இலையை ஜூஸ் தயாரித்து சிறிது குடித்து வந்தால், பல பிரச்சினைகளைப் போக்கலாம்.

கொத்தமல்லி இலையில் 11 அத்தியாவசிய எண்ணெய்களும், 6 வகையான அமிலங்களும், கனிமச்சத்துக்களும், விட்டமின்களும் நிறைந்துள்ளன. இங்கு கொத்தமல்லி இலையைக் கொண்டு எப்படி ஜூஸ் தயாரிப்பது என்றும், அதனைக் குடிப்பதால் கிடைக்கும் நன்மைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

### ஜூஸ் தயாரிக்கும் முறை:

கொத்தமல்லி இலையை நீரில் நன்கு கழுவி, சிறிதாக வெட்டிக் கொள்ள வேண்டும். பின் ஒரு பாத்திரத்தில் அதனைப் போட்டு, நீர் ஊற்றி அடுப்பில் வைத்து, 10 நிமிடம் கொதிக்க வைத்து இறக்கி, குளிர்ந்த பின் வடிகட்டி சிறிது எலுமிச்சை சாறு சேர்த்து கலந்தால், கொத்தமல்லி இலை ஜூஸ் ரெடி!

### சரும நன்மைகள்

கொத்தமல்லி ஜூஸ் சரும பிரச்சினைகளைப் போக்க வல்லது. குறிப்பாக இது எக்ஸிமா, வறட்சி மற்றும் பூஞ்சை நோய்கள் போன்ற பல சரும பிரச்சினைகளைத் தடுக்கும். மேலும் இதில் அழற்சி எதிர்ப்பு பண்புகள் இருப்பதால், பல தீவிர சரும பிரச்சினைகளைச் சரிசெய்யவும் உதவும்.

### இதய நன்மைகள்

கொத்தமல்லியில் உள்ள ஏராளமான அத்தியாவசிய எண்ணெய்கள், கெட்ட கொலஸ்ட்ரால் அளவைக் குறைத்து, நல்ல கொலஸ்ட்ரால் அளவை அதிகரிக்க உதவும். இதனால் இதயத்தின் செயல்பாடு மேம்பட்டு, இதய நோய்கள் வரும் அபாயம் குறையும்.

### இரத்த சோகை

இரத்த சோகை இருப்பவர்கள் கொத்தமல்லி ஜூஸ் குடிப்பது நல்லது. ஏனெனில் இதில் ஹீமோகுளோபின் உற்பத்திக்குத் தேவையான இரும்புச்சத்து அதிகம் உள்ளது. இரத்த அழுத்த பிரச்சினை கொத்தமல்லியில் கனிமச் சத்துக்களான மக்னீசியம், கால்சியம், பொட்டாசியம் போன்றவை அதிகமாகவும், சோடியம் குறைவான அளவிலும் உள்ளது. ஆகவே இதன் ஜூஸை ஒருவர் தினமும் சிறிது குடித்து வந்தால், உயர் இரத்த அழுத்த பிரச்சினையில் இருந்து விடுபடலாம்.

### ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள்

கொத்தமல்லியில் உள்ள அதிகப்படியான ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள், மற்ற மூலக்கூறுகள் ஆக்ஸஜனேற்றமடைவதைத் தடுத்து, பல்வேறு நோய்களின் தாக்கத்தையும் தடுக்கும். முக்கியமாக இந்த ஜூஸ் அல்சைமர் நோயைத் தடுப்பதாக ஆய்வு ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இரைப்பை குடல் நன்மைகள் கொத்தமல்லி ஜூஸ் செரிமான நொதிகளின் உற்பத்தியை அதிகரித்து, செரிமானத்தை மேம்படுத்தும். அஜீரண பிரச்சினையால் அடிக்கடி அவஸ்தைப்படுவோர், இந்த ஜூஸை தினமும் சிறிது குடித்தால், அதில் இருந்து முற்றிலும் விடுபடலாம்.

வலிமையான எலும்புகள் கொத்தமல்லியில் உள்ள கால்சியம், எலும்புகளின் ஆரோக்கியத்திற்கு அத்தியாவசியமானது. இது எலும்புகளின் வளர்ச்சிக்கு உதவும் மற்றும் எலும்பு சம்பந்தப்பட்ட நோய்களான ஆஸ்டியோபோராசிஸ் மற்றும் ஆர்த்ரிடிஸ் போன்ற பிரச்சினைகளையும் தடுக்கும்.

### வாய் ஆரோக்கியம்

கொத்தமல்லி இலை ஜூஸை தினமும் சிறிது குடித்து வந்தால், அதில் உள்ள ஆன்டி-செப்டிக் பண்புகள்,....

15ம் பக்கம்

தேசிய இளைஞர்கள்
ஞாயிறு
புரட்டாதி 03



# புனித யோசேவ்வாஸின் வாழ்வினூடாக இளைஞர் எம் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குவோம்.



வேடிக்கை பார்த்துவிட்டு முகவரி இல்லாமலே மடிந்து போவதற்காக நம்மை இறைவன் படைக்கவில்லை. வெந்ததைத் தின்று விதி வந்தால் மாள்வோம் என்ற அவநம்பிக்கை கொண்டு வாழும் மானிடராகவும் நம்மை இறைவன் படைக்கவில்லை. மாறாகத் தன்னுடைய தொடர் படைப்பாற்றலால் உலகைப் புதுப்பித்து, வரலாற்றின் முகங்களில் படிந்துள்ள அசிங்கங்களைத் துடைத்து மனித நேய மற்றும் இறைமையை வரலாறு உருவாக்கவும், அதற்குத் தூண்டுதலாக மாறிடவும் நம்மை இறைவன் படைத்துள்ளார். காற்றைச் சுவாசித்து கற்பனை ஊற்றில் மூழ்கி உலகில் வலம் வருவதற்கல்ல மாறாக இறையாட்சி என்ற கனவை நனவாக்கி "கிறிஸ்துவின் பங்காளிகளாக" இறைவனுக்குச் சொந்தமான மக்களினமாக வாழ்ந்திட நமக்கு இறைவன் இந்த வாய்ப்பைக் கொடுத்துள்ளார்.

இந்த வாய்ப்பு நம்மை யாரென்று அடையாளம் காட்டுகின்றது. நம்மையே "மனிதர்" எனக் கண்டு கொண்டு நம்பிக்கை கொண்டவர் என்ற நிலையில் "கிறிஸ்தவர்" எனப் புரிந்துகொண்டு, அரசியல், சமுதாய உறவு நிலையில் "இலங்கைக்குடி மகன்" என்ற நிலையை ஏற்றுக்கொண்டு வாழ்வதற்கான சிறந்த வாய்ப்பாகும். இறைவன் நம் வாழ்வுக்கெனக் கொடுத்துள்ள இந்த வாய்ப்பை இறைவனின் கொடையாக ஏற்று பிறரோடு இணைந்து செயற்படும் போது இறைவன் தேடும் உலகம் நம்மிடையே உருவாகும். இதை உருவாக்க "இளமை" என்ற மருந்து தேவை. வயது அடிப்படையில் இளையோரை அடையாளம் கண்டு, அவர்களில் என்றும் மாறாத "இளமை மனநிலையை" உருவாக்க வேண்டிய காலகட்டம் இது. இளமையின் காலம் சாதனை புரியும் காலம். இச்சாதனையைத் தனி மனிதனாக மட்டுமல்ல மாறாகச் சமூகமாக இணைந்து செய்ய வேண்டும் என்ற நோக்கோடு "தூய யோசேவ்வாஸின் ஆண்டிலே புனித யோசேவ்வாஸ் அடிகளாரின் வாழ்வினூடாக இளைஞர் எம் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குவோம்" என்ற தொனிப்பொருளிலே தேசிய இளைஞர் ஞாயிறு கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தைப் பற்றி இக்கட்டுரையிலே சிந்திப்போம்.

## 1. நேர்மறை எண்ணம் :–

நம்முடைய எண்ணங்கள் தான் நம்முடைய செயற்பாடு, நடத்தை ஆகியவற்றில், இறுதியாக நமது வாழ்க்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. இளையோர் எதிர்மறைச் சிந்தனையைக் கொண்டிருந்தால் எதிர்மறை விளைவுகள் தான் ஏற்படும். இளையோர் தம்முடைய சிந்தனை, சொல், செயல் ஆகிய எல்லாவற்றிலும் நேர்மறையாக இருந்தால் வெற்றியும் வளர்ச்சியும் உறுதி. தூய யோசேவ்வாஸ் 30 ஆண்டுகளாக இலங்கை மண்ணிலே கத்தோலிக்கர்கள் எதிர்நோக்கிய இன்னல்களை அறிந்து வைத்திருந்ததோடு மட்டுமல்ல, அதற்கு தன்னாலான பங்களிப்பு என்ன என்பதை உள்ளத்திலே அடிக்கடி கேட்டு வந்தார். இதனால்தான் எப்படியாவது தான் இலங்கை சென்று பணியாற்ற வேண்டும் என்ற வைராக்கியத்தை உள்ளத்திலே வளர்த்து தன்னால் முடியும் என்று செய்து காட்டினார். நம்முடைய வாழ்க்கையிலே முயற்சியிலே தடங்கல்கள், பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது அதையே பார்த்துக் கொண்டிருந்தால் முன்னேற முடியாது. தடங்கல்கள், இன்னல்களைச் சந்தித்து, அதன்மூலம் கிடைக்கின்ற பலனை எண்ணிப் பார்த்துச் செயற்படும்போது, பிரச்சினையையும் நன்மையாயப் பார்க்கின்றபோது, பிரச்சினைகள் மறைந்து போகும். நன்மைத்தனங்கள் அதிகமாகும். எனவே தூய யோசேவ்வாஸைப் போல சூழ்நிலை பாதகமாக இருந்தாலும் நம்முடைய நேர்மறையான எண்ணத்தால் நம்முடைய வாழ்வையும், பிறருடைய வாழ்வையும் மாற்றுவோம்.

## 2. விடாமுயற்சி

இன்று இளையோர் புதிய முன்னெடுப்புக்களைத் தைரியமாக எடுக்கிறார்கள். ஆனால் சவால்கள், எதிர்ப்புக்களைச் சந்திக்கும்போது, நமக்கு ஏன் இந்த வீண் வம்பு என்று ஒதுங்கி விடுகின்றார்கள். அல்லது பின்வாங்கி விடுகின்றார்கள். அவ்வாறு இல்லாமல் தூய யோசேவ்வாஸைப் போல எதிர்நீச்சல் போடக் கற்றுக்கொள்ள வேண்டும். தான் பணிசெய்ய வரும்போது அம்மக்களின் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிந்து கொண்டு கற்றுக்கொண்டார். அதிலே பாண்டித்தியம் பெற்றார். இன்று நமது இளம் பணியாளர்கள் மொழி தெரியாததினால் தம் பணியைச் செவ்வனே செய்ய முடியாமல் இருசாராரும் (பணியாளரும், பணியினைப் பெறுவோரும்) திண்டாடிக்கொண்டிருப்பதையும், எதிர்ப்புகள் எழுவதையும் காண்கின்றோம். தூய யோசேவ்வாஸ் சண்கோலில் பணியாற்றிய 5 வருடங்களுக்குள் தனது எதிர்காலத்தின் கடுமையான பணிக்கான உடன் ஊழியர்களை உருவாக்கும் பணியினைத் தன்னை அறியாமலேயே மேற்கொண்டிருந்தார். அங்கு இலத்தீன் பாடசாலை ஒன்றினைத் தாபித்து, இளைஞர்களை ஒன்றிணைத்து, கல்விப்பணியை ஆரம்பித்தார். இப்பணியின் மூலம் உருவாகி குருக்களாக மாறிய ஜோசே கார்வாலோ, ஜோசே தெ மெனரோஸ் போன்றவர்களே இவருக்குப் பின் நாட்களில் இலங்கைக்கு வந்து உடன் ஊழியம் செய்தனர். எனவே இவரைப் போன்று விடாமுயற்சியோடு கொடுக்கின்ற வேலையைப் பொறுப்பாய்ச் செய்து நல்ல பெயரை எடுப்போம் என்று சபதமெடுத்து விடப முயற்சியோடு செயற்படுகின்றபோது வெற்றி நிட்சயம்.

## 3. கூட்டுணர்வு :

ஒரு சில இளையோர் தனியாக இருந்து எந்தப் பொறுப்பையும் செய்ய வேண்டும். கூட்டாகப் பிறரோடு இணைந்து செயற்பாட்டால் ஏமாற்றி விடுவார்கள். பிறகு வீழ்ச்சிதான் என்று நினைத்து கூட்டாகச் செயற்பட மறுக்கின்றார்கள். தனியாக செயற்பட்டால் தான் தன்னுடைய அருமை, பெருமை எல்லோருக்கும் தெரியவரும் என்று நினைக்கிறார்கள். தனியாக உழைக்கின்ற போது விரைவிலேயே களைப்படைய வாய்ப்பு இருக்கின்றது. பலருடைய....

XXம் பக்கம்




## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

"நம் வருங்காலத்திற்கான வாழ்த்துக்களை, அன்னை மரியாவின் விண்ணேற்பு நமக்கு வழங்குகிறது, இயேசு கிறிஸ்துவின் வெற்றியோடு புதிய வானம் மற்றும் புதிய பூமியைக் குறித்து அறிவித்துக்கொண்டே, வானகம் நோக்கி நம் பார்வையை, இவ்விழா திருப்புகிறது"

"முழு உலகிற்கும் அமைதியை வழங்குவதுடன், போர் மற்றும் பயங்கரவாதத்தின் காயங்களை தூய ஆவியார் குணப்படுத்துவாராக"

"கடவுளுடன் நாம் கொள்ளும் உறவை மேலும் வளர்க்க, கடவுளின் அன்பு மற்றும் கருணையை மீண்டும் கண்டுகொள்ளவேண்டிய தேவை எப்போதும் உள்ளது"

"இந்நாள்களில் தாக்குதல்களுக்குப் பலியான அனைவருக்காகவும் செபிக்கின்றேன். அறிவற்ற, கண்மூடித்தனமான பயங்கரவாத தாக்குதல், இவ்வுலகில் இனிமேலும் இடம்பெறாமல் இருப்பதாக!"

"விண்ணகத் தந்தையின் நட்பில் வாழ்வதற்கும், வளர்வதற்கும், அவரது அளவற்ற நன்மைத்தனம், அன்பு இவற்றிற்கு சாட்சியம் பகர்வதற்கும் எதுவும் உங்களைத் தடுக்காமல் இருப்பதாக"

"கவலையாக இருக்கும்போது, எல்லாமே தவறாக நடக்கின்றன என உணரும்போது, 'கடவுள் என்னை அன்புகூர்கிறார், கடவுள் என்னை ஒருபோதும் கைவிடுவதில்லை' என்பதை நாம் கட்டாயம் நினைவில் வைக்கவேண்டும்"

"மனிதாபிமானமற்ற முறையில் நடைபெறும் தொழில், சட்டத்திற்குப் புறம்பான மனித வர்த்தகம், சுரண்டல் என்ற பல வடிவங்களில், பழங்காலத்திலும் இன்றும் நடைபெறும் அடிமைத்தனத்திற்குப் பலியாகும் அனைவரின் அருகிலும் ஆண்டவர் இருக்கிறார்"

"நற்செய்தி மதிப்பீடுகளுக்கு நேர்மையானவர்களாக இருந்து, கிறிஸ்துவுக்குச் சான்று பகர உதவும்படியாக, தூய ஆவியானவரால் உயிர்த்துடிப்பூட்டப்படும் அருளை, அன்னை மரியா நமக்குப் பெற்றுத் தருவாராக"

"திருஅவையின் ஆண்களாக, பெண்களாக இருப்பது என்றால், தொடர்பின் ஆண்களாக, பெண்களாக இருப்பது என்று பொருள்"

"நீர் உமக்காவே எம்மைப் படைத்தீர். உம்மில் இளைப்பாறும்வரை, எம் இதயம் அமைதியின்றி தவிக்கிறது"

**இறைவனின் விருப்படி வாழ முற்படும் போது இயேசுவின் சிலுவையின் வழி வாழ்வை அமைத்துக் கொள்வதே உண்மை வாழ்வாகும்.**

# திருச்சிலுவையின் மகிமை

**புரட்டாதி 14**



**இயேசுவின் அன்பின் ஆழத்தை அறிய வேண்டுமெனில் இருகரங்களையும் விரித்தவராய் காட்சி தரும் திருச்சிலுவையை உற்று நோக்க வேண்டும்.**

**சிலுவை என்பது இணைபிரியா நண்பன், கடவுளின் ஊழியன் நடக்கும் பாதையில் பூத்துக் குலுங்கும் செடி, சிலுவையில்தான் எமது ஆன்மாவிற்கு தேவையான சக்தியும், ஒளியும் இருக்கிறது என்கிறார்** முத்திப்பேறுபெற்ற அன்னை ஆன்மேரி ழாவுஹே.

வாழ்க்கை என்பது ஒரு வாய்ப்பு அதை சரியான முறையில் அமைத்துக் கொள்வது மனிதர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். வாழ்வு என்பது ஒரு புதிர், பல சவால்களைக் கடந்து, கடமையை நிறைவேற்ற பயணிக்கின்ற ஒரு பாதை எனவும் வரையறுத்துக் கொள்ள முடியும். மனிதர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் ஒரு சமூக அமைப்பில் இருப்பதால், பல காரணங்களுக்காக சிலரையும், சில காரணங்களுக்காக பலரையும் சார்ந்து வாழும் நிலையை பார்க்க முடியும். நாங்கள் பெற்றுக் கொண்ட வாழ்வை எமது விருப்படி வாழ எமக்கு பூரண சுதந்திரம் உண்டு. அதேவேளையில் பிறருடைய விருப்பத்திற்கு கட்டுப்பட்டு அவர்களுக்காக வாழும் மனிதர்களும் உண்டு. மேலாக இறைவனின் விருப்பத்திற்கும் அவரது திட்டத்திற்கும் கட்டுப்பட்டு வாழும் வாழ்வு உன்னதமானது. இறைவனின் விருப்பப்படி வாழ முற்படும் போது இயேசுவின் சிலுவையின் வழி வாழ்வை அமைத்துக் கொள்வதே உண்மை வாழ்வாகும்.

என்னைப் பின்பற்ற விரும்பும் எவண தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” (மத் 16:24) என்கிறார் இறைமகன் இயேசு. கிறிஸ்வர்களின் வாழ்க்கைப் பயணத்தில் சிலுவை என்ற வெற்றியின் சின்னம் நடப்பட்டிருக்கும். துன்பம் என்ற பாதையில் நடக்கும் மனித உள்ளம், துயரம் என்ற சோர்வால் வாடும் போதும், கவலையால் உடல் நடுக்கமுற்று தள்ளாடும் போதும், உறவினர்கள் நண்பர்களால் மறக்கப்பட்டு கைவிடப்படும் போதும், தோல்வியை சந்தித்து வேதனையின் விளிம்பில் நிற்கும் போதும், உள்ளத்திற்கு ஆறுதலும் அரவணைப்பும் கொடுக்கும் நிழல்தான் சிலுவை. விரக்தியடைந்த மனதிற்கு வீசும் தென்றலாக, சிக்கல்கள் நிறைந்த மனிதனுக்கு வாழ்வைக் காட்டும் நிழலாக காட்சி தருவதே சிலுவை. சிலுவையில் உயர்த்தப்பட்ட இறைமகனை உற்று நோக்கினால் மனுக்குலம் முழுவதும் மீட்படைவர் என்ற நம்பிக்கையின் மூலம் சிலுவை புதுவாழ்வின் அடையாளமாயிற்று. யூத மக்களுடைய வரலாற்றில் அவமானத்தின் சின்னமாக கருதப்பட்ட சிலுவை, மரண தண்டனைகளை நிறைவேற்றுவதற்கு வழிகோலிய சிலுவை, இறைமகனின் மரணத்திற்கு கருவியாக அமைந்த சிலுவை, எவ்வாறு கிறிஸ்தவர்களின் வாழ்வில் புனிதச் சின்னமாக மாறியது? சிலுவையில் இறந்த இறைமகன் இயேசு உயிர்த்தெழுந்ததினால் சிலுவை வெற்றியின் சின்னமாக மாறியது. சிலுவைப் பயணத்தின் வழியாக இயேசு இறைமகன் என்ற உண்மை நிரூபிக்கப்படுகிறது. புனித பவுல் கூறுவது போல “சிலுவையைப் பற்றிய செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே. ஆனால் மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை” (1கொரி 1:18). சிலுவை என்பது இணைபிரியா நண்பன், கடவுளின் ஊழியன் நடக்கும் பாதையில் பூத்துக் குலுங்கும் செடி, சிலுவையில்தான் எமது ஆன்மாவிற்கு தேவையான சக்தியும், ஒளியும் இருக்கிறது என்கிறார் முத்திப்பேறுபெற்ற அன்னை ஆன்மேரி ழாவுஹே.

வாழ்க்கையிலே பல்வேறுபட்ட துன்பங்களாலும், துயரங்களாலும், இழப்புக்களாலும், பிரிவுகளாலும் நாள் தோறும் நாமும் சிலுவைகளைத்தானே சுமக்கின்றோம் என நாம் கண்ணீர் விடுவது தொடர்கதையாகவே செல்கிறது. ஏனெனில் எமக்கு துன்பங்களை சுமக்க உடன்பாடில்லை. கஷ்டங்களை அனுபவிக்க விருப்பமில்லை. வாழ்வில் தோல்விகளை ஏற்றுக்கொள்ள சக்தியில்லை, வாழ்வின் உலகியில் சுகங்களை விட்டுக் கொடுக்க மனமில்லை. ஏனெனில் நாம் வாழ்வை சரியாக புரிந்து கொள்வதில்லை. எமது உண்மை நிலை என்ன என்பதனை நாம் சிந்திப்பதில்லை. எங்களது உலகியல் வாழ்வைப் பற்றியும் அதன் சுகத்தைப் பற்றியும் மட்டுமே எங்களது எண்ணங்களும், சிந்தனைகளும் குவிந்துள்ளன. எமது துன்பங்களைப் பற்றி பேசும் நாங்கள் எமது இயலாமைகளை ஏற்றுக்கொள்ள மறுப்பது வெளிப்படையுண்மை. அநீதிகளைக் காண்கின்ற போது நாம் மௌனமாகின்றோம். உண்மையை எடுத்துரைக்க எமது நாவு ஒருபோதும் அசைவதில்லை. வாய்ப் பேச்சினால் மட்டுமே நாம் அமைதியை ஏற்படுத்த முனைகிறோம். மற்றவர்களை பேச்சினால் கொல்வதே எமது பொழுதுபோக்கு. இவ்வாறு அர்த்தமற்ற வாழ்வு வாழும் நாம் துன்பங்களை கண்டு அஞ்சி, அவை கடவுளின் தண்டனை என முத்திரையிடுவது கண்கூடு. சிலுவை இல்லாத வாழ்வு ஒரு உண்மை வாழ்வாக இருக்காது என்பதனை கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து இச்சிலுவை வழி எமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.

“நானோ நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் சிலுவையை அன்றி வேறு எதைப் பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்ட மாட்டேன்” (கலாத் 6:14) என்று கூறும் புனித பவுலைப் போல நாம் ஒவ்வொருவரும் சிலுவையைக் குறித்து பெருமை பாராட்ட வேண்டும். இயேசுவின் அன்பின் ஆழத்தை அறியவேண்டுமெனில் இருகரங்களையும் விரித்தவராய் காட்சி தரும் திருச்சிலுவையை உற்று நோக்க வேண்டும். உலக வரலாற்றில் பல அழியாத சின்னங்களை நாம் காண்கின்றோம். அவை எல்லாவற்றையும் விட மிகவும் மேலான சின்னம் திருச்சிலுவையே ஏனெனில் அதுவே வாழ்க்கையின் வெற்றியின் இரகசியத்தை கற்றுத்தரும் வழியாகும். எனவே மாற்றம் தேடும் மனிதர்களாகிய நாம் நல் மனமாற்றம் அடைய இயேசுவின் சிலுவை வழி செல்வோம். இறைவனுக்கு உகந்த நல்வாழ்வை சுதந்தரிப்போம்.

**ஆக்கம்**
**அருட்தந்தை றமேஸ்.**
**(அ.ம.தி)**

## திரு இருதயநாதர் இராஜகிரிய ஆலயத்தின் முதல் நற்கருணை வழங்கும் நிகழ்வு – 2017



கடந்த 2017.08.06 அன்று ஞாயிற்றுக்கிழமை எமது மாணவர்கள் முதல் முறையாக இயேசுவின் திரு உடலையும் திரு இரத்தத்தையும் தூய நற்கருணை வடிவில் பெற்றுக்கொண்டார்கள். இத்திருப்பலியினை எமது உதவிப் பங்குத்தந்தை அருட்பணி மைக்கல் சந்தனம் அடிகளார் நிறைவேற்றினார். **படம் : டிக்சன்**

## இளைஞர் யுவதிகளுக்கான கருத்தரங்கு

எமது பங்கில் இயங்கிவரும் குடும்பம், இளைஞர் மற்றும் சிறுவர் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கரத்தரங்கு கடந்த 20.08.2017 அன்று ஞாயிற்றுக்கிழமை இராஜகிரிய திரு இருதயநாதர் ஆலய யூபிலி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் முக்கிய விடயமாக பல தரப்பட்ட சவால்கள், பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து எவ்வாறு வாழ்வில் தன்னம்பிக்கையுடன் வெற்றிக்கொள்ளலாம் என்பது பற்றி எடுத்துக் கூறப்பட்டது. மேலும் இன்றைய சமுதாயத்தில் இளைஞர் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் சவால்கள் என்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. அன்றைய தினம் இக்கருத்தரங்கில் பல இளைஞர், யுவதிகளும் மிக ஆவலோடு பங்குபற்றியிருந்தனர். இந்த நிகழ்வை ஆலயத்தில் உதவிப்பங்குத்தந்தை ஒழுங்கு செய்திருந்தமைக் குறிப்பிடத்தக்கது. **தகவல் : கிறிஸ்டினா என்ரன்**

## தேசிய இளைஞர்கள் ஞாயிறு புரட்டாதி 03




தேசிய கத்தோலிக்க இளைஞர்கள் ஞாயிறு தினத்தின் இவ்வாண்டின் கருப்பொருளாக “யோசேவ்வாஸ் அடிகளாரின் வாழ்வினூடாக இளைஞர் எம் வாழ்வை அர்த்தமுள்ள-தாக்குவோம்” என்பதாகும். மேலுமாக அனைத்து இலங்கை வாழ் கத்தோலிக்க இளைஞர், யுவதிகள் இந்த குறிப்பிட்ட தினத்தில் ஒன்றிணைந்து திருப்பலி கொண்டாட்டத்தில் பங்கு கொண்டு தர்ம செயற்பாடுகளை செய்யுமாறு தேசிய இயக்குனரோடு இணைந்து தேசிய இளைஞர் செயற்குழு வேண்டுகோள் விடுக்கின்றது. இதற்கு இசைவாக தேசிய இளைஞர் ஞாயிறு தினத்தை ஒட்டிய செப தாள்கள் ஒவ்வொரு மறைமாவட்ட இளைஞர் இயக்குனரால் அவ்வவ் மறைமாவட்டங்களில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

**தகவல் : நிப்புன் பர்னாந்து**
**தேசிய ஆசிரியர்**

# மக்கள் ஒழுங்கு மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சு, கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்.

## 2017 நத்தார் அஞ்சல் முத்திரைக்காக நடாத்தப்படும் நாடளாவிய சித்திரப்போட்டி

**போட்டிக்கான நிபந்தனைகள்**

01) ஒருவர் ஒரு சித்திரத்தை மட்டும் அனுப்புதல் வேண்டும்.

02)

| முதலாவது குழு [2017.12.31ஆம் திகதியில்] | இரண்டாவது குழு [2017.12.31ஆம் திகதியில்] |
|---|---|
| வயது : 10இற்கு குறைந்த | வயது : 16-20இற்கு இடையிலான |
| வயது : 11 - 15இற்கு இடையிலான | வயது : 21இற்கு மேற்பட்ட (திறந்த) |
| தலைப்பு : கிறிஸ்து பிறப்பு, அன்பின் ஆரம்பம் | தலைப்பு : சமாரித்தன் கிறிஸ்து பிறப்பு |

03)தலைப்பின் பிரகாரம் "நத்தாரை" பிரதிபலிக்கும் வண்ணம், வர்ணமயமாகவும், ஆக்கத்திறனுடனும் கூடியதாக நீளம் 11.7 அங்குலம், மற்றும் அகலம் 8.3 அங்குலம் அளவிலான கடுதாசியில் (கெனட் கடுதாசி மிகவும் ஏற்றதாகும்) சுற்றிலும் 1/2 அங்குலம் எஞ்சுகின்றன வண்ணம் வர்ணப் பென்சில்களை தவிர்ந்த வேறு எந்தவொரு வர்ணப்பூச்சிகளையும் பயன்படுத்தி சித்திரத்தை ஆக்கலாம்.

04)சமர்ப்பிக்கின்ற சித்திரத்தின் பின்புறம் உங்களது பெயர், பிறந்த திகதி, 2017.12.31ஆம் திகதியில் வயது, சொந்த முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை செல்கின்ற மாணவர்களாயின் தரம், கல்வி கற்கும் பாடசாலை, மறைக்கல்வி பாடசாலை மற்றும் தரம் என்பவற்றை மிக தெளிவாக ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் கட்டாயமாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

05)ஆக்கங்களை தமது ஆக்கமென்பதற்கு தானும், தமது பாடசாலை அதிபர் அல்லது தமக்கு உரியதான சமய இடத்தின் கௌரவ பாதிரியார்கள் அல்லது வணக்கத்திற்குரியவர்கள் அல்லது விகாராதிபதி தேரர்கள் ஆகியோரிடத்திலிருந்து கையொப்பம் மற்றும் பதவி முத்திரை இடப்பட்டு உறுதிப்படுத்திய பின்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

06)சித்திரங்களுக்கான ஆக்கங்கள் பொறுப்பேற்கும் இறுதி திகதி 2017.09.18 ஆகும். ஆகையால் உங்களது ஆக்கங்களை அன்றைய திகதியில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்க கூடியதாக, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நத்தார் சித்திரப்போட்டி - 2017 என்று குறிப்பிட்டு, "பணிப்பாளர், கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம், இலக்கம் 155/10, காசல் வீதி, கொழும்பு 08. என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக அலுவலகத்திற்கு வந்து கையளிக்கலாம்.

07) நத்தார் அஞ்சல் முத்திரைக்காக ஒவ்வொரு தலைப்பின் கீழ் இரண்டு சித்திரங்கள் தெரிவு செய்யப்படும். ஒரு தலைப்பின் கீழ் நத்தார் அஞ்சல் முத்திரைக்காக பொருத்தமான சித்திரம் சமர்ப்பிக்கப்படவில்லையெனில் வேறு பொருத்தமான ஆக்கமொன்றை அதற்காக பயன்படுத்தப்படும். அது தொடர்பான இறுதி தீர்மானம் தீர்ப்பாளர் சபையாலும் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராலும் மேற்கொள்ளப்படும்.

08)நத்தார் அஞ்சல் முத்திரைக்கு பொருத்தமான இரண்டு சித்திரங்களும் நத்தார் வாழ்த்து அட்டைக்காகவும் ஒரு சித்திரமும் தெரிவு செய்யப்பட்ட பின்பு ஒவ்வொரு வயது தொகுதியின் கீழ் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். (ஒரு போட்டியாளருக்கு ஒரு வெற்றி பரிசு மட்டும் வழங்கப்படும்.

09)அஞ்சல் முத்திரைக்காக தெரிவு செய்யப்படும் சித்திரங்கள் முத்திரை பணிய-கத்தின் அச்சீட்டு தேவைகளுக்கும், முத்திரை தர நிர்ணயங்களுக்கேற்பவும் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளும் போது, இணங்க வேண்டுமென்பதுடன் தேவையேற்படும் பட்சத்தில் வெற்றிப்பெற்ற ஆக்கப்படைப்பாளர்கள் முத்திரை பணியகத்திற்கு சமூகமளித்தலும் வேண்டும்.

10)இதற்கு மேலதிகமாக திணைக்களத்தின் நத்தார் வாழ்த்து அட்டைக்காகவும் அரசாங்க நத்தார் வைபவத்தின் பல்வேறு தேவைகளுக்காகவும் பொருத்தமான சித்திரங்கள் தெரிவு செய்யப்படுமென்பதுடன், வெற்றிபெற்ற சித்திரங்களின் உரித்து கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் மற்றும் முத்திரை பணியகத்திற்கு உரித்தாகும்.

11)சித்திரங்களை நிபுணத்துவ தீர்ப்புச்சபையால் தெரிவு செய்யப்படுவதுடன், தீர்ப்பாளர் சபையின் தீர்மானம் இறுதி தீர்மானமாகும்.

12)வெற்றிப்பெற்ற சித்திரங்களின் பொருட்டு பணப்பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும் (முத்திரை ரூபா 15,000, நத்தார் வாழ்த்து அட்டை ரூபா 12, 500 குழு - 1 ரூபா 10,000, ரூபா 7,500, ரூபா 5,000, குழு - 2 ரூபா 12,500, ரூபா 10,000, ரூபா 7,500)

13)தெரிவு செய்யப்பட்ட விசேட ஆற்றல்களை கொண்டுள்ள சித்திரங்களின் பொருட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

14)மேற்படி அனைத்து போட்டி நிபந்தனைகளுக்கும் இணங்கி உங்களது ஆக்கங்களை அனுப்பி வைக்க வேண்டுமென்பதுடன் குறித்த நிபந்தனைகளுக்கு ஒழுங்கமையாத, சான்றுபடுத்தாத மற்றும் ஆக்கப்படைப்பாளர்கள் தொடர்பான தகவல்கள் தெளிவற்ற முழுமைப்பெறாத ஆக்கங்கள் நிராகரிக்கப்படுமென்பதை தயவுடன் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

15)மேலதிக விபரங்கள் 0112-665584 தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர் – கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்.**

## XVIII புனித யேசேவ்வாஸ்

புதிய, நல்ல கருத்துக்கள் கிடைக்காமல் போவதால் அது ஒரு இழப்பாகவே ஆகிப்போகின்றது. கூட்டுணர்வு இருந்தால் கூட்டு முயற்சி உருவாகி, கூட்டுச் செயற்பாடு ஏற்பட்டு எல்லோருக்கும் பயன்கிடைக்கும் எல்லோரும் திறமையோடு வளரமுடியும். தூய யோசேவ்வாஸ் தியான சம்பிரதாயச் சபையின் தலைவராக நியமனம் பெற்று, இன்றுபோல் இறக்கும்வரை அல்லது ஓய்வு பெறும் வரை அப்பதவியிலே இருக்கவில்லை. மாறாகச் சபையின் சட்டதிட்டங்களை எழுதி அதை ஒழுங்குபடுத்திவிட்டு தலைமைப் பொறுப்பினை "கொஸ்தா" என்ற மூத்த துறவியிடம் ஒப்படைக்கின்றார். இன்னும் அவர் எழுதிய நூல்கள், பாடல்கள் பெரிதாக மக்களால் கவரப்படவில்லை. இருப்பினும் யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் பல் திறமை பெற்றவர் என்பதை இனம் கண்டு அவரிடம் தான் எழுதியவற்றைக் கொடுத்து அதனை மெருகூட்டவும், இன்னும் புதிய ஆக்கங்களை, படைப்புக்களை உருவாக்கவும் வழிகாட்டினார். இலங்கைக்கு பணிசெய்ய வரும் போது தனியாக வரவில்லை. உடன் உழைப்பாளியையும் அழைத்துக் கொண்டு வந்தார். இலங்கையில் பணியாற்றும் வேளை காலத்துக்குக் காலம் குருக்களின் தேவையை உணர்ந்து பலருக்கு அழைப்பு விடுத்தார். இலங்கையில் ஒறற்றோரியன் சபையின் பணியை விஸ்தரிக்கும் பொருட்டு பணித்தளங்களைப் பங்கீடு செய்து கொடுத்தார். பொதுநிலையினருக்கு மட்டுமல்லாது தன்னுடன் இருந்த சக குருக்களுக்கும் தலைமைத்துவப் பயிற்சியை வழங்கினார். வழிபாட்டை முன்னின்று நடத்தவும், அதற்குத் தலைமை தாங்கவும் வேண்டிய அனைத்துச் செயற்பாடுகளையும் கொடுத்து மக்களைப் பயிற்றுவித்தார். இவரைப் பின்பற்றி, நான் வெற்றி பெறவேண்டும். அவன் தோல்வியடைய வேண்டும் என்பதல்ல, எல்லோரும் வெற்றி பெறவேண்டும் என்று நினைத்து இளையோர் கூட்டுணர்வோடு செயற்படுகின்ற போது, எல்லோர் மனதிலும் மகிழ்ச்சி இருக்கும். போட்டி இருக்கும், பொறாமை இருக்காது.

இறுதியாக இவ்வாண்டிலே நாம் நினைவு கூரும் தூய யோசேவ்வாஸிவே காணப்பட்ட கனவு, ஆன்மீக வாஞ்சை, தியாகம், அர்ப்பணிப்பு, தாழ்மை, பதவியைப், பணியினைப் பங்கீடு செய்யும் தன்மை பிறமொழியைக் கற்கும் ஆர்வம், தலைமைத்துவம் தாங்கும் பண்பு என்பவற்றை எமது வாழ்விலும் கடைப்பிடித்து தோல்விகள், சோதனைகளைத் துணிவோடு சந்தித்து நம்முடைய விடா முயற்சியால் வெற்றியாக்கிக் காட்டுவோம். எல்லோரும் ஒன்றாக இணைந்து வெவ்வேறு கருத்துக்களை உள்வாங்கி, ஒருவரை ஒருவர் அனுசரித்து ஒன்றான இணைந்து கரம் கோர்த்து கூட்டுணர்வோடு செயற்படுவோம்.

இளைஞர்களே! வாழ்க்கை வசப்படும் வரை உங்கள் போராட்டங்களை நிறுத்திவிடாதீர்கள். வாழ்க்கை வசப்பட்டுவிட்டது என்ற மமதையோடு வாழ்க்கையின் தடத்தை இழந்துவிடாதீர்கள். நீங்கள் இல்லையேல் உலகு இல்லை. உங்கள் வாழ்க்கை என்னும் "ஒளியால்" இருள் படர்ந்துள்ள அனைத்திற்கும் ஒளி ஏற்ற வாருங்கள். உறங்கியது போதும் எழுந்து வாருங்கள். நம்பிக்கை என்னும் ஒளியால், சாதனை எனும் ஒளியால் உங்களையும், பிறரையும் ஒளிர்விக்க வாருங்கள். மண்ணில் மானிடராகப் பிறந்து புரட்சிவழி அமைத்த இயேசு எனும் இளைஞனைப் பின்பற்றிய எமது மண்ணின் தூயவர் யோசேவ்வாஸின் பெயரால் வாழ்த்துகின்றோம்.

**அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்.**

## 02 இத்தாலியப் பணி....

தங்குமிடம் வசதிகள் மற்றும் முழுநேர அல்லது அறை நேர பங்குத்தள பணி புரிய சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுக்கவும் தனது அளப்பரிய பங்களிப்பை வழங்கியுள்ளார். தற்போது ஒவ்வொரு ஞாயிற்றுக்-கிழமைகளிலும் இத்தாலியில் சிங்கள மொழியில் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படுவதுடன், பல இடங்களில் மறைப்பாடசாலைகளும் நடைபெறுகின்றன. முதல் நற்கருணை அருட்சாதனத்தை பிள்ளைகளுக்கு வழங்குதல், உறுதிப்பூசுதல் அருட்சாதனம் ஆகியவற்றை வழங்குவதோடு அனைத்து விதமான திருவழிபாடுகளும் முறையாக அந்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சாதாரணமாக இந்நாட்டில் இருந்து அங்கு செல்லும் குருக்கள் மூன்று வருடங்கள் பணியாற்றுவதோடு, தமது பணிக்காலம் முடிவடைந்ததும் அவரின் இடத்திற்கு இன்னொரு குருவை பணிக்கமர்த்தும் பொறுப்பும் அடிகளாரதேயாகும்.

பாதுவாவில் உள்ள புனித அந்தோனியார் திருத்தலத்தில் வருடா வருடம் வைகாசி மாதம் 01ஆம் திகதி நடைபெறும் இலங்கை கத்தோலிக்க மக்களின் தேசிய பேரணிக்கு ஒன்று கூடும் இலங்கை றோமன் கத்தோலிக்க மக்கள் புனித அந்தோனியார் இடத்தில் காட்டும் பக்தியானது அந்நாட்டின் கத்தோலிக்க மக்களினதும் வாழ்விலும் புத்தெழுச்சியை கொணர்வதற்கு ஓர் காரணமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது. இதுவரையில் பாதுவாவில் இந்த தேசிய பேரணியானது இருபது வருட நிறைவையும் கொண்டாடியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.வண. அருட்பணி நெவில் அடிகளார் எப்போதும் பின்நோக்கிசெல்லாது முன்னோக்கி சென்று, மக்களோடு சிறந்த தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு, தேவையான சந்தர்ப்பங்களில் பயமில்லாமல் செயற்படுவதால் பல விடயங்களை இலகுவில் செயல்படுத்தற்கூடியதாக இருக்கிறது.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் குருவாக இருந்தபோதிலும் இந்நாட்டின் பல மறைமாவட்டங்களிலும் பல அபிவிருத்தித்திட்டங்கள் நடைபெற அருட்தந்தையின் பங்களிப்பு திரை மறைவில் அடிகளார் ஏற்படுத்திக் கொண்டுள்ள இணைப்பின் காரணமாகவே உள்ளது. இந்நாட்டு குருக்கள் வெளிநாடுகளுக்கு செல்வதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுக்க பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் செயற்படுத்திய வேலைத்திட்டத்தின் இணைப்பாளராக இருந்து அதனை சிறப்பாக செய்வதும் அருட்தந்தையே ஆவார். இதற்கமைய குருத்துவ வாழ்வில் ஐம்பது ஆண்டைப் பூர்த்தி செய்த ஒரு குருவை அந்நாட்டிற்கு அழைத்துச் செல்லவும், அந்த குரு திருத்தந்தையை சந்திக்கவும் வழிசமைத்துக் கொடுக்க முன்னின்று செயற்பட்டதும் வண. அருட்தந்தை நெவில் அடிகளாரே ஆவார்.

புனித அந்தோனியார் திருப்பண்டத்தை பாதுவாவில் இருந்து இந்நாட்டிற்கு கொண்டுவருவதற்கும், புனித செபஸ்தியாரின் திருப்பண்டத்தை இந்நாட்டினருக்கு பெற்றுக்கொடுக்கவும் முன்னின்று செயற்பட்டவர் வண. அருட்தந்தை நெவில் அடிகளாரே என்றால் அது மிகையாகாது.

இந்த வகையில் அடிகளாரின் இத்தாலி நாட்டில் செய்த அனைத்து விதமான சிறப்பான பணிகளையும் சிறு கட்டுரையாக அல்ல ஒரு புத்தகத்தையே வெளியிட முடியும்.பத்து வருடங்களாக "சதாஹம் தெகம" என்னும் பத்திரிகையை வடிவமைக்கும்போது பல வேளைகளில் கோழி கூவும் வரைக்கும் அது தொடர்பான வேலைகளில் ஈடுபட வேண்டியிருக்கும். இது மாதாந்த சஞ்சிகை என்ற போதிலும் அதில் வெளியாகும் செய்திகள் குறித்து சிறந்த அவதானத்துடன் இருப்பதோடு பல வேளைகளில் இதுகுறித்து இரவு வேளைகளிலேயே அடிகளார் தொடர்பை ஏற்படுத்தி தெரிவிப்பார். இது சற்று சிரமமான காரியமாக இருந்தபோதிலும் அடிகளாரின் நட்புடன் கூடிய வார்த்தைகள் அந்த கஷ்டத்தை இல்லாது செய்துவிடும் என்பதே எனது எண்ணமாகும்.

அடிளாருக்கு இறையாசீர் நிறைவாக கிடைக்க இவ்வேளையில் மனமாற வாழ்த்துகின்றேன்

**ஞானார்த்த பத்திரிகையின்**
**துணை ஆசிரியர் : திரு ஷிரான் மைத்திரி**

# மாத்தறை மாதா தேசிய திருத்தலம்
# 110வது வருடாந்த திருவிழா – 2017

## புரட்டாதி 08,09 மற்றும் 10

- ஆவணி மாதம் 31ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கொடியேற்றம்
- புரட்டாதி 01ஆம் திகதி தொடக்கம் 07ஆந் திகதி வரை தினமும் மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையும், நவநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.
- புரட்டாதி 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை ஆராதனை மற்றும் நற்கருணை பவனி, காலி மறைமாவட்ட குரு முதல்வர் அதி வண. சாள்ஸ் ஹேவாவசம் அடிகளாரின் தலைமையில் நடத்தப்படும்.
- புரட்டாதி மாதம் 09ஆம் திகதி – சனிக்கிழமை
  காலை 8.30 திருப்பலி, காலை 10.00 திருப்பலி, காலை 11.30 திருப்பலி
- புரட்டாதி 09ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை அவர்களையும் வரவேற்றல்.



**மாலை ஆராதனை: புரட்டாதி 09ஆம் திகதி சனிக்கிழமை 4.30 மணிக்கு**
திருச்செபமாலை தியானம், மற்றும் மன்றாட்டு, மாலை ஆராதனை மற்றும் மாத்தறை அன்னையின் திருச்சுரூப பவனி
யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகையின் தலைமையில்

**புரட்டாசி 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை**
காலை 4.00 திருப்பலி – சிங்களம்
காலை 5.00 திருப்பலி – தமிழ் மற்றும் சிங்களம்
காலை 6.00 திருப்பலி – ஆங்கிலம் மற்றும் சிங்களம்
காலை 11.30 திருப்பலி – சிங்களம்
மாலை 4.00 திருப்பலி – சிங்களம்
மாலை 6.00 திருப்பலி – சிங்களம்

**திருவிழா திருப்பலி : புரட்டாதி 10 ஞாயிறு காலை 8.00 மணி**
காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை மற்றும், யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆகியோரின் தலைமையில்

(Q17N3807)

- ✻ புரட்டாசி 09ஆம் திகதி சனிக்கிழமை சிலாபத்திலிருந்து (பங்கதெனிய) மாத்தறை வரை விசேட புகையிரத சேவை ஒன்று நடைபெறும்.
- ✻ புரட்டாசி 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாத்தறையிலிருந்து சிலாபம் (பங்கதெனிய) வரை விசேட புகையிரத சேவை ஒன்று நடைபெறும்.
- ✻ புரட்டாசி மாதம் 07ஆம் திகதி வியாழக்கிழமை முதல், வருகைதரும் பக்தர்களுக்காக பாடசாலைகளில் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**உங்கள் அனைவரையும் வரவேற்கின்றோம்**

திருத்தலப் பரிபாலகர் அருட்தந்தை கொலின் நிக்சன் அடிகளார் மற்றும் உதவிப் பங்குதந்தை அருட்தந்தை லசந்த பொன்சேக்கா அடிகள்
0fficial web : www.ourladyofmathara.lk
E-mail: fradministrator@ourladyofmatara.lk
frcolinm@gmail.com
தொ.பேசி 041-2222056







அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்